Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36
கதிர் : 355
ஞாயிற்றுக்கிழமை
கார்த்திகை 05 ஆம் நாள்
21 நவம்பர் 2021
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16+16
விலை : ரூ.40
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

### தமிழீழ தனியரசுக்காக வித்தாகிப்போன

# வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் ஆரம்பம்!!!

***நீதிமன்றங்கள் ஊடாக தடையுத்தரவை பெற்றது சிறிலங்கா பொலிஸ்***

யாழ்ப்பாணம், நவம்பர் 21

தமிழீழ தனியரசு அமைப்பதற்காக – தனி நாடு உருவாகுவதற்காக போராடி– சமராடி வித்தாகிப் போன மாவீரர்களை – காவிய நாயகர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது. 15



(கோப்புப்படம்: தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காலத்தில் வீதிகளில் அமைக்கப்படும் மாவீரர் வார அலங்கார வளைவு)

## மாவீரர் நாள் நினைவுகூரலுக்கு சாவ. நீதிமன்றம் தடை விதிப்பு!

தென்மராட்சி, நவ. 21

சாவகச்சேரி நீதிமன்ற எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மாவீரர் நாள் நினைவுகூரலுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. சாவகச்சேரி பொலிஸாரால் 15



## தாக்குதலாளிகள் மீது மிளகாய்த்துள் தாக்குதல்

***தலைதெறிக்க ஓடிய வன்முறைக் கும்பல்***

தென்மராட்சி, நவ. 21

கிளாலிப் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த வன்முறைக் கும்பல் மீது 15



## மாவீரர்களை நினைவு கூர்ந்தால் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படாது

*அவர்கள் பயங்கரவாதிகளாம் என்கிறார் அமைச்சர் பீரிஸ்*

யாழ்ப்பாணம், நவ. 21

போரில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர அரசு ஒருபோதும் தடைவிதிக்கவில்லை. ஆனால், போரில் உயிரிழந்த பயங்கரவாதிகளை நினைவேந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. நாட் 15

## குடும்பத் தகராறு மனைவி உயிரிழப்பு

தீ மூட்டிய சந்தேகத்தில் கணவன் கைது

யாழ்ப்பாணம், நவ. 21

தீக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற குடும்பப் பெண் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது கணவர் 15

## அடுத்த ஆண்டு அனைத்து ஓட்டோக்களுக்கும் மீற்றர்

கொழும்பு, நவ. 21

அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மூன்று மாத காலப்பகுதிக்குள் அனைத்து முச்சக் 15

## ஒற்றையாட்சியாலேயே இலங்கைக்கு இந்த நிலைமை

**தமிழர் தேசத்தை அங்கீகரித்து சமஷ்டியை வழங்கி நாட்டை முன்னேற்றுங்கள் என்கிறார் கஜேந்திரன் எம்.பி.**

கொழும்பு, நவ. 21

ஒற்றையாட்சியை கைவிட்டு, எப்பொழுதும் தமிழ் தேசத்தை அங்கீகரித்து தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அரவணைப்பதற்கு தயாராகிறீர்களோ அப்பொழுது 15



## வீடுடைத்து 13 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு

முல்லைத்தீவு, நவ. 21

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வள்ளுவர்புரம் கிராமத்தில் வீடு உடைத்து 13 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றதாகப் பொலிஸார் 15



## சிறீதரன் எம்.பி.க்கு எதிராக வவுனியாவில் ஈ.பி.டி.பி. பேரணி

- **காற்றில் பறந்த கொரோனா விதிமுறைகள்**
- **கண்டுகொள்ளாமல் இருந்த பொலிஸார்**

வவுனியா, நவ. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கு எதிராக, ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று கவனவீர்ப் 14

## உட்கட்சி மோதல் உச்சம்

***ஆளும் கட்சி எம்.பி.யின் கருத்தையே மறுதலிக்கும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு***

கொழும்பு, நவ. 21

ஆளும் கட்சிக்குள் உட்பூசல்கள் அதிகரித்து வரும் நிலையில், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி நாடாளுமன்றத்தில் தெரிவித்த 16


SAMSUNG
M 52 5G
M 32 5G
Galaxy M52 | M32 5G
Make way for the Monster
5G 11 band support
120Hz, FHD+ sAMOLED display*
Snapdragon™ Processor*
Available at:
JKOA | softlogic | softlogic MAX | SINGER | SINGHAGIRI | DAMRO | Dialog | SLTMOBITEL | Samsung e-Store | mysoftlogic.lk | Kapruka.com | Keells | And all authorized dealers island wide
Contact us
011 Samsung 7267864
Image simulated. Galaxy M52, M32 are 5G ready. Compatibility dependent upon 5G network availability. Price starting at Rs. 74,999/-.
*Features vary by devices. Prices may subject to change without prior notice. For more details, visit www.samsungsrilanka.lk/
(cr.36417)




## திருட்டுக்களுடன் தொடர்புடைய நால்வர் வவுனியாவில் கைது!

*பொலிஸார் தெரிவிப்பு*



வவுனியா, நவ. 21

வவுனியா மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் வாள்களுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களிலும், இந்த மாதமும் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைவாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளிலேயே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 18 பவுண் நகை திருடப்பட்டமை, அதனைத் தொடர்ந்து ஒக்ரோபர்மாதம் ஆச்சிபுரம் பகுதியில் 10 பவுண் நகை மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டமை, சிதம்பரபுரம் பகுதியில் பல்சர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை, தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை, இந்த மாதம் உக்குளாங்குளம் பகுதியில் ஆலயத்துக்குச் சென்ற பெண்ணிடம் 3 பவுண் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டமை மற்றும் கிளிநொச்சி உதயநகர்பகுதியில் சங்கிலி அறுக்கப்பட்டமை மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் குறித்த நால்வருக்கும் தொடர்பு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-18)

## வீதி விபத்துக்களைத் தடுக்க விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

**கிளிநொச்சி, நவ.21**

**“மஞ்சள்கோட்டில் மாணவரை பாதுகாப்போம்” எனும் தொனிப்பொருளில் வவுனியா முதல் வட்டுக்கோட்டை வரையான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் நேற்று ஆரம்பமானது.**




இந்த வேலைத்திட்டம் நேற்றுக் காலை 8 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் முன்பாக ஆரம்பமானது. “கிளி பீப்பிள்” எனும் புலம்பெயர் அமைப்பின் நிதிப் பங்களிப்புடன் கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்தின் ஒழுங்கமைப்பில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் வீதி விபத்துக்களைக் குறைக்கும் விழிப்புணர்வுப் பதாகைகளை பாடசாலை முன்பாக மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் நிறுவும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வில் மருத்துவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அண்மையில் கிளிநொச்சியில் பாதசாரிகள் கடவை ஊடாக வீதியைக் கடக்க முயன்றபோது, விபத்தில் சிக்கி உயிரிழந்த பாடசாலை மாணவிக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (எ-6)

## வீதி விபத்தில் இளைஞன் படுகாயம்

விசுவமடு - றெட்பானா சந்திப்பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

றெட்பானா சந்திப்பகுதியிலுள்ள வீதித்தடைப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விசுவமடுவில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி உந்துருளியில் பயணித்த இளைஞர் கப் ரக வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளாகிய நிலையில், மூங்கிலாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் வீதிச் சோதனை நடவடிக்கைக்காக வீதித் தடைகள் போடப்பட்டுள்ளமையால் போக்குவரத்துச் செய்வதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-19)




# நூல் வெளியீடு

சாவகச்சேரி, நவ. 21

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பரதநாட்டிய வினா விடைத் தொகுப்புநூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

அமரர் சுதர்சினி சிறிகரனின் ஞாபகார்த்தமாக இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வித்தியாலயத்தின் ஓய்வு நிலை அதிபர் வ.மேகலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவத்திரை சிவநாதன் மற்றும் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர் சிறீதேவி கண்ணதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-ரி1-159)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் நவ, 21

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் விஞ்ஞானமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன், க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதம், அல்லது உயிரியல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை Mou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து, எதிர்வரும் 2022 ஜனவரி மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 2223374 தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ய)

# மாங்குளம் மாணவர்களுக்கு போக்குவரத்து நெருக்கடிகள்

முல்லைத்தீவு, நவ. 21

முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கரிப்பட்டமுறிப்பு, புதிய கிராமம், அம்பகாமம், வன்னிவிளாங்குளம் பகுதிகளில் இருந்து மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் வருகை தருவதில் போக்குவரத்து நெருக்கடிகள் காணப்படுகின்றன. குறிப்பாக பாடசாலைமுடிந்து, மாணவர்கள் வீடு திரும்புவதற்கு பேருந்துச் சேவைகள் இல்லை என்று மாணவர்களின் பெற்றோர் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (ம-13)




# முள்ளியவளையில் கசிப்பு விற்றவர் கைதானார்

முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்துக்குட்பட்ட நீலகண்டபுரம் கிராமத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை செய்து வந்த நபரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர். கிராமத்தில் உள்ள சமூக செயற்பாட்டுக் குழுவின் தகவலுக்கு அமைய, கிராமத்தில் நீண்டகாலம் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர். மேலும், நீலகண்டபுரம் கிராமத்தில் கசிப்புப் பாவனையால் குடும்ப வன்முறைகள், சமூகவிரோதச் செயற்பாடுகள் காணப்பட்டு வரும் நிலையில் சட்டவிரோத கசிப்பு விற்பனையைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-ரி1-19)

### வடமாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு

# ‘கார்த்திகை வாசம்’ மலர் முற்றம் ஆரம்பம்





**யாழ்ப்பாணம், நவ.21**

**வடமாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் ‘கார்த்திகை வாசம்’ மலர் முற்றம் நேற்று ஆரம்பமானது.**

மலர்ச் செடிகள், மரக்கன்றுகள் காட்சிப்படுத்தலும் விற்பனையும் நேற்றுமுதல் எதிர்வரும் 26ஆம் திகதிவரை ஒவ்வொருநாளும் காலை 8.30 மணி முதல் இரவு 7மணி வரை நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மலர் முற்றத்தை யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன், யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். அதேநேரம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-20)

## போர் வெற்றிகளைக் கூறும் சின்னம் அமைக்கக்கூடாது!

### சிறிசுமண தேரர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

போர் வெற்றிகளை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படக் கூடாது என பேராசிரியர் வண. அகலகட சிறிசுமண தேரர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட சந்தஹிரு சேயா தூபி ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்த தூபி நிர்மாணிப்பு தொடர்பில் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் வெற்றியை நினைவுகூரும் வகையில் சந்தஹிரு சேயா நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது தோல்வியடைந்த மக்கள் மீது வெறுப்புணர்வைத் தூண்டும் நெருப்பு. இது ஆரம்பிக்கப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன். இதுபோன்ற செயல்களைச் செய்யக்கூடாது. குறித்த தூபி மூலமாக சிங்கள, பௌத்தர்கள் மற்றும் சில படைவீரர்களே மகிழ்ச்சி அடைவார்கள். எல்லோரும் இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். - என்று தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த தூபி, தாய்நாட்டின் ஒற்றுமைக்காக பெரும் தியாகங்களைச் செய்த இராணுவ வீரர்களை நினைவு கூரும் வகையிலும் முப்பது வருடகால போர் முடிவைக் குறிக்கும் முகமாகவும் நிர்மாணிக்கப்பட்டது என்று அரச தரப்புக் கூறியுள்ளது. (து-இ)

## இசைப்பிரியாவின் நிலைமையை நினைவுபடுத்திய சந்தஹிரு செய

கொழும்பு, நவ. 21

தெற்கில் கொல்லப்பட்ட பிரேமவதி மனப்பேரி முதல் வடக்கின் இசைப்பிரியா வரையிலானவர்களின் நிலைமைக்கு சந்தஹிரு செய நிகழ்வின்போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் சான்றாக அமைக்கின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினிகுமாரி விஜயரட்ன சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டத்தைத் தடுத்த அரசு, கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் ‘சந்தஹிரு செய’ என்ற நிகழ்வை நடத்தியுள்ளது. கொரோனாத் தொற்றுக்கு ஆர்ப்பாட்டமும், சமய நிகழ்வும் ஒன்றுதான்.

உலகில் இன்று போர்ச் சின்னங்களை அகற்றிவரும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. எனினும் இலங்கையில் இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமாக இவை கட்டப்படுகின்றன.

இலங்கையில் போரின் காரணமாக கணவர்மாரை, பெற்றபிள்ளைகளை இழந்த ஆயிரக்கணக்கான பெண்கள் உள்ளனர். குறித்த நிகழ்வுக்கு செலவிட்ட நிதியை அவர்களுக்கு வழங்கியிருந்தால், அதுவே போர் வீரர்களுக்கு செய்கின்ற கௌரவமாக இருந்திருக்கும்- என்றார். (ம-4)

## வீட்டின் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், நவ.21

உடுவிலிலுள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே வீட்டின் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தாக்குதலால் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் உடைமைகள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-20)





## ‘தடம் தந்த வரிகள்’

வவுனியா, நவ.21

முல்லைத்தீவைச்சேர்ந்த நதுநசியின் ‘தடம்தந்த வரிகள்’ கவிதை நூல் வெளியீட்டு விழா, வே.முல்லைத்தீபன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினருக்கும் நூலாசிரியருக்கும் கௌரவங்கள் வழங்கப்பட்டன. ‘அகமதி’ சஞ்சிகை அறிமுகம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர். (ய-110)

## “மிலேனியம் சிற்றி” கைது சட்டவிரோதமானது அல்ல

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, நவ.21

மிலேனியம் சிற்றி சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அன்றும் முயற்சி எடுத்திருந்தனர். மிலேனியம் சிற்றியில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டமையானது சட்டவிரோத நடவடிக்கை அல்ல என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதீட்டில் 2ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

மிலேனியம் சிற்றி பிரச்சினை தொடர்பில் பொலிஸ் அமைச்சர் கதைக்கின்றார். அச்சம்பவம் இடம்பெறும்போது நான் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதியாக இருந்தேன். கொழும்பில் ஷேப் ஹவுஸ் (பாதுகாப்பு இல்லம்) இருந்தது. ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்தும் ஆயுதங்கள் அதில் இருந்தன என்று கூறினார். அது அப்பட்டமான பொய்யாகும். இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் ஒருபோதும் ஆழ ஊடுருவி தாக்குதல் நடத்தவில்லை. விசேட படையினரே அதைச் செய்தனர். கொழும்புக்கு கிளைமோர் குண்டுகள் மற்றும் ஆர்.பி.ஜிகளை கொண்டுவருவதற்கான தேவை இருக்கவில்லை.

அந்த இடத்தில் இராணுவ அதிகாரியொருவர் ஆயுதங்களை வைத்துள்ளார். இது முறைகேடான நடவடிக்கை. இதைப் பயன்படுத்தி அப்போதைய அரசு மீது சேறுபூசப்பட்டது. தற்போது இராணுவத்தை காட்டிக் கொடுக்கின்றனர் எனப் பரப்புரை முன்னெடுப்பதுபோல அன்று மிலேனியம் சிற்றி சம்பவத்தை வைத்து ஆட்சியை கவிழ்க்கவும் இவர்கள் முயற்சித்தனர். மிலேனியம் சிற்றியில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்ட விடயத்தில் சட்டவிரோத நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை- என்றார். (எ-44)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நட்சத்திரங்களும் மின்மினிகளும்

மாவீரர் வாரம் தமிழர் தாயகம் எங்கும் இன்று ஆரம்பித்திருக்கின்றது. ஆனால், இந்த முறையும் மாவீரர்களை நினைவுகூர விடாமல் தடுப்பதற்கான சகல வேலைகளையும் இந்தக் கொரோனாச் சூழ்நிலைக்குள்ளும் பார்க்கத் தொடங்கியிருக்கின்றது அரசாங்கம்.

அதன் முதற்கட்டமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களின் ஊடாக நினைவேந்தல்களுக்கு தடை உத்தரவு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பொதுவாகவே மாவீரர் துயிலும் இல்லங்களில் மக்கள் கூடுவதைத் தடை செய்யுமாறும், நினைவுகூரக் கூடியவர்கள் என்று சந்தேகப்படுபவர்களுக்கு தடை உத்தரவு வழங்குமாறும் நீதிமன்றை பொலிஸார் கோருவது வழமையாக இருந்தது.

ஆனால், இந்தமுறை மாவீரர் இல்லங்களோடு சேர்த்து சந்தடிசாக்கில் இந்து ஆலயங்கள், தேவாலயங்கள் என்பவற்றிலும் மாவீரர் நாள் முடியும்வரை பூஜைகளைத் தடை செய்யுமாறு கோரியிருப்பதுதான் பெரும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறது. மாவீரர் நாளுக்கும் வழிபாட்டுத் தலங்களுக்கும் என்ன சம்பந்தம் என்பது எவருக்கும் புரியவில்லை. ஒருவேளை மாவீரர் நாளுக்குரிய தீபங்களுக்கும், கோயில்களிலும் தேவாலயங்களிலும் ஏற்றப்படும் தீபங்களுக்கும் பொலிஸாருக்கு வித்தியாசம் தெரியவில்லை போலும். கார்த்திகை மாதத்து தீபங்கள் எல்லாமே மாவீரர்களின் நினைவாக ஏற்றப்படுவதாகவே இலங்கை அரசாங்கம் நம்புகின்றது. இதனால்தான் கார்த்திகை விளக்கீட்டுக்குக்கூட பல இடங்களில் படையினர் இடையூறு விளைவித்ததாகக் கூறப்படுகின்றது. ஒருவேளை அரசின் அந்த ஐதீகத்திலும் ஓர் உண்மை இருக்கவே செய்கின்றது.

மாவீரர்கள் நினைவேந்துதலில் தீபத்துக்கு முக்கிய இடம் உண்டுதான். ஏனெனில் தங்களையே ஆகுதியாக்கி, மக்களுக்காக நெருப்பாகிப் போராடி வீழ்ந்தவர்களே மாவீரர்கள். அந்த மாவீரர்களின் தியாகத்தின் வெம்மையை உணரும் வகையிலும் கௌரவிக்கும் நோக்கிலும் மாவீரர் தினத்தன்று தீபங்கள் ஏற்றப்படும். அந்த ஒளியின் வடிவில் மாவீரர்களை மக்கள் உணர்வார்கள்.

"மாவீரர் நினைவாக ஈகச்சுடரை ஏற்றும்பொழுது அந்த எரியும் சுடரில், அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன். அக்கினியாக பிரகாசித்தபடி ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல ஒளிகாட்டி, வழிகாட்டிச்செல்லும் ஓர் அதிசயக் காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும்" என்று 2000 ஆம் ஆண்டு தனது மாவீரர் நாள் உரையில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்கூட மாவீரர்களை நெருப்பாக உருவகித்து அஞ்சலித்திருந்தார்.

ஆயினும் மாவீரர் துயிலும் இல்லங்களிலும், மக்களின் வீடுகளிலும், அவர்களின் மனங்களிலும் ஏற்றப்படும் தீபமே மாவீரர்களுக்கானது. மாறாக கோயில்களிலும், தேவாலயங்களிலும் கடவுள்களுக்காக ஏற்றப்படும் தீபங்கள் ஒருபோதும் மாவீரர்களுக்கான அஞ்சலிப்பாக அமையாது. நட்சத்திரங்களுக்கும் மின்மினிகளுக்கும்கூட வித்தியாசம் தெரியாதிருக்கும் இந்த அரசாங்கத்தையும், அதன் படைகளையும் என்னவென்பது? ஒருவேளை பௌத்தத்துக்கு இடையூறாக இருக்கும் இந்து மதத்தையும், கிறிஸ்தவ மதத்தையும் இனிவரும் காலங்களில் இல்லாமற் செய்வதற்கான ஓர் ஒத்திகையாகக்கூட இந்த வழிபாட்டுத் தடை கோரிய மனுவை பொலிஸார் சமர்ப்பித்திருக்கலாம். ஏனெனில் கொரோனா சுகாதார நடைமுறைகளைக் காட்டி இந்து - கிறிஸ்தவ - இஸ்லாமிய வழிபாடுகள் பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், விகாரைகளில் இன்னமும் அதே கூட்டத்தோடு வழிபாடுகள் நடக்கவே செய்கின்றன. போதாக்குறைக்கு போரில் உயிர் நீத்த படையினருக்காகவும், போர் வெற்றியைப் பறைசாற்றுவதற்காகவும் புதிய விகாரையைக் கட்டி, அதைப் பெருமெடுப்பில் கொண்டாடி மகிழ்கின்றது தென்னிலங்கை. அங்கெல்லாம் கொரோனா பரவாதா? "ஒரு நாடு ஒரே சட்டம்" என்றால் விகாரைகளுக்கு வழங்கப்படும் வழிபாட்டுச் சுதந்திரம் ஏன் இந்து - கிறிஸ்தவ - இஸ்ஸாமிய வழிபாடுகளுக்குக் கொடுக்கப்படவில்லை? இதுவரை இனங்களின் மீதான அடக்குமுறையைப் பிரயோகித்த சிங்கள - பௌத்த பேரினவாதம் இனிவரும் காலங்களில் மதங்களின் மீதும் நேரடியாகத் தனது ஆக்கிரமிப்பை நிகழ்த்தப் போகின்றது. இந்து - கிறிஸ்தவ மதத் தலங்களில் மாவீரர் நாளைக் காரணம் காட்டி வழிபாடுகளுக்குத் தடை கோருவது இதன் முதல் அடியாக இருக்கலாம்.....!



# நினைவேந்தல்களை நடத்த ஜே.வி.பிக்கு ஏன் அனுமதி?

*முன்னாள் மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி*



**முல்லைத்தீவு, நவ. 21**

**ஜே.வி.பி. கட்சியினர் யாழில், கடந்த 13ஆம் திகதியன்று "கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்தம்" என்னும் பெயரில் நினைவேந்தல் நிகழ்வொன்றை மேற்கொண்டுள்ளனர்.-இவ்வாறு ஜே.வி.பி. கட்சியினர் கார்த்திகை வீரர்களை நினைவேந்த முடியுமெனில், நாம் ஏன் மாவீரர்களை நினைவேந்த முடியாது? என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

மாவீரர் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு ரவிகரனுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையுத்தரவை பொலிஸார் நேற்றுமுன்தினம் ரவிகரனிடம் ஒப்படைத்தனர். இதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் நீதிமன்றத்தை மதிக்கின்றோம், நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்களை மதிக்கின்றோம். மாவீரர்களை நினைவுகூர்வதைத் தடுக்கும் நோக்கில் - செயற்படும் பொலிஸார் ஏன் ஏனைய நினைவேந்தல்களைத் தடுக்க முயல்வதில்லை. குறிப்பாக ஜே.வி.பியினர் தமது போராளிகளை கார்த்திகை வீரர்கள் என்றும் பெயரில் நினைவுகூருகின்றனர். இது ஏன் தடைசெய்யப்படவில்லை? இது தான் ஒரு நாடு, ஒரு சட்டமா?" பொலிஸாரின் இந்தப் பாரபட்சமான நடவடிக்கையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் - என்றார்.

(ம-246)

# சௌத்பார் கடற்கரையில் ஒதுங்கிய மர்மப்பொருள்!

மன்னார், நவ.21

மன்னார், சௌத்பார் இராணுவ முகாமுக்கு பின்புறம் உள்ள கடற்கரையில் மின் இணைப்புக்களுடன் ஒரு மர்மப் பொருள் கரையொதுங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. நேற்றுக்காலை இந்தப் பொருள் கரையொதுங்கியுள்ளது. இது தொடர்பாக கடற்படையினர் மன்னார் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து



அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அந்தப்பொருள் பல மின் சுற்றுக்களுடன் காணப்பட்ட நிலையில் விசேட அதிரடிப் படையினரால் அந்தப் பொருள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பொருள்கள் எவையும் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. அந்தப்பொருள்தொடர்பானவிசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-56)

நவம்பர் 2021

வடமாகாண மரநடுகை மாதம்

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள், அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."

—ஜோன் மூர்



# தவிசாளரை மாற்றினால் பாதீட்டுக்கு ஆதரவு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 'டீல்'

**வவுனியா, நவ. 21**

**வவுனியா வடக்கு பிரதேசசபையின் பாதீடு தோற்கடிக்கப்பட்டாலும் பொருத்தமான ஒருவரை தவிசாளராக நியமித்தால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவளிக்கும் என கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஜெ.மயூரன் தெரிவித்துள்ளார்.**

அவர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் மக்களின் இனப் பரம்பலையும், இன விகிதாசாரத்தையும் மாற்றியமைக்கும் முனைப்புக்கள் வடக்கு -கிழக்குப் பகுதிகளில் அரசாங்கத்தால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக வவுனியா வடக்கு பிரதேசம் தீவிரமாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இதனைக் கண்டித்து, எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்து வருவதுடன், எமது கட்சியினால் வவுனியா நகரில் முதன் முதலாக பெரியளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் வவுனியா வடக்கு பிரதேச நிலப்பரப்பையும், அதன் பகுதிகளையும் தமிழ் பிரதிநிதி ஒருவரே தொடர்ந்தும் நிர்வகிக்க வேண்டும் என்பதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி அன்று தொடக்கம் உறுதியாகவே உள்ளது.

அதனடிப்படையிலே முதன் முதலாக வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுக்கு உதவியிருந்தனர்.

ஆனாலும் தற்போதைய தவிசாளர் பாரபட்சமாக நடப்பதுடன், மக்கள் நலன் சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதற்கும் தடையாக உள்ளார் என்று எமது கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக தெரிவித்து வந்த நிலையில், பாதீட்டிலும் குறைபாடுகள் காணப்பட்டன. அதன் காரணமாகவே நாம் அதனை எதிர்க்க வேண்டிய நிலை உருவாகியது.

எமது கட்சி உறுப்பினர்கள் மட்டுமன்றி ஈ.பி.ஆர்.எல். எவ் கட்சியின் உறுப்பினர்கள் கூட குறித்த பாதீட்டுக்கு எதிராகவே வாக்களித்தும் இருந்தனர்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையை முறையாகக் கொண்டு செல்லக்கூடிய பொருத்தமான ஒருவரைத் தவிசாளராக நியமிக்கும் பட்சத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியா வடக்கு பிரதேசசபையின் அதிகாரம் பெரும்பான்மையினரின் கைகளுக்குத் செல்வதைத் தடுக்கும் நோக்கில் தனது ஆதரவை வழங்கும்.

கூட்டமைப்பு உறுப்பினர்களில் பலர் தவிசாளருக்கு எதிரான மனநிலையில் இருக்கிறார்கள்.

எனவே, வவுனியா வடக்கின் நிலைமையை உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொருத்தமான ஒருவரைத் தவிசாளராக முன்மொழிந்து செயற்பட வேண்டும் என நாம் கோருவதுடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது கொள்கையுடனும், பற்றுறுதியுடனும் தொடர்ந்தும் பயணிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம-110)



## விவசாய முயற்சிக்கு பயன்படும் வீதி சீரமைக்கப்படாத நிலை

வவுனியா, நவ. 21

விவசாய முயற்சிகளுக்குப் பயன்படுகின்ற முக்கிய வீதியை சீரமைக்காமல் அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் விவசாயிகளாகிய எம்மை ஏமாற்றி வருகின்றனர் என்று அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கந்தபுரம் சந்தியில் இருந்து வயல்வெளி ஊடாக முக்கொம்பன் வரை செல்கின்ற வீதி கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பயன்படுத்த முடியாத அளவுக்குச் சேதமடைந்திருந்தது.

வயலுக்கு உரம் எடுத்துச் செல்வதற்கோ அல்லது இயந்திரங்களை வயலுக்குக் கொண்டுசெல்லவோ அல்லது அறுவடைகளை வீட்டுக்கு எடுத்து வருவதற்கோ இயலாத நிலைமை உள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். மாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன்குளத்தின் கீழான முதன்மை வீதி புனரமைக்கப்படாமல் இருப்பது விவசாயிகளைப் பெரிதும் பாதித்துள்ளது. அதிகாரிகள் இது தொடர்பில் உரிய கவனமெடுத்து செயற்பட வேண்டும். வீதியைத் துரித கதியில் சீரமைப்புச் செய்து தர வேண்டும் -என்றனர். (ம-13)

## மன்னாரில் மருத்துவ முகாம்

மன்னார், நவ. 21

மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் சர்வமதத் தலைவர்களுக்கும் வழிபாட்டுத் தலங்களில் கடமையாற்றும் தொண்டர்களுக்குமான இலவச மருத்துவ முகாம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் காலை 8 மணிக்கு நடைபெற்றது.

குறித்த மருத்துவ முகாமில் மன்னார் நகர்ப் பகுதியில் வசிக்கும் சர்வமதத் தலைவர்களும் ஆலயங்களில் பணிபுரியும் தொண்டர்களும் மருத்துவ சேவையைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், மாந்தைமேற்கு பிரதேச செயலர் சி.டி .அரவிந்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்தனர். (ய-213)





## தேசிய ரீதியிலான விவாதப்போட்டி மானிப்பாய் பிரதேசசபை முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 21

இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான தமிழ்மொழி மூலமான விவாதப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் விவாத அணி பெற்றுக் கொண்டுள்ளது.

இந்த விவாதத்தில், இரண்டாமிடத்தை மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேசசபையும் மூன்றாமிடத்தை புதுக்குடியிருப்பு பிரதேசசபையும் பெற்றுக்கொண்டன.

முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மானிப்பாய் பிரதேச சபையின் விவாதக் குழுவில், அணியின் தலைவராக கந்தையா ஜெசிதன் செயற்பட்டதோடுசபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசனும் உறுப்பினர்களான அருட்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ, லோகப்பிரகாசம் ரமணன், சிவசண்முகநாதன் அனுசன் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். (ம-ரி1-27)

## ஆசிரியருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, நவ. 21

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையில் குழப்பம் விளைவித்த ஆசிரியருக்கு எதிராக பொலிஸாரிடத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பாடசாலை நேரத்தில் பாடசாலைக்குச் சென்ற ஆசிரியர் ஒருவர் (அவர் ஒரு மாணவனின் தந்தை) தனது மகனின் வகுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததுடன், ஒளிப்படமும் எடுத்தார் என்று குறித்த பாடசாலை அதிபரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் குறித்த ஆசிரியர் வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்களத்தில் விளக்கம் அளிப்பதற்காக சென்ற நிலையில், அங்கு வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் முரண்பட்டு வாய்த் தர்க்கம் புரிந்துள்ளதுடன் அதிகாரிகளுடன் அநாகரிகமாகவும் நடந்துகொண்டுள்ளார்.

இதனால், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராலும் குறித்த ஆசிரியருக்கு எதிராக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-110)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நெருங்கியவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். விரதம், வழிபாடுகளில் ஈடுபாடுகூடும். சிறப்பான விருது வரும். உறவினர்களுடன் பகை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

**இடபம்:** பரபரப்பான நாள். பணிபற்றிய திட்டம் நிறைவேறும். உங்களது முயற்சியால் போட்டி, பந்தயங்களில் அதிர்ஷ்டம் அடிக்கும். உடல்நலத்தில் கவனம் செலுத்தி நலம் அடைவீர்கள்.

**மிதுனம்** : விரும்பிய விஷயம் நடக்கும். கவலை ஒன்று தீரும். புது உத்வேகத்துடன் செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். பலநாள் கனவு ஒன்று நிறைவேறும்.

**கடகம்:** இன்று பணி பற்றிய நல்ல செய்தி வரலாம். மகிழ்ச்சிகூடும். சந்தோஷ அனுபவங்கள் ஏற்படும். ஆன்மீகப் பெரியோரைச் சந்திப்பீர்கள். தள்ளிப்போட்டுக் கொண்டிருந்த வீட்டு வேலை ஒன்றை முடிப்பீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் ஒருவருக்கு வெளிநாட்டுப் பணிக்கு அழைப்பு வரும். உங்களது முயற்சியால் மற்றவர்களின் பிரச்சினைதீரும். குழந்தைகளால் மகிழ்ச்சிவரும். கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

**கன்னி:** குழந்தைகளுக்காக அலைந்து திரிந்த பிறகே பலன் கிடைக்கும். பழைய விடயம் ஒன்றைத் தெரிவிக்கும் நபரைச் சந்திப்பீர்கள். மன நிறைவான நாள். பிறருக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** ஆரோக்கியம் பற்றிய பல நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். குழந்தைகளின்மீது அதிக நம்பிக்கை வைத்தது வீண்போகாது. வெற்றி மீதுள்ள ஆசையால் தவறான வழி யைத் தேர்ந்தெடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** சுற்றியிருப்போர் உங்களைக் குழப்ப அனுமதிக்க வேண்டாம். குடும்பத்தினர்மீது அதிக கண்டிப்பைத் திணிக்க வேண்டாம். கடந்த நாள்களில் பகையானவர்கள் வலிய வந்து நட்பாவார்கள்.

**தனுசு:**பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். நட்பு வட்டம் விரிவடை யும். பல காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த நன்மை கைகூடும். இழந்த அமைதி மீளும். மற்றவர் பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பீர்கள்..

**மகரம்:** சிறுகச்சிறுகச் சேமித்த தொகை இன்று உங்களுக்கு கைகொடுக்கும். குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்த விதம் பெருமை சேர்க்கும். வெளிநாட்டு வாய்ப்பு வரும். கலைகளில் ஆர்வம் ஏற்படும்.

**கும்பம்:** மனம் மகிழும் நாள். பணியில் புதிய உத்திகள் தோன்றும். எதிலும் நிதானப்போக்கு இருந்தாலும் மனதில் நிம்மதி உண்டு. இன்று அவசரமாக வேலைகளை முடிக்க வேண்டி வரும்.

**மீனம்:** குழப்பங்கள் நீங்கும்படியான செய்தி வரும். நண்பர்களால் சந்தோஷம் அளிக்கும் விடயம் ஒன்று நடக்கும். சுய திறமைகள் வெளிப்படுவதால் வெற்றியும், பாராட்டும் உண்டு. லாபம் எதிர்பார்த்ததைவிட கிடைக்கும்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 2021 -2022



குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். நவக்கிரகங்களில் சுபக் கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி** மகர ராசியில் இருந்து கும்பராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குருபகவான் 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதைப் பார்ப்போம்.




தன்னலம் கருதாமல் பிறர்நலம் கருதும் தன்னம்பிக்கை நிறைந்த தனுசுராசி அன்பர்களே...!

இதுவரை உங்கள் இரண்டாம் வீட்டில் அமர்ந்து நற்பலன்களை வழங்கிக் கொண்டிருந்த குருபகவான் 13.11.2021 முதல் மூன்றாம் இடமான கும்பத்துக்குப் பெயர்ச்சியாகி 13.4.2022 வரை சஞ்சரிக்க இருக்கிறார். உங்களின் சுகஸ்தானமான மீன ராசிக்கு அதிபதி குருபகவான். அவர் இப்போது மூன்றாம் வீட்டில் சென்று மறைவது அத்தனை நல்ல பலன்களைத் தராது. கொஞ்சம் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டிய காலகட்டம் எனலாம்.

இந்தக் காலகட்டத்தில் பிறர் சொல்வதை நம்பி ஒரு காரியத்தில் இறங்கக்கூடாது. ஆசை வார்த்தைகளுக்கு மயங்க வேண்டாம். குடும்பத்துக்குள் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படும் என்பதால் முடிந்தவரை விட்டுக்கொடுத்துப்போவது நல்லது. சகோதர உறவுகளுடன் பேசும்போது கொஞ்சம் பதற்றம் இல்லாமல் பேசவும். தேவையற்ற உரசல்கள் வந்துபோகும்.

பொதுவாக குருபகவான் ஸ்தானபலத்தால் நற்பலன்கள் தராதபோது தன் பார்வைப் பலத்தால் நல்ல பலன்களை வாரி வழங்குவார். உங்கள் ராசிக்கு ஏழாம் வீட்டை குருபகவான் பார்ப்பதால் மறைந்திருந்த உங்கள் திறமைகள் வெளிப்படும். முக்கியஸ்தர்களின் அறிமுகம் கிடைக்கும். வாழ்க்கைத்துணையிடம் நீங்கள் காட்டும் அன்பு ஒன்றுக்குப் பத்தாகத் திரும்பிக் கிடைக்கும்.

குருபகவானின் பார்வை ஒன்பதாம் வீட்டின் மீது படுவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். கொடுத்துத் திரும்ப வராத கடன்கள் வசூலாகும். நீங்கள் வாங்கியிருந்த கடனைத் திரும்பச் செலுத்துவீர்கள். குடும்பத்தில் தந்தையுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். பிள்ளைகளும் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். மகன் அல்லது மகளுக்கு எதிர்பார்த்த கல்லூரியில் படிக்க இடம் கிடைக்கும். அவர்களின் திருமணமுயற்சிகளும் பலிதமாகும். நண்பர்கள் பணம் கேட்டுத் தொந்தரவு செய்வார்கள். கொடுப்பதற்குமுன் வாழ்க்கைத் துணையோடு ஆலோசித்துச் செய்யுங்கள். குருபகவான் 11ஆம் வீட்டைப் பார்ப்பதால் செயல்கள் தடையின்றி நிறைவேறும். பாராட்டுக்கள் குவியும். மூத்த சகோதரர் உதவுவார். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். அரசியல்வாதிகள் மேலிடத்தை அனுசரித்துப் போவது அவசியம். பயணத்தின் போதும் கூடுதல் கவனம் தேவை.

**13.11.2021 முதல் 30.12.2021 வரை**

குருபகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் செல்வதால் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும். புதிய சொத்துகள் வாங்குவீர்கள். பழைய கடன் பிரச்சினைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் நற்பெயர் ஏற்படும். வீட்டில் சுபகாரியங்கள் நிகழும். புதிய வாகனம் வாங்கும் வாய்ப்புக் கூடிவரும்.

**31.12.2021 முதல் 02.03.2022 வரை**

சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் காலகட்டத்தில் புகழ், கௌரவம், சொல்வாக்கு, உயரும். பிதிர்வழி சொத்துக்கள் கைக்கு வரும். வழக்கு சாதகமாகும். வேற்றுமதத்தவர்கள், வெளிநாட்டிலிருப்பவர்களால் உதவி கிடைக்கும்.

**02.03.2022 முதல் 13.04.2022 வரை**

குருபகவான் தன் நட்சத்திரமான பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் இந்தக் காலகட்டத்தில் நற்பலன்களே மிகுதியாக நடக்கும். வீடுகட்டும் வேலையை எடுத்துச் செய்வீர்கள். இழந்த பணம் திரும்பக் கிடைக்கும். முடிக்கமுடியாமல் இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாகும். தடைப்பட்டுக்கொண்டிருந்த சுபகாரியங்களை மகிழ்ச்சியாக செய்துமுடிப்பீர்கள். தாய்க்கு ஏற்பட்டிருந்த ஆரோக்கிய குறைவுகள் நீங்கும். புதிய வேலைக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்தக் குருப்பெயர்ச்சி வேலைச்சுமை, அலைச்சல் ,சிறுசிறு ஏமாற்றங்களைத் தந்தாலும், உங்களைப் பக்குவப்படுத்தி வெற்றி பெற வைக்கும்.**




# காதலியுடன் பேசியதால் இளைஞன் அடித்துக்கொலை

## குடும்பத்தினர் வெறிச்செயல்

குஜராத் மாநிலத்தில் பட்ரா தாலுகா சோகாரி கிராமத்தைச் சேர்ந்த 20 வயதான இளைஞர் ஒருவர் அந்தப்பகுதியைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்து வந்துள்ளார். ஆனால், இந்தக் காதலுக்குப் பெண்ணின் குடும்பத்தினர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். தனது மகளுடனான காதலை விட்டுவிடுமாறும் இல்லையேல் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் எச்சரித்திருந்தனர். இந்த நிலையில், குறித்த இளைஞர் நேற்றுமுன்தினம் காதலியை தனியாகச் சந்தித்துப் பேசியுள்ளார். தனது மகளிடம் பேசுவதை அறிந்த குடும்பத்தினர் நால்வர் சேர்ந்து அவருக்குப் புடைவை அணிவித்து மரத்தில் கட்டி வைத்து கட்டைகளால் கடுமையாகத் தாக்கியுள்ளனர். மரத்தில் கட்டப்பட்ட நிலையில் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட குறித்த இளைஞரை மருத்துவமனையில் சேர்த்த போது ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பள்ளிகளில் பாலியல் சீண்டல்கள் மற்றுமொரு மாணவி தற்கொலை

கரூர் வெண்ணைமலை பகுதியில் தனியார் பள்ளியில் படித்து வந்த 12ஆம் வகுப்பு மாணவி வீட்டில் தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

பாடசாலை சென்று மாலை வீடு திரும்பிய நிலையில் வீட்டில் யாரும் இல்லாதவேளை மாணவி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளமை அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இறப்பதற்கு முன்பு அவர் எழுதி வைத்துள்ள கடிதம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் "பாலியல் தொல்லையால் சாகும் கடைசிப் பெண் நானாகத்தான் இருக்கவேணும். என்னை யார் இந்த முடிவை எடுக்வைத்தார்கள் என்று சொல்லப் பயமாக உள்ளது. என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் கோவையில் பாலியல் துன்புறுத்தலால் மாணவி ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தமிழ்நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்த நிலையில் தற்போது இந்த மாணவி உயிர்மாய்த்துக் கொண்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

# பிளவுபடாத கொள்கையை பின்பற்றுகின்றதாம் அரசு!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ.21

எமது அரசு பிளவுபடாத வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. பிளவுபடாத வெளிநாட்டுக் கொள்கை இந்த காலத்துக்குப் பொருத்தம் இல்லை என்ற நல்லாட்சி அரசின் கொள்கையை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதேநேரம் ஜீ.எஸ்.பி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டின் அபிவிருத்திக்குத் தொடர்ந்து கடனைப் பெற முடியாது. எமது மூலதனங்களை அதிகரித்துக்கொள்ளவேண்டும். எமது மூலதனங்களை பெற்றுக் கொள்வதற்கு நான்கு முறைகள் இருக்கின்றன. முதலீடுகள், வியாபாரம், சுற்றுலா, வெளிநாட்டு செலாவணி ஆகிய துறைகள் மூலமே எமது மூலதனங்களை அதிகரித்துக்கொள்ள முடியும்.

அவற்றை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எமக்கும் அதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. நாங்கள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஜீ.எஸ்.பி எமக்கு கிடைக்காவிட்டால் பாதிக்கப்படுவது புடைவை கைத்தொழில் பேட்டைகளாகும். புடவை கைத்தொழிற்சாலைகளில் 95வீத மானவர்கள் பெண்களே தொழில் புரிகின்றனர். எமது நாட்டின் மீன் வளங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வது ஜீ.எஸ்.பி. ஊடாகவே. அதனால் ஜீ.எஸ்.பி சலுகையை எமது நாட்டுக்கு இல்லாமலாக்குவது எந்த வகையிலும் நியாயம் இல்லை.

ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அதில் எது சரியானது என்பதை தீர்மானித்து தீர்வு காண்பதே தற்காலத்துக்கு பொருத்தமானது என்றே நாங்கள் நம்புகின்றோம். அனைத்து நட்புறவு நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். ஒரு நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவது இலங்கையின் கொள்கை அல்ல - என்றார்.

(எ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1944



மறைவு 19 . 11 . 2021

### சின்னையா அழகானந்தம்

மாவிட்டபுரம் வீமன் காமத்தைப் பிறப்பிடமாகவும், ஆச்சியடி லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா அழகானந்தம் நேற்று முன்தினம் (19.11.2021) வெள்ளிக்கிழமை இறை பதம் அடைந்துள்ளார்.

அன்னார் நாகமுத்து - சின்னையா தம்பதிகளின் அன்பு மகனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், சுதர்ஷன், சுகிர்தன், சுபத்திரா, தர்மிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துளசி, சரண்யா, இளமாறன் ஆகியோரின் மாமனாரும், அற்புதமூர்த்தி, பாலசுப்பிரமணியம், கமலாதேவி கிருஷ்ண பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், துளசிதர்ஷன், விவேகா, ஆகர்ஷன், ஆயுஷன், ஆரவ்ஷன், சுபமாறன், கருணிகா ஆகியோரின் அன்புப் பேரனும், கமலாம்பிகை, கமலேஷ்வரி, இராசநாயகம், கலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(cr.36434) (2.6) 077358 0922, 077843 5267

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மயிலிட்டி B.C.றோட், சாந்த சந்தி அருகாமை யில் மெயின் றோட்டுடன் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். Call

(CS 18089 B) 1-6

076 7558 606, 077 015 0353

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக் கட்டுவன் வீதியில் 7 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். (சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500 M தூரம்)

077 6234 204, 077 2880 152
076 8909 259

(CS 18089 A) 1-6

## விண்ணகவாழ்வின் முதலாம் ஆண்டு நினைவாக...

தோற்றம் 13 . 05 . 2013





தோற்றம் 06 . 09 . 2015

மறைவு 21.11.2020

மறைந்த மழலைகள்

சேஸ்பியர் சர்வின் சேஸ்பியர் மெர்வின்

""ஆண்டவரின் இல்லத்தில் நாம் நெடுநாள் வாழ்ந்திருப்போம்"

இரக்கமுள்ள தந்தையே உம்மிடம் அழைத்துக்கொண்ட எம் மழலைகளை என்றும் உம்மோடே வான்வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

மண்டைதீவு, 2 ம் வட்டாரம்.

நினைவுகளுடன் குடும்பத்தினர்.

(CR 5969) 1-6

## நெஞ்சைவிட்டகலாத 15ஆம் ஆண்டு நினைவலைகள்

வையத்தின் மைந்தனாக 16 . 08 . 1963



தெய்வத்தின் சொந்தமாக 06 . 12 . 2006

அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

(முன்னாள் ஆசிரியர் யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை)

ஓடி மறைந்தது பதினைந்து ஆண்டுகள்
வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
எம்முன் என்றும் இறையாகி நின்று
எமக்கு நல்லனவே தந்திடுவீர்
ஓம் சாந்தி!

நாவற்காடு, வரணி.

அன்பான மனைவி திலகவதி மற்றும் குடும்பத்தினர்.

(CS 41214)1-6

## மரண அறிவித்தல்



### மகாலக்ஷ்மி நவரத்தினம்

உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலக்ஷ்மி நவரத்தினம் (சின்னக்கிளி) கடந்த (19.11.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், கனகாம்பிகை (Australia), திருச்செல்வம் காலஞ்சென்ற சிவசக்திவேல், லோகநாயகி (கிச்சி), ஈஸ்வரவேல் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம் (Australia), காலஞ்சென்ற கருணாகரன், சிவாஜினி (லக்கி-UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அம்பிகைபாலன், மயூரன், செந்தூரன், கார்த்திகன், மாதங்கி ஆகியோரின் பெரியம்மாவும், சரவணன், அபிராமி ஆகியோரின் மாமியும், அங்கஜன், அட்சரன், அபிநயா, அகரன், மகிழன் ஆகியோரின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஈஸ்வரவாசம்" அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல் : குடும்பத்தினர். 077 627 1386 021 2240 188

(CS 18092 ) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 04 . 1930



மறைவு 18 . 11 . 2021

### திருமதி நாகேந்திரம் சீதாலட்சுமி

மடத்தடி, கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி நாகேந்திரம் சீதாலட்சுமி அவர்கள் கடந்த (18.11.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தம்பு நாகேந்திரம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான போஜன், கணேசன் மற்றும் தினகரன், தயாளன், திருமதி ஜெயந்தி ஸ்ரீபதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (19.11.2021) வெள்ளிக்கிழமை 556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: நா.தயாளன் (மகன்)

(CS 41215)1-6

## அறிவித்தல்

பிட்டியெல்லை அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 12.12.1994-31.12.2021 வரையான காலப் பகுதிக்கான கணக்குகள் தற்போது கணக்காய்வு செய்யப்படுவதனால் இக் காலப் பகுதியில் இடம் பெற்ற சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் வரவு செலவுகள் தொடர்பான தகவல்கள் பேரேடுகள் மற்றும் ஆவணங்கள் ஏதும் இருப்பின் அவற்றினை 29.11.2021 ம் திகதிக்கு முன்னர் சங்க நிர்வாகத்திடம் வழங்கி கணக்காய்விற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கடந்த கால நிர்வாக சபையினர்கள் மற்றும் சங்கத்தின் அங்கத்தவர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்-க.பரமேஸ்வரன் T.P:0764775673

செயலாளர்-அ.புஸ்பானந்தராசா T.P:0762191650

(CS 41208)1-6

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 . 12 . 1952 | 20 . 10 . 2021 |



கடந்த (20.10.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த நீலிப்பந்தனையை பிறப்பிடமாகக் கொண்ட எமது குடும்பத்தலைவர்

அமரர்

### சபாரத்தினம் சண்முகரத்தினம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

பரந்து விரிந்த நெற்றியில் பால்வெண்ணீறு
சிரசின் அடையாளமே உம் புன்சிரிப்பு
நிமிர்ந்த நடை நேரிய பார்வை காரை வாழ்மக்களுக்கு
சீரிய நற்குணமிக்க தபாலதிபரானீர்
குல வழித்தோன்றல்களுக்கு "கொழும்பு மாமாவானீர்"
திண்ணபுரத்தானின் எண்ணம் அறிந்தீர்
எண்ணப்படி அவன் பாதம் அடைந்தீரோ

அன்னாரின் 33ஆம் நாள் நினைவஞ்சலி (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும், அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும், பத்திரிகையில் பிரசுரம் செய்த கிழவன்காடு கலாமன்றத்தினருக்கும், ஏனைய உதவிகளையும் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பயிரிக்கூடல், காரைநகர்

குடும்பத்தினர்

(CS 41199)1-6

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 21.03.1938 இறப்பு 19.11.2021

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **கிஷ்ணவேணி** அவர்களின் தந்தையார்

### முருகேசம்பிள்ளை விஸ்வநாதன்

அவர்கள் 19.11.2021 அன்று காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம்- காரைநகர்.

(CR 5967) 1/6

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தால் இன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த குருதிக் கொடை முகாம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஒ,-5)

## மரண அறிவித்தல்



தோற்றம் 06.01.1954 மறைவு 19.11.2021

### வீரகத்திப்பிள்ளை சிவகணேசன்

பருத்தித்துறை தம்பசிட்டி மலையன் தோட்டத்தை பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை சிவகணேசன் அவர்கள் கடந்த (19.11.2021) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், உதயகுமாரியின் அன்புக் கணவரும், சிவபாலசுந்தரம்(Canada), இந்திராணி அம்மா (Londan) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காண்டீபன் (லண்டன்), நந்தகோபால் (லண்டன்), நந்தகோபன் (லண்டன்), லக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரஞ்சனா (கனடா), வேலும்மயிலும் (லண்டன்) அமரர் நாகபூரணம் மற்றும் பரமேஸ்வரன், பத்மாவதி, விக்னேஸ்வரன் (கனடா), சந்திரவதனா, அமரர் ஜெகதீஸ்வரன், ரதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்துனி பிரியஷாதினி (லண்டன்), தக்ஷாயினி (லண்டன்), சிந்துஷா ஆகியோரின் மாமனாரும், அனன்யா வின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

(CS 18080) 1-6

# மரண அறிவித்தல்

## இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை

(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர், முன்னாள் நகரசபை தவிசாளர் சாவகச்சேரி - 2011 - 2015)



பிறப்பு 01.03.1948

இறப்பு 13.11.2021

யாழ். சாவகச்சேரி கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை அவர்கள் 13.11.2021 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இறப்பியேல் கத்திரினா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆசிர்வாதம் பினோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செபமாலையம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மரிய இராபேல் (பிரான்ஸ்), மரிய கத்தரின் (ரஞ்சினி), மரிய அருள்ராணி (றமா), மரிய ஜெறோம், மரிய நியூட்டன் (லண்டன்), மரிய பெனடிற்றா (லண்டன்), மரிய நிறோயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வேஜினி (பிரான்ஸ்), தர்மராஜா, நிமல்ராஜ் (கட்டார்), மரிய கவி, மரிய ஜெயரமணி (லண்டன்), நிமல்ராஜ் (லண்டன்), ஜெயசுதா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான மரிய றோஸ், சிங்கராசா மற்றும் மொனிக்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மரிய அருளானந்தம் மற்றும் பிரான்சிஸ்கா, காலஞ்சென்றவர்களான அகுஸ்தீன், பொன்ராசா மற்றும் றோஸ்மேரி, சூசையம்மா, வேதநாயகம், காலஞ்சென்றவர்களான தேவதாஸ், விசிறித்தா மற்றும் மரியபாலா, கிறிஸ்தோப்பர், எமரஞ்சியா, காலஞ்சென்ற மேரி அஞ்சலா மற்றும் மேரி சறோசா, காலஞ்சென்ற நேசராசா மற்றும் மேரி யசிந்தா. உதயகுமார், தயாளராசா, சாள்ஸ் றேபேட் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மரிய பேணாட் (JP). மரியதாஸ் (கனடா), காலஞ் சென்ற மரிய அல்போன்ஸ், மரிய அருள்தாஸ் (கனடா), மரிய ஞானசீலன் (சுவிஸ்), மரிய அன்ரனி, காலஞ்சென்ற மரிய யேசுதாசன் (இத்தாலி), மரிய பொன்கலன் (பிரான்ஸ்), மரிய நவசீலன் ( இத்தாலி), மரிய அல்வீனா, ஞானேஸ்வரி, சந்திரராசா (பிரான்ஸ்), தேவபரன், தேவபாலன் (பிரான்ஸ்), தேவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மரிய கொறற்றி (சுவிஸ்), மரிய அன்ரனி (இத்தாலி), மரிய நாயகி (சுவிஸ்), மரிய அஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், மரிய அனுஸ்ரன், மரிய நிதர்சினி (லண்டன்), மரிய வினுஸ்ரன், மரிய நிதர்சன் (லண்டன்), அன்சன் (லண்டன்), நிக்கில், அன்றுசன் (லண்டன்), ஏஞ்சலினா (லண்டன்), நிசாறா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.11.2021) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கச்சாய் வீதி, சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் நடைபெற்று புனித லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| நிறோயன் | (றிறு | - 077 844 6284 - மகன்) |
| மரிய அருள்ராணி | (றமா | - 077 637 5855 - மகள்) |
| மரிய கதரின் | (ரஞ்சினி | - 076 032 4962 - மகள்) |
| மரிய நியூட்டன் | | - 0044 7737 030817 - மகன்) |
| பெனடிற்றா | | - 0044 7428 486848 - மகள்) |

தகவல்: குடும்பத்தினர்

(cs.36439) (2.6)

# பைஸர் தடுப்பூசி ஆபத்து!

## திஸ்ஸ எச்சரிக்கை

இலங்கையில் பைஸர் தடுப்பூசி செலுத்துவதன் ஊடாக, தேவையற்ற பாதிப்புக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், வைரஸ் தொடர்பான விசேட நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார்.

'பைஸர் தடுப்பூசியின் செயற்பாடு தொடர்பில் விஞ்ஞான ரீதியில் சந்தேகம் நிலவுகின்றது. பைஸர் தடுப்பூசியானது, கொரோனா பரவலுக்கு பின்னரான காலத்திலேயே முதல் தடவையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. எனக்கு இந்த தடுப்பூசி குறித்து சந்தேகம் நிலவுகின்றது.' - என்றார்.

(எ-இ)


# சேவை நலன் பாராட்டும் மணிவிழாவும்




ஆசிரியை திருமதி **தவயோகமலர் உதயகுமார்** SLTS -I

பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி - ஆசிரியர்

உப அதிபர்

**யா/ தொல்புரம் அ.மி.த.க.பாடசாலை**

**சேவைக்காலம்:**

- யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயம் - 17.08.1988 - 10.02.2010 வரை
- யா/ தொல்புரம் அ.மி.த.க.பாடசாலை - 11.02.2010 - 21.11.2021 வரை

**சேவைநலன் பாராட்டு**

கடமையே கண்ணாய் கருத்தொருமித்து
அளப்பரிய சேவையாற்றி இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை
சேவையிலிருந்து ஓய்வுபெறும் மணிவிழா
நாயகி திருமதி தவயோகமலர் உதயகுமார்
அவர்கள் பல் வளமும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations Congratulations

*வாழ்த்துவோர்:* **ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

**யா/ தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை**

(cs.41130) (2.6)

# வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் - மருதனார்மடம் சந்தியில் இருந்து உரும்பிராய் வீதியில் (புகையிரத கடவையில் இருந்து 500 மீட்டர் தூரத்தில்) பிரதான வீதிக்கு மிக அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. 3 – அறைகள், 1 - குளியல் அறை, 1 - வரவேற்பு அறை,1 - பெரிய விறாந்தை 1 – கிணறு. 2 - மலசலகூடம்

தொடர்பு தொலைபேசி இலக்கம்: **+94 77921 3830** (cs.41188) (2.6)

# உடன் வேலை வாய்ப்பு

**யாழ்நகரின் பிரபல்ய வர்த்தக நிலையத்தில்** கீழ்வரும் தகைமையும் ஆர்வமும் கொண்ட 22 - 35 வயதுடைய

**பெண்களுக்கான உடன் வேலைவாய்ப்பு**

1. கல்வித் தகைமை க.பொ.த (சா/த)
2. வேலை நேரம் : முற்பகல் 11.00 மணி - இரவு 9.00 மணிவரை (வாரத்தில் 6 நாள்கள்)
3. கணினி அறிவும் முன் அனுபவமும் விரும்பத்தக்கது
4. சம்பளம் : ரூபா 20.000 முதல் 25000 வரை (பேசித் தீர்மானிக்கப்படும்)

நேர்முகத் தேர்வு: வார நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 4.00 மணிவரை

**இல.175, K.K.S. வீதியில் உள்ள வியாபார நிறுவனத்தில் நடைபெறும்**

(cs. 41209) (2.6)

# இலவச கற்கைகள்
# FREE ON-LINE/DIRECT CLASSES
## புதிய பிரிவுகள்

- DIPLOMA IN ENGLISH / SPOKEN ENGLISH
- DIPLOMA IN SINGALAM
- DIPLOMA IN ICT
- DIPLOMA IN PSYCHOLOGY & COUNSELLING

★ காலம் : 3 மாதங்கள் ★ சான்றிதழ் கற்கைகள்

**ஆரம்பம் : 27.11.2021, 10.00 AM**

**குறிப்பு:** கற்கைகளை பூர்த்தி செய்த Zoom, Direct Class (31,32) பிரிவு மாணவர்கள் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளவும்.

**IPS CAMPUS** *to your future*

**ON-LINE EDUCATION UNIT**
**Jaffna.**
**021 434 0229 / 076 685 2529**

(CS 18086) 1-6



அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த நகைகள் அறுதியாக போகின்றனவா?

எந்தவொரு வங்கியில் அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா.23,000/= இற்கு மேல்**

**70 சத அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு **0767 888 222** இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்

**ஏராளமான விசேட சலுகைகள்**

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 077 1201856 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 076 9914642 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாழைச்சேனை | 077 8151938 | ஓட்டுசுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |
| கிண்ணியா | 077 1201853 | களுவாஞ்சிகுடி | 077 1201864 |
| மஹியங்கனை | 077 1201862 | உடப்புவ | 077 1201851 |
| கல்பிட்டி | 076 1605803 | வேலணை | 076 9940273 |
| மஸ்கெலியா | 076 0909822 | | |

(CR 36428)

# பணியாளர் தேவை

வவுனியாவில் இயங்கும் பிரபல **மாபிள்** (Tiles) **காட்சி அறைக்கு** பின்வரும் பணியாளர்கள் தேவை.

***களஞ்சிய காப்பாளர்** ***விற்பனை பிரதிநிதிகள்**

(தங்கி நின்று கடமைபுரிவோருக்கு தங்குமிட வசதி வழங்கப்படும். தங்களின் சுயவிபரகோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மனிதவள முகாமையாளர்

இல.58, கண்டி வீதி, வவுனியா.

(cs36436) (2.6)

# நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தனியார் துறையினர் வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.**

(யா/ கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(CS 18026) 1-6

# உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

# தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
**இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
**ஒரு சதுர அடி - 45 ரூபா**

**077 334 1281** (m.17813) (2.6)

## ஊர் கோழிகுஞ்சுகள்

நல்ல இன 1 நாள் கோழி குஞ்சுகளும் பெரிய வான் கோழிகளும் விற்பனைக்கு.

**077 332 2433** (cs.41184) (2.6)

## விற்பனைக்கு

யாழ். போதனா வைத்தியரின் புது WEGO MOTERCYCLE விற்பனைக்கு உடன் உண்டு.

**071 764 8884** (cs.41200) (2.6)

## மருந்தாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படும் மருந்தகமொன்றிற்கு (Pharmasist) மருந்தாளர் தேவை.

**077 081 2893** (cs.41212) (2.6)

## Diploma in CAKE Making

புதிய வகுப்புக்கள் 27ஆம் திகதி **November** மாதம் ஆரம்பமாக உள்ளது இணைய விரும்புபவர்கள் உடனடியாக எங்களை அழைக்கவும் **0774737737**
(cr.36433) (2.6)

## வீடு வாடகைக்குண்டு

கிளிநொச்சி செல்வாநகர்சந்தியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**077 604 0373** (cs.0092) (2.6)

## வேலைவாய்ப்புக்கள்

வவுனியாவில் இயங்கிவரும் மல்ரிமாக்கற் ஒன்றிற்கு கொம்யூட்டர் தெரிந்தவர் மற்றும் பொது வேலைக்கு பணியாளர் இருபாலரும் உடன் தேவை.
(cs.00923) (2.6)

**077 604 0373**

## பணியாளர்கள் தேவை

**யாழ். கஸ்தூரியார் வீதியில் இயங்கும் பிரபல நகை விற்பனை காட்சியறைக்கு** பணியாளர்கள் தேவை.
(cr.36438) (2.6)

**076 658 0661**

## தேவை

கொழும்பு பொரலஸ் கமுவையில் உள்ள எங்களது கார் சேர்விஸ் நிறுவனத்துக்கு வாகனம் கழுவுவதற்கானவர்கள் (body Wash Workers) உடனடியாகத்தேவை. வயது 18 இக்கு மேற்பட்ட வராக இருக்க வேண்டும். அனுபவம் அற்றவர்களாயேனும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சி கரமான சம்பளத்துடன் தங்குமிட வசதிகளுடன் சலுகைகளும் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு:
(cr.36438) (2.6)

**077 721 9229, 077 735 2332, 076 364 5021**

## உடனடி வேலைவாய்ப்பு

1. **அலுவலக உதவியாளர்**
2. **பணம் வசூலிப்பாளர்**
3. **சாரதி** (வெளிமாவட்டம் சென்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது)

(cs.412021) (2.6)

தொடர்புகொள்ளவும்
**077 965 2001**

## வீடு விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரநிலைய வீதியில் பிரதான பஸ்நிலையம் போதனாவைத்தியசாலை என்பவற்றுக்கு மிக அருகாமையில் 15 பேர்ச் காணியில் நான்கு அறைகள், சமையலறை, பெரிய விறாந்தை மற்றும் முன்பக்கம் சிறிய விறாந்தை இரண்டு குளியலறைகளுடன் கூடிய ஒரு பெரிய வீடு விற்பனைக்குண்டு

(cs.41170) (2.6)
தொடர்பு: **076 355 1082**
**071 907 1540, 077 929 1959**

## பூமாலை கட்டுபவர்கள் தேவை

**நல்லூரில் இயங்கும் பிரபல பூக்கடைக்கு பூமாலை கட்டுவதற்கு** பணியாளர்கள் தேவை.
(cs cs 41202)

தொடர்பு: **077 348 4932**

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 07 . 1985



இறப்பு 17 . 11 . 2021

### அமரர் சிவபாலதாஸ் குகசேந்தன் (சேந்தன்)

சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், துன்னாலை மத்தி துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலதாஸ் குகசேந்தன் (சேந்தன் ) கடந்த (17.11.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாலதாஸ் மற்றும் ராஜ ராணி தம்பதியரின் அன்பு மகனும், பௌத்திரியின் அன்புச் சகோதரனும், கஜேந்தி ரனின் பாசமிகு மச்சானும், மிதுன், மயூரியன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துன்னாலை மத்தி,**
**துன்னாலை.** (cs.41205) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வீடு வாடகைக்கு தேவை

உங்கள் வீடு வாடகைக்கு கொடுக்க இருந்தால் அழைக்கவும், சிறந்த முறையில் தீர்த்து தரப்படும்

RR Estate Agent **0774737737**

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உதவி அத்தியட்சகராக கொழும்பில் தொழில்புரிபவர் 32 வயது, பூரம் செவ்வாய் குற்றமற்றவர் (சூரி + செவ் 5ல்) Phd தொடர்பவருக்கு உயர்கல்வித் தகைமையுடைய 25 -31 வயதுக்குட்பட்ட பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். (MBBS, IT, விரிவுரையாளர், வெளிநாடும் விரும்பத்தக்கது) மேலதிகத் தகவலகளுக்கு:

**077 359 9597** (acs.17641) (2.6)

## Show Room Administrator தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள **பிரபல அழைப்பிதழ் ஏற்றுமதி நிறுவனத்துக்கு** கணினி அனுபவமுள்ள Administrator தேவை. A/L or Diploma Level தகைமையுடன் விண்ணப்பிக்கலாம்.
(cs.41168) (2.6)

**078 843 5093**

## வேலையாள்கள் தேவை

**யாழ் மாநகர எல்லைக்குள்** அமைந்துள்ள **உணவகம்** ஒன்றிற்கு சமையலாளர், **சமையல் உதவியாளர், Delivery Boy** மற்றும் **பராமரிப்பாளர்** தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். **ஆண்,** பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(cs.41164) (2.6) **077 314 7580**

## பெயர் மாற்றம்

வேலணைமேற்கு, வேலணை 8 ஆம் வட்டாரம் என்னும் முகவரியில் வசிக்கும் **கணபதிப்பிள்ளை சண்முகநாதன்** ஆகிய எனது பெயரை **கணபதிப்பிள்ளை குணசிங்கம்** என மாற்றம் செய்துள்ளேன் இனிவரும் காலங்களில் இவ்வாறே சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் இலங்கை ஜனநாயகச் சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**கணபதிப்பிள்ளை குணசிங்கம்**
(cs.41197) (2.6)

# குடிதண்ணீர் இணைப்புக்காக பூநகரியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, நவ. 21
பூநகரியில் இலவச குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 25ஆம் திகதியன்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் முன்னெடுக்கப்படவுள்ளது. பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பள்ளிக்குடா நான்காம் கட்டைப் பகுதி, மட்டுவில் நாடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, அத்தாய் கொல்லக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவு, செல்லியாதீவு ஆகிய பிரதேசங்களிலேயே மேற்படி நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளிலும் எதிர்வரும் வியாழக்கிழமை உத்தியோ கத்தர்கள் வீடுவீடாக வருகை தரவுள்ளனர். எனவே பிரதான நீர் விநியோக குழாயிலிருந்து 25 மீற்றருக்குள் புதிய நீர் இணைப்பு தேவைப்படும் பொது மக்கள் விண்ணப்பப் படிவத்தை பெற்று வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ம-214)

## காணி விற்பனை

காங்கேசன்துறை குருநாதர் வீதியில் றோட்டிலிருந்து 3 ஆவது காணி ($2\frac{1}{2}$ பரப்பு) உடனடி விற்பனைக்குண்டு.
(cr.36432) (2.6)

**076 726 8490**

## தேவை

**வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு** அனுபவம் உள்ள **சுத்திகரிப்பாளர்கள்** தேவை. **கொக்குவில், தாவடி, மானிப்பாய்** இடங்களைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
(cs.41211) (2.6)

**077 232 3000**

## தேவை

வவுனியா ஏ9 வீதிக்கு அருகாமையில் உள்ள வீட்டிற்கு இரண்டு குழந்தைகளை பராமரிப்பதற்கு வீட்டு பணிப்பெண் தேவை.
சம்பளம் 35,000/=
(CR 5968) 1-6

**0777 252 091**

## காணி விற்பனைக்கு

- வீமன் காமம், தெல்லிப்பளையில் பரப்பு 12 1/2,
  விலை 650,000 /- பரப்பு
  தொடர்புக்கு : 077 423 5458
- நல்லூர் கோவில் வீதியில் பரப்பு 2 குழி 12.8
  மொத்த விலை 27,500,000/-
  தொடர்புக்கு : **076 240 1508**

(CS 18088)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 03 . 1938



மறைவு 19 . 11 . 2021

### முருகேசம்பிள்ளை விசுவநாதன்

**(ஓய்வுபெற்ற கொள்வனவு உத்தியோகத்தர், ப.நோ.கூ.சங்கம், காரைநகர்)**

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை விசுவநாதன் அவர்கள் கடந்த (19.11.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா தங்கம்மா தம்பதியரின் மருமகனும், மேனகையின் அன்புக் கணவரும், கிருஸ்ணவேணி (பிரதேச செயலகம், காரைநகர்), குகநேசன் (கோட்டக்கல்வி அலுவலகம், காரைநகர்), பாலேந்திரன் (இங்கைவங்கி, மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருலோகேஸ்வரன் (பிரதேச செயலகம், காரைநகர்) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காந்திமதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கருங்காலி,**
**காரைநகர்.**

**077 574 8617**
**077 874 1813**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CS 18087) 1/6

## தென்மராட்சியில் மூவருக்குத் தொற்று

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட 13 பேருக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கச்சாய் வடக்கைச் சேர்ந்த இருவருக்கும், கரவெட்டியைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 110 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 09 . 1963



மறைவு 21 . 11 . 2016

அமரர் இராசரத்தினம் ரவிச்சந்திரன்

உன்னை நினைக்கும் போதெல்லாம்
எனக்கு ஆறுதல் சொல்ல வருவது
கண்ணீர் மட்டும் தான்....!
நீயோ எம்மைப் பற்றிய நினைவே இல்லாமல்
உறங்கிக் கொண்டிருக்கிறாய் மண்ணுக்குள்...!

மனைவி சாந்தி
மற்றும் பிள்ளைகள்: கீர்த்தன், தூரிகா (ஜேர்மன்)

(ne.17816) (2.6)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 17 . 05 . 1936



ஆண்டவன் அடியில் 01 . 12 . 2020

அமரர்
இராசரத்தினம் தெய்வேந்திரம் (பாப்பாக்கா)

ஆண்டு ஒன்று வந்தால் என்ன-எங்கள்
ஆயுள் முழுதும் தேய்ந்தால் என்ன
வாழ்ந்த வாழ்க்கை மறந்திடுமோ
எங்கள் ஞாபகங்கள் அழிந்திடுமோ

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
எங்களை வழிநடத்தி நலமுடன் வாழவைத்த
எம் ஆருயிர் தெய்வத்தை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இளவாலை வடக்கு, இளவாலை.

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
077 9003 159


# தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் நவ.21

**யாழில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான ஊக்குவிப்புக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.**



யாழ்ப்பாணம் நவ.21 குறித்த நிகழ்வு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் சங்கம், விதாதா, ஸ்ரீலங்கா ரெலிகொம், சனச அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்ப்பாணப் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில், நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில், யாழ் மாவட்ட மேலதிக செயலர் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத் தலைவர் மணில் ஜெயசிங்க, சனச அபிவிருத்தி வங்கியின் தலைவர் லக்ஷ்மன் அபேசேகர, நந்திக்க புத்திபால, யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் ஜெயசேகரம், விதாதா இயக்குநர், ஸ்ரீலங்கா ரெலிகொம் வட பிராந்திய முகாமையாளர் சிவானந்தன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மற்றும் பிரதேச விதாதா அலுவலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ய-20)

# திருட்டுக்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, நவ. 21

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இடம்பெற்றதாகச் சொல்லப்படும் பல திருட்டுக்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் வீடு ஒன்றில் பெருந்தொகை நகைகளும், 60 ஆயிரம்ரூபா பணமும் திருடப்பட்டிருந்தது. இந்தத் திருட்டுடன் ஆறு பேருக்குத் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. அவர்களில் மூன்று பேரே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 15 பவுண் தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(ம-113)


## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 04 . 1937



மறைவு 18 . 11 . 2021

### திருமதி பூமாவதி தனிநாயகம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் - 6ம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இருமரபும் தூய கனகராய முதலிய வம்சம் திருமதி. பூமாவதி (பூமா) தனிநாயகம் அவர்கள் கடந்த 18.11.2021 வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி கணபதிப்பிள்ளை சுந்தரம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி இராமநாதர் குமாரசாமி, பார்வதி குமாரசாமி தம்பதியினரின் பாசமிகு மருமகளும், திரு. தனிநாயகம் - நெடுந்தீவு ( உதவி ஆணையாளர், இளைப்பாறிய கமநல சேவைகள் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியாரும், அமரர்கள் திரு.தில்லைநாயகம், திருமதி. சொர்ணலட்சுமி சேதுகாவலர் மற்றும் திரு.சிவஞானம் (பிரான்ஸ்), திரு.சோதிநாதன் (கனடா), கமலாவதி (இலங்கை) தவநாயகி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி குணநிதி தில்லைநாயகம் (கனடா), அமரர் திரு.சேதுகாவலர், திருமதி. கமலம் சிவஞானம் (பிரான்ஸ்), திருமதி. சொர்ணம் சோதிநாதன் (கனடா), அமரர்கள் திரு. சண்முகநாதன், திருமதி. சரஸ்வதி மாணிக்கவாசகர், திருமதி. கண்மணி தியாகராஜா, அமரர்கள் திருமதி பூபதி வெற்றிவேல், திரு.சுப்பிரமணியம் குமாரசாமி மற்றும் திருமதி லோக நாயகி மனோகரன் ஆகியோரின் மைத்துனியும், மதிவதனி தமிழ்மாறன் (இங்கிலாந்து), சசிவதனி விசாகரட்ணம் (இங்கிலாந்து). அகிலவதனி தர்சன் (நியூசிலாந்து), லோகன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், தமிழ்மாறன் (இங்கிலாந்து) விசாகரட்ணம் (இங்கிலாந்து) தர்சன் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அஷ்வினி, கவின், அமித்தா, விஷ்ணு, நவின், ஆகியோரின் ஆருயிர் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை 1.00 மணிக்கு வேப்பங்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் (6ம் ஒழுங்கை, மன்னார் வீதி) நடைபெற்று, பூதவுடல் தட்சணாங்குளம் மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொலைபேசி -0242220515
அலைபேசி +94 76 197 3124
+44 7459 957000

தகவல்
குடும்பத்தினர்

# அரசிலிருந்து வெளியேற எந்த நேரத்திலும் தயார்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, நவ.21

**அரசில் இருந்து விலகுவது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்தால், உடனடியாக அதை நடைமுறைப்படுத்தத் தயாராகவே இருக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட அதிகார சபைக் கூட்டத்தில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

அரசில் இருப்பதா? அல்லது வெளியேறுவதா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய செயற்குழு தீர்மானித்தால், அனைத்துப் பதவிகளையும் கைவிட்டு, அரசில் இருந்து வெளியேறுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம். கிராம மட்டக்கிளை, சங்கங்களைக் கூட்டி அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டால் அதற்குக் கட்டுப்பட கட்சி தயாராகவே இருக்கின்றது- என்றார். (எ-இ)

# நாடாளுமன்றில் விமல் மீது பொன்சேகா கடும் சாடல்!



கொழும்பு, நவ.21

அரசில் இருக்கும் கூலிக்கு குரைக்கும் அமைச்சரின் கழுத்து தற்போது உடைந்து வீழ்ந்து, சட்டைப் பைக்குள் கிடக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது;

எதிர்க்கட்சியினர் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும் என்று கூறும் அந்த அமைச்சர் கடந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியில் இருந்தவர்.

அந்த அமைச்சர் ஆக்கபூர்வமானவர் என்பதன் காரணமாகவே இரண்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொண்டிருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணியில் இருக்கும் இளைஞர்கள் கஷ்டப்பட்டு அந்தநபரை அரசியலுக்கு கொண்டு வந்து, ஒரு அரசியல் பாத்திரமாக உருவாக்கினர்.

காற்சட்டை அணிவது எப்படி என்பதை அந்தநபர் மக்கள் விடுதலை முன்னணியிடமே கற்றுக்கொண்டார்.

அப்படி வந்த நபர், ராஜபக்ச அணியின் இலஞ்சம் மற்றும் பணத்தை கண்டதும் அவர்களின் அணிக்கு தாவினார்.

பொய்யாக தற்போது அரசை விமர்சித்தாலும் வரவு - செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பின்போது, அவர் மற்றும் அவரது அணியினர் வாலை மடக்கிக்கொண்டு அரசுக்கு ஆதரவளிப்பார்கள். - என்றார். (எ-இ)

# குதிரைப் பந்தயத் திடலில் பெரும் வெடிப்புச் சம்பவம்!

## இருவர் காயம், தீவிர விசாரணை

கொழும்பு, நவ.21

கொழும்பு கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவில் ரீட் மாவத்தையில் அமைந்துள்ள குதிரைப் பந்தயத்திடலின் பார்வையாளர் கூடத்தின் கீழ் மாடியின் உணவகமொன்றில் நேற்றுச் சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் வெடிப்புச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

காயமடைந்த இருவரும் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் வாடகை வாகனம் வரும்வரை காத்துக் கொண்டிருந்த இளைஞர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சமையல் எரிவாயு கசிவின் காரணமாகவே வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

வெடிப்பின் பின்னர் ஏற்பட்ட தீப்பரவல் கொழும்பு மாநகரசபையின் தீயணைப்பு படையினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. வெடிகுண்டு செயழிக்கச் செய்யும் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஸ்தலத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

வெடிப்புக்கான காரணத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அரச இரசாயன பகுப்பாய்வு அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று ஆய்வுகளை முன்னெடுத்துள்ளனர் என்றும், - கறுவாத்தோட்டம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் 'பிரதமர் மஹிந்த ராஜபக்ச கிண்ணம்' கால்பந்து இறுதிப் போட்டி நடைபெற்றிருந்தது. அந்த நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக சர்வதேச கால் பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் கிஆனி இன்பென்டினோ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-இ)


**தேவை**

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
உழுந்து உடைத்துக் கொடுக்கப்படும்.
T.P: 077 772 2215 (CS 18093) (1/6)


# சமுர்த்தி அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடல்



கிளிநொச்சி, நவ. 21

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் தலைமையில், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட அதிகாரிகளுடனான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இதன்போது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், அபிவிருத்திகள் உள்ளிட்டவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதில் சமுர்த்தி உதவி ஆணையாளர், உதவிப் பிரதேச செயலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம)


**ஆடுகள் தேவை**

ஜமுனாபாரி முழுச்செவி ஆடுகள் தேவை. உங்கள் இடத்திற்கு வந்து வாங்கப்படும்.
தொடர்பு- 077 3973166
(CS 18091) 1-6

**பெண் பணியாளர்கள் தேவை**

யாழ் பலாலி வீதி கந்தர்மடம் அருகில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு உலர் உணவு பொதியிட பெண்கள் தேவை. நாள் சம்பளம் 900/=
(CS 18094 A) 1-6
தொடர்களுக்கு: 077 715 7070


சிறீதரன் எம்.பிக்கு...

புப் பேரணி நடத்தப்பட்டது. பேரணி முடிவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதம் இடம்பெறுகின்றது. வன்னி மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனை, முகமது சாணக்கியன் என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆட்சேபணை தெரிவித்திருந்தார். இதன்போது சிறீதரன் மற்றும் திலீபன் இடையே கருத்து மோதல் ஏற்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே வவுனியாவில் சிறீதரனுக்கு எதிரான போராட்டம் ஈ.பி.டி.பி.யினரால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

கொரோனா விதிமுறைகளைக் காரணம் காட்டி மாவீரர் வாரத்துக்கு பொதுக் கூட்டம், பேரணி என்பனவற்றுக்கு பொலிஸார் நீதிமன்றில் தடையுத்தரவுகளைப் பெற்றுக்கொள்கின்றனர். கொழும்பில் எதிர்க்கட்சியினர் ஏற்பாடுசெய்த போராட்டத்துக்கும் இவ்வாறு தடைவிதிக்கப்பட்டது. இதேவேளை எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதி வரையில் வெளியிடப்பட்ட சுகாதார விதிமுறைகளில் பேரணிகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலும், போக்குவரத்துப் பொலிஸார் முன்பாக ஈ.பி.டி.பி.யினர் பேரணியை எந்தத் தடைகளும் இல்லாமல் நடத்தினர். (ஒ-18,110)


**வேலையாட்கள் தேவை**

AR, Digital Studios இற்கு வடிவமைப்பாளர், காணொளித் தொகுப்பாளர், வரவேற்பாளர்கள் தேவை. (இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்). பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:077 862 6251
88 மார்டீன் வீதி, புகையிரத நிலைய சந்தி, யாழ்ப்பாணம்.
(CS 18090) 1-6

**WORK FROM HOME, ONLINE MARKETING**

யாழில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு வீட்டில் இருந்து Online Marketing செய்யக் கூடியவர்கள் தேவை. 2 நாள் பயிற்சியின் பின் வேலை செய்யலாம். சம்பளம் : 25,000/= தொடக்கம்.
தொடர்பு:077 715 7070
(CS 18094 B) 1-6

## வீரமறவர்களை...

தமிழர் தேசத்தை காவல் காத்த தெய்வங்களை, வீரப்புதல்வர்களான மாவீரர்களை நினைவு கூர்ந்து பேரெழுச்சியுடன் மாவீரர் வாரத்தை புலம்பெயர் தேசம் எங்கும் பரந்து - விரிந்து வாழும் தமிழ் மக்கள் கடைப்பிடிக்கவுள்ளனர்.

தாயக மண்ணில் - தேசத்தில் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படுவதற்கு நீதிமன்றங்கள் ஊடான தடையுத்தரவை சிறிலங்கா பொலிஸார் பெற்றுள்ளனர்.

தாயக தேசமான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் முழுமையாக முடக்கப்பட்ட பின்னர், 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர், மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டன. மாவீரர் வாரத்தை நினைவுகூர முடியாதளவுக்கு நெருக்கடிகளும் கெடுபிடிகளும் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டன.

நல்லாட்சி அரசு உருவான பின்னர், 2016ஆம் ஆண்டு, பகிரங்கமாக மாவீரர் நாள் நினைவேந்தல் நடத்தப்பட்டது. தமிழீழ தேசத்தில் முக்கியமான மாவீரர் துயிலும் இல்லங்களில், மாவீரர் பெற்றோரின் கண்ணீர்க் கதறலுடன் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2017, 2018ஆம் ஆண்டுகளிலும் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் மாவீரர் வாரம் கடைப்பிடிப்பதற்கு நீதிமன்றங்கள் ஊடாக தடையுத்தரவுகள் பெறப்பட்டன. பகிரங்கமாக மாவீரர் வாரத்தை கடைப்பிடித்தவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை வைத்திருந்தவர்கள் சிறிலங்கா பொலிஸாரால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழீழ தனியரசு அமைப்பதற்காக போராடி மடிந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் வாரத்தை 1989ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடித்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படும். நவம்பர் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாடப்படும். மறுநாள் நவம்பர் 27ஆம் திகதி, மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படும். அன்றைய தினம் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரை முடிவடையும் தருணம், மாலை 6.05 மணிக்கு ஆலய மணி ஒலிக்க விடப்பட்டு, மாவீரர்களுக்கான நினைவுப்பாடலுடன், ஈகச்சுடரேற்றல் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## மாவீரர் நாள்...

நேற்று முன்தினம் நீதிமன்றில் தாக்கல் செய்த தடை உத்தரவு கோரிய மனுவில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் உட்பட 21 பேர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் இன்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## மாவீரர்களை...

டில் இன நல்லிணக்கம் ஏற்படவேண்டும் எனில் பயங்கரவாதிகளை நினைவுகூருவது முறையற்ற செயலாகும். இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் மாவீரர் வாரம் கடைப்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தற்போது ஏன் அனுமதி வழங்கப்படுவதில்லை என்று சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்பு செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நவம்பர் 27ஆம் திகதி பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூரும் நாள் என்று உலகுக்கே தெரிந்த விடயம். இந்த நிலையில் அவர்களை பொதுமக்கள் என்ற ரீதியில் நினைவேந்துவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் முற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும். சட்டத்தின் பிரகாரம் பொலிஸார் செயற்படுகின்றனர். அதற்கமைய பயங்கரவாதிகளை நினைவேந்துவதை தடை செய்வதற்காக பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக தடையுத்தரவுகளைப் பெற்றுள்ளனர். இது எவரையும் பழிவாங்கும் நோக்கமல்ல. பொலிஸார் தமது கடமைகளை உரியவாறு செய்கின்றனர். எனவே எந்த சந்தர்ப்பத்திலும் பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளை நினைவுகூர எமது அரசு அனுமதி வழங்காது.

நல்லாட்சி அரசு பயங்கரவாதிகளை நினைவேந்த அனுமதி வழங்கிய காரணத்துக்காக எமது அரசு நாட்டின் சட்டத்தை மீறி செயற்படாது. நல்லாட்சி அரசின் ஏற்றுக்கொள்ள முடியாத சில செயல்களால்தான் நாடு இன்று மோசமான நிலைக்கு வந்துள்ளது. நாட்டை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில் எமது அரசு ஈடுபட்டுவருகின்றது.

நாட்டில் இன நல்லிணக்கம் ஏற்படவேண்டுமெனில் பயங்கரவாதிகளை நினைவுகூருவது முறையற்ற செயலாகும். இது இனங்களுக்கு இடையே பகைமையையே ஏற்படுத்தும், என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்தில் புலிகள் அமைப்புடனான பேச்சுக்கு அரச குழுவுக்கு தலைமை தாங்கியவர் ஜி.எல்.பீரிஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-22)

## ஒற்றையாட்சியாலேயே.

தான் இந்தத் தீவு அழிவிலிருந்து மீண்டெழ முடியும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவரது உரையில் முக்கியமாக தெரிவித்ததாவது,

வரவு- செலவுத்திட்டங்களும் அரசின் கொள்கைகளும் எங்களுடைய தேசத்தை முழுமையாக சிங்கள பௌத்த மயமாக்குகின்ற நோக்கத்தோடுதான் நடந்து கொண்டிருக்கின்றன.

இது ஒருபுறமிருக்க கடந்த 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களுக்கு சமஷ்டி வழங்கினால் அதிகாரங்கள் வழங்கினால் நாடு பிரிந்துவிடுமென்று கூறி இனவாதமாக செயற்பட ஆரம்பித்திருந்தீர்கள். குடித்தொகைப் பரம்பலை மாற்றி அமைத்தல், குடியேற்றங்களை மேற்கொள்ளுதல், பௌத்தமயமாக்கல், சிங்கள மயமாக்கல், கல்வித்தரப்படுத்தல் தெற்கிலிருந்து வன்முறை மூலமாக தமிழர்களை வடக்குக்குக் கப்பலேற்றி அனுப்புதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தீர்கள்.

தமிழர்கள் நாட்டை பிரிக்கப்போகிறார்கள் எனக்கூறி 6 ஆம் திருத்தச்சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டுவந்தீர்கள். ஆனாலும் தமிழர்கள் தம் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், அரசியல் உரிமைக்காகவும் ஆயுதமேந்திப் போராடும் நிலைமையை உங்களால் தடுக்க முடியவில்லை. அது மட்டுமல்லாமல் அப்போராட்டத்தை உங்களால் அழிக்கவும் முடியவில்லை. ஏனெனில் அது அரசியல் உரிமைக்கான நீதிக்கான நியாயமான போராட்டம். இறுதி யில் இன அழிப்பு ஒன்றினூடாகத்தான் உங்களால் அந்த உரிமைப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரக் கூடியதாக இருந்தது.

அவ்வாறு இன அழிப்பை அரங்கேற்றியபோது இனிமேல் இத்தீவானது தூய சிங்கள பௌத்த தீவாக மாறும், மாற்றப்படுமென்று சிங்கள மக்களை கனவு காண வைத்தீர்கள். ஆனால் இன்றைய நிலை என்ன என்பதை நீங்கள் சிந்தித்து பாருங்கள். இன்று நாடு பெரும் கடனில் மூழ்கியிருப்பது மட்டுமல்லாமல் சீனாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் இந்த நாடு விற்கப்பட்டு இந்த நாடு சிங்கள மக்களுக்கே சொந்தமாக இருக்குமா என்ற கேள்வியைக் கேட்கின்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது, நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

2009 இலே நீங்கள் இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவந்த பிற்பாடு இன்று உங்களிடம் மிஞ்சி இருப்பது என்ன? இன்று இந்த நாடு முழுமையாக அந்நிய சக்திகளுடைய பூகோள போட்டிக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகி கொண்டிருக்கின்றதென்பதை இப்பொழுதாவது நீங்கள் விளங்கிக்கொள்கிறீர்களா? ஆகவே உங்கள் அணுகுமுறை முற்றாக தோல்வி அடைந்துள்ளது.

ஒற்றை ஆட்சியை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்காக 70 ஆண்டுகளாக நீங்கள் மேற்கொண்ட அணுகுமுறைகள் அனைத்தும் தோல்வி அடைந்து இருக்கின்றான. 13ஆம் திருத்தச்சட்டமோ ஒற்றையாட்சியோ ஒருபோதும் தீர்வாக ஏற்றுக்கொள்ளப்படப் போவதில்லை. எங்களது உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

உங்களது அணுகுமுறையை மாற்றுங்கள். தமிழர் தேசத்தையும் தமிழ் தேசத்தினுடைய இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கின்ற ஒரு சமஷ்டி தீர்வை புதிய அரசமைப்பினூடாக கொண்டுவருவதைப் பற்றி சிந்தியுங்கள்.

அதன் மூலமாக இலங்கைத்தீவில் தமிழ் தேசமும் சிங்கள தேசமும் ஐக்கியமாக வாழக்கூடிய, சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஆனந்தமாக கூடி வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குங்கள். இதை எங்களுடைய தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் 2001ஆம் ஆண்டு மாவீரர் உரையிலே சொல்லியிருக்கின்றார்.

ஆகவே இந்தத் தீவை மையப்படுத்தி நடக்கின்ற பூகோள போட்டியிலே நீங்கள் சிக்குண்டு இந்த நாடு இந்த சக்திகளினுடைய போட்டி காரணமாக பிளவுண்டு போவதை நோக்கித்தான் உங்களுடைய நகர்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒன்றை விளங்கிக்கொள்ளுங்கள். சிங்கக்கொடியிலே சிங்கத்தை வைத்திருக்கிறீர்கள் என்பதற்காக நீங்கள் சிங்கங்களுமல்ல. சிங்கத்தினுடைய தலையுமல்ல. இந்த பிராந்திய பூகோள ஆதிக்கப்போட்டியிலே நீங்கள் சிங்கத்தினுடைய வாலில் இருக்கின்ற உரோமங்கள்தான் என்பதனை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள், என்று குறிப்பிட்டார். (ஒ,5)

## தாக்குதலாளிகள்...

வீட்டார் மிளகாய்தூளை வீசி எறிந்து பதில் தாக்குதல் நடத்தியதால், தாக்குதலாளிகள் தலைதெறிக்க ஓடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் இடம்பெற்றது. வீட்டுக்குள் வாள்கள், கத்திகள், கோடாரிகளுடன் வாகனத்தில் வந்திறங்கியது 15பேர் கொண்ட வன்முறைக் கும்பல்.

வீட்டின் கதவு, ஜன்னல் என்பவற்றை கொத்திப் பிளந்தது. கண்ணில் தென்பட்ட பொருள்களுக்கு சேதம் விளைவித்து அட்டகாசம் செய்தது. வீட்டு உரிமையாளர் கையில் காட்டுக் கத்தி இருந்தமையால் அவரை வன்முறை கும்பலால் நெருங்க முடியவில்லை. அதே நேரம் வீட்டின் சமையலறைக்குள் இருந்து வன்முறை கும்பல் மீது மிளகாய் தூள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் தாக்குதலாளிகள் தலைதெறிக்க தப்பியோடியுள்ளனர். தாக்குதலுக்கான காரணம் இன்னமும் தெரியவரவில்லை. கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ-9)

## குடும்பத் தகராறு...

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திக்கம் அல்வாய் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பரமநாதன் சசிகலா (வயது - 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

'கடந்த 13ஆம் திகதி மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவன் மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். மனைவி மண்ணெண்ணெயை தன் மீது ஊற்றியுள்ளார். தகராற்றில் ஈடுபட்டால் தீ மூட்டப் போவதாக அவர் மிரட்டியுள்ளார். இதன்போது கணவர் லைற்றரால் மனைவியின் பாவாடைக்கு தீ வைத்துள்ளார். இதனால் தீயில் எரிந்த அவரை அயலவர்கள் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்தனர். அவர் நேற்று உயிரிழந்துள்ளார்' என்று விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஒ-25)

## வீடுடைத்து...

கூறுகின்றனர்.

குடும்பத்தலைவர் விவசாய நடவடிக்கைக்குச் சென்றுள்ளார். மனைவி பிள்ளையுடன் பாடசாலைக்குச் சென்றுள்ளார். வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், வீட்டின் பின்பக்க கதவை உடைத்துத் திருடர்கள் உள்நுழைந்துள்ளனர். மறைவாக வைக்கப்பட்டிருந்த 8 மோதிரங்கள், 5 சங்கிலிகள், 2 தோடுகள், 3 கைச் சங்கிலிகள் என்பவற்றை திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். இவற்றின் பெறுமதி 13 லட்சத்து 60 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-19)

## அடுத்த...

கர வண்டிகளிலும் கட்டண மீற்றர் பொருத்தப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிடப்பட்டுள்ளதாகவும், அது எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

'எதிர்காலத்தில் கட்டண மீற்றர் இல்லாமல் பயணிகள் வாடகைச் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிச் சாரதிகளை கைது செய்வதற்கான சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கட்டண மீற்றர் பொருத்தும் வேலைத்திட்டம் மேல் மாகாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்' என்று குறிப்பிட்டார். (ஒ-இ)

175.0 lpi © 2000 Agfa-Gevaert N.V.

உட்கட்சி...

கருத்துக்கு ஜனாதிபதி ஊடகப்பிரிவு மறுப்பு அனுப்பி வைத்துள்ளது.

அந்த ஊடக அறிக்கையில், கடந்த இரண்டு வருட கால ஆட்சிக் காலத்தில், சவால்களுக்கு மத்தியில் குறைவான வளப் பயன்பாட்டுடன் பெரிய வேலைத்திட்டங்களை ஜனாதிபதி கோத்தாபய நடைமுறைப்படுத்தி வருகின்றார். நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட வேலைத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தும் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள முழுமையான ஊழியர்கள் மற்றும் வாகன எண்ணிக்கை என்பன, நல்லாட்சிக் காலத்திலிருந்த ஊழியர் மற்றும் வாகன எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

விடயம் இவ்வாறு இருக்கும்போது, சரியான தகவல்கள் அல்லது தரவுகளை ஆய்வு செய்யாமல், ஜனாதிபதி அலுவலகத்தின் வாகனப் பயன்பாடு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானதும் சரிவர ஆய்வு செய்யாமலும் முன்வைக்கப்பட்டவை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி உள்ளிட்ட ஜனாதிபதி அலுவலகத்தில் சேவை புரிகின்ற எந்தவோர் அதிகாரியும் வாகனத் தொடரணியைப் பயன்படுத்துவதில்லை என்பதை பொறுப்புடன் கூற வேண்டும். அதே போன்று, அதிகாரிகள் தமது பதவிக்குரிய வாகனத்தைக்கூட பயன்படுத்தாது, கடமைக்கு ஏற்ற வகையில் பட்டியலில் உள்ள வாகனங்களையே குறித்த கடமையை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

அதனால், சந்திம வீரக்கொடி உண்மையான விடயத்தை அறியாது, இவ்வாறு தவறான தகவல்களை முன்வைப்பது வருந்த தக்க விடயமாகுமென ஜனாதிபதி அலுவலகம் சுட்டிக்காட்டுகின்றது - என்றுள்ளது.

(ஒ-இ)


## விற்பனை முகவர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஆயுள்வேத மருந்து உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்திகளை நாடு பூராகவும் விநியோகிப்பதற்கு மாவட்டங்கள் ரீதியாக விற்பனை முகவர்கள் தேவை. (cs. 41213) (2.6)

077 766 7444, 071 766 7444

## தவறிவிட்டது

கந்தையா சிவநேசன் ஆகிய என் சுவிஸ் விசா அட்டை, தேசிய அடையாள அட்டை (543172596V) மற்றும் சிறு தொகைப் பணத்துடன் கூடிய பேர்ஸ் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் கோயில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (CS 18085)1-6

தொடர்புகளுக்கு: 076 117 2246

## வேலையாள்கள் தேவை

வவுனியாவில் இயங்கும் கால்நடை (ஆடு, கோழி) பண்ணை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.

* கால் நடை பராமரிப்பாளர்கள் ஆண் / பெண்) வயது : 35 - 55
* காவலாளி (ஆண்)
* ஓய்வு பெற்ற கால்நடை வைத்தியர் (பகுதிநேரம்)
* தங்குமிட வசதி உண்டு குடும்பமாகவும் தங்கலாம்.

T.P.: 077 805 4874
077 939 6733 (cs.41187) (2.6)

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு, House Keeping மற்றும் சமையல் உதவியாளர் (பெண்) வேலைகளுக்கு ஆள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள். பழக விரும்புபவர்கள் ஆண். பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலம்.

077 668 1840 (cr.36431) (2.6)

## Personal English Classes

தனி வகுப்புக்கள் யாழ் நகரில் O/L, A/L, Graduates, தொழில் புரிவோர்களுக்கான Spoken English வகுப்புக்கள்

K.Ganesh (BA) 077 766 8725

## Vacancy

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல Guest House ஒன்றிற்கு Cleanig Staff பராமரிப்பிற்கு ஆள்கள் தேவை. (ஆண்/பெண்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

077 700 3617
No. 346, Kasthuriyar Road, Jaffna.

## சதாபொன்ஸ்
### கல்வி நிலையம்
### மாலிச்சந்தி, அல்வாய்

O/L துரித மீட்டல் வகுப்புக்கள் 22.11.2021 திங்கள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

புதிய சுகாதார விதிமுறைக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட தொகையினருடன் வகுப்புக்கள் நடத்தப்படும். அனுமதி இன்று முதல். தொடர்புகளுக்கு: (CR 5959) 1-6

077 3095 176, 021 226 3206, 077 9250105

## காணி தேவை

கடற்கரையை அண்மித்ததாக சுமார் 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள உறுதிக்காணி (தரிசு நிலம் மாதிரி) தேவை. (தென்னைக்கோ அல்லது ஏனைய பயிர் செய்கைக்கோ ஏற்றதாக இருக்கவேண்டிய அவசியமில்லை) தொடர்புகளுக்கு: (cs.41168) (2.6)

077 439 5848

## வேலையாள் தேவை

ஊர்காவற்துறை சுருவில் அருகில் வீட்டை பராமரிப்பதற்கும் வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கும் வேலையாள் தேவை. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது (cs.41154) (2.6)

077 061 6191

## வீட்டு வேலையாள்கள் தேவையா?

சிறுவர், வயோதிபர் பராமரிப்பு, வீட்டுவேலைகளுக்கு பொருத்தமான வேலையாள்களை கட்டணப்பதிவு செய்து எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

### வீட்டு வேலையாள்கள் தேவை

வயோதிபர் சிறுவர் பராமரிப்பு மற்றும் வீட்டுவேலைகள் செய்யக்கூடியவர்களுக்கு பொருத்தமான வேலைவாய்ப்பு எம்மிடம் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். (cr.5959) (2.6)

DEWMAS 077 773 3368

## சாரதி தேவை

யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு சாரதியொருவர் தேவை. (Light Vehicle) சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். (cs.41207) (2.6)

077 501 0821, 076 135 9300

## விற்பனைக்கு

* சுன்னாக வீதி, புத்தூர் மேற்கு, புத்தூரில் Food city விற்பனைக்கு
* நவக்கிரியில் புத்தூர் வீதியோகரமாக 46 பரப்புக் காணி விற்பனைக்கு
* நாவலியில் 8 பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்கு (cs.41183) (2.6)

தொடர்பு: 077 221 6683

## நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing

உங்கள் இல்லங்கள், நிறுவனங்கள் சீமேந்திலான கட்டடங்கள், நீர்த்தாங்கிகள் மற்றும் குளியல் அறைகள்; கோவில் வில்லுமண்டபங்கள், பல்கனி மொட்டைமாடிகள், வெளிச்சுவர்கள், கோவில் கோபுர இணைப்புக்கள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவுகளை 10 வருட உத்திரவாதத்துடன் நிறுத்தித்தருகிறோம்.

காரியாலய விலாசம் இல்லாத போலி விளம்பரங்களை கண்டு ஏமாறாதீர்

Finex : இன் ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம் கூடிய விலைக் கழிவுடன் இரசாயனங்களை பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு சதுர அடிக்காக எம்மால் 130/- ரூபா அறவிடப்படுகிறது.

North and East Engineering
55, Stanly Road, Jaffna.
077 5244 177, 077 232 3000, 021 222 2363 (CS 40967) (3/6)

## JOBSIN யாழில் மாபெரும் இலவசதொழில் வாய்ப்பு கருத்தரங்கு

500 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள்

பங்கு பெறும் நபர்கள் நேர்முகத்தேர்வின் பின் நிரந்தர வேலை வாய்ப்பில் இணைத்துக்கொள்ளப்படுவர்



www.jobsin.lk

இடம் : Tilko Hotel - Jaffna

காலம் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

பதிவு செய்ய விரும்பும் நபர்கள் உங்கள் பெயர் மற்றும் முகவரியை கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும் (cs.41179) (2.6)

076 674 3807


## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 07 . 1954



இறப்பு 15 . 11 . 2021

### இராஜகோபால் நாகேஸ்வரி

யாழ் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்தவருமாகிய இராஜகோபால் நாகேஸ்வரி அவர்கள் கடந்த (15.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா சவுந்தரம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன் மதியாபரணம் அவர்களின் பாசமிகு மருமகளும், இலங்கைநாதன் இராஜகோபால் அவர்களின் அன்பு மனைவியும், தர்சினி (பிரான்ஸ்), தர்சிகா (கனடா), பிரசாத் (பிரான்ஸ்), மதுரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தயானந்தன் (பிரான்ஸ்), மோகன தேவன் (கனடா) சுகிதா (பிரான்ஸ்), சஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு மாமியா ரும், அபிதேஷ், திபிசனா, சுபீட்சா, நிபிசா, ரிபித்தா, அசனிக்கா, வைஷ்சஜி, அக்சரன், துர்க்கா, உருத்திரா, கனேஸ், விஷ்ணு, ஆதீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.11.2021 அன்று வீட்டில் (பிரான்ஸ்) 10 மணிமுதல் 11 மணிவரை நடைபெறும்.

Cimetiere Ducoeuilly
560 Avemaurice thorez
96500 Chompigny Surmarne இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர். (CS 18102) 1-6



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16
Registered as a Newspaper

# சஞ்சீவி

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | கார்த்திகை 05 | ஞாயிற்றுக்கிழமை (21.11.2021) | சிகரம் : 74

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழி மூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம் தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாரும் என்று
உங்களின் வாசலில்
வந்துமை வணங்குகின்றோம்

உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்

சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது – எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

(எங்கே எங்கே)

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியரசு(சு) என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

(எங்கே எங்கே)



வரிகள்: புதுவை இரத்தினதுரை
பாடியோர்: வர்ண ராமேஸ்வரன் குழுவினர்



சஞ்சீவி
21 நவம்பர் 2021





# ஆயர்களின் அறிக்கை

○ நிலாந்தன்

2019 இலிருந்து கத்தோலிக்கத் திருச்சபையின் நான்கு தமிழ் ஆயர்களும் இணைந்து வடக்கு - கிழக்கு கத்தோலிக்க ஆயர் மன்றம் என்ற பெயரில் ஓர் அணியாகச் செயற்பட்டு வருகிறார்கள். வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் அபிலாசைகளை அதிகம் பிரதிபலிக்கும் விதத்தில் இவ்வாறு தமிழ்ப்பகுதி ஆயர்கள் ஓரணியாக நிற்பது வரவேற்கத்தக்கதே. தெற்கில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஓரினச் சாய்வுடையவராக பார்க்கப்படும் ஒரு சூழலில் நான்கு வடக்கு=கிழக்கு ஆயர்களும் ஒன்றிணைந்து முடிவெடுப்பது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் உடையது. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஈஸ்டர் குண்டுவெடிப்பை தொடர்ந்து வெளிப்படுத்தும் கருத்துக்கள் சர்ச்சைக்குரியவை. ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு உள்நாட்டில் உள்ள சில சக்திகள் ஈஸ்டர் குண்டுவெடிப்பை பயன்படுத்தியதாக அவர் நம்புவது தெரிகிறது. அதேசமயம் ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் நீதி கோரி குரலெழுப்பும் கர்தினால் தமிழ்ப் பகுதிகளில் நிகழ்ந்த குறிப்பாக தமிழ் கத்தோலிக்கர்களுக்கு எதிராக நிகழ்ந்த தாக்குதல்களைக் குறித்துக்கூட அந்தளவுக்கு குரல் எழுப்பவில்லை என்ற குற்றச்சாட்டு அவர் மீது உண்டு.

கத்தோலிக்கத் திருச்சபை ஈழப் போராட்டத்தோடு அதிகம் நெருக்கமாகக் காணப்பட்டது. இலங்கைத்தீவில் இன முரண்பாட்டை அதிகம் பிரதிபலித்த ஒரு திருச்சபையும் கத்தோலிக்கத் திருச்சபைதான். எவ்வாறெனில் பெரும்பாலான தமிழ் கத்தோலிக்கர்கள் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக இருந்தார்கள். அது காரணமாகவே சில கத்தோலிக்க மதகுருமார் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிலர் காணாமல் போகச் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேசமயம் சிங்களப் பகுதிகளில் கத்தோலிக்கத் திருச்சபையானது பெருமளவுக்கு சிங்களக் கூட்டு உளவியலையே பிரதிபலித்தது.

கத்தோலிக்கத் திருச்சபை எவ்வாறு இன முரண்பாட்டை பிரதிபலித்தது என்பதற்கு ஒரு கூர்மையான உதாரணம் கூறப்படுவதுண்டு. பிலிப்பைன்ஸைத் தளமாகக் கொண்டியங்கிய வெரித்தாஸ் வானொலி முன்பு யுத்த காலங்களில் ஒலிபரப்பிய அதன் செய்திகளில் தமிழ் இயக்கங்களை தமிழ் செய்திகளில் போராளிகள் என்று விளித்தது. அதே சமயம் சிங்களச் செய்திகளில் ரஸ்தவாதிகள் அதாவது பயங்கரவாதிகள் என்று விளித்தது என்றும் ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இவ்வாறான ஒரு பின்னணியில் தமிழ்ப் பகுதிகளில் உள்ள நான்கு ஆயர்களும் இணைந்து ஓர் ஆயர் மன்றமாகச் செயற்படுவது என்பது ஒருவிதத்தில் தவிர்க்க முடியாத தர்க்க பூர்வ வளர்ச்சிதான். குறிப்பாக 2009 க்கு பின் தோல்வியினாலும் அச்சத்தினாலும் ஒடுங்கிப்போய் இருந்த தமிழ் மக்கள் மத்தியில் ஓங்கி ஒலித்த ஒரே குரல் முன்னாள் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகையுடையது. குரலற்ற தமிழ் மக்களின் குரலாக அவர் ஒலித்தார். பெரும்பாலான மதத்தலைவர்கள் வாய் திறக்கப் பயப்பட்ட ஓர் அரசியல் சூழலில் ஆயர் ராயப்பு ஜோசப் துணிந்து குரல் கொடுத்தார். தமிழ் கத்தோலிக்கர்கள் தமிழ் மக்களுக்குரிய நீதியின் பக்கம்தான் நிற்பார்கள் என்ற செய்தியை ஓங்கி ஒலித்த குரல் அது. இவ்வாறான ஒரு பின்னணியில்தான் 2019 இலிருந்து நான்கு தமிழ் ஆயர்களும் இணைந்து செயற்படுவதும் முக்கியமான விடயங்களில் பொது முடிவை எடுப்பதும் வரவேற்கத்தக்கதே.

கடந்த மே 18 ஐ முன்னிட்டு அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அதில் நடந்தது இனப்படுகொலையே என்று துணிச்சலோடு எடுத்துரைத்தார்கள்.. அந்த அறிக்கையில் இனப்படுகொலையை கத்தோலிக்க வளாகங்களில் நினைவுகூர வேண்டும் என்று அறிவுறுத்தல்களையும் வழங்கினார்கள். நான்கு ஆயர்கள் இணைந்து, நடந்தது இனப்படுகொலை என்று சொன்னது தென்னிலங்கையில் கத்தோலிக்க வட்டாரங்களில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அங்குள்ள கத்தோலிக்க ஆயர்கள் மத்தியில் இதுதொடர்பாக விமர்சனங்களும் எழுந்தன. தமிழ் ஆயர்களின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் வடக்கு=கிழக்கு ஆயர்கள் அது இனப்படுகொலையே என்ற நிலைப்பாட்டில் விட்டுக் கொடுப்பின்றி காணப்பட்டார்கள். தமிழ்மக்கள் மத்தியிலுள்ள பெரும்பாலான மதத்தலைவர்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கத் தயங்கும் ஒரு நிலைப்பாடு அது.

ஆனால், அதே நான்கு ஆயர்களும் ஐந்து மாதங்களின் பின் அண்மையில் நினைவுகூர்தல் தொடர்பில் வெளியிட்ட ஓர் அறிக்கை சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. கத்தோலிக்கர்கள பொறுத்தவரை நவம்பர் மாதம் எனப்படுவது இறந்தவர்களை நினைவு கூர்வதற்கான ஒரு பொதுவான மாதமாகும். பல நூற்றாண்டுகளாக கத்தோலிக்க திருச்சபையால் உலகம் முழுவதிலும் பின்பற்றப்பட்டு வரும் ஒரு வழமை அது. இம்மாதம் முழுவதிலும் இறந்துபோன கத்தோலிக்கர்களை அவர்கள் நினைவு கூருகிறார்கள். அதாவது இந்துக்களின் வார்த்தைகளில் சொன்னால் ஒரு பொதுவான ஆண்டுத் திவசம். இவ்வாறு நவம்பர் மாதத்துக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையிலுள்ள உறவின் பின்னணியில் நான்கு ஆயர்களும் போரில் கொல்லப்பட்ட மக்களையும் போரில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்தவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் ஒரு காலகட்டத்தையும் நாளையும் அறிவித்திருக்கிறார்கள். அது வாதப் பிரதிவாதங்களை எழுப்பியுள்ளது.

ஒருபுறம் தமிழ்மக்கள் மத்தியில் மத முரண்பாடுகளை ஊக்குவிக்கும் தரப்புக்கள் அதனை தங்களுக்கு சாதகமாக வியாக்கியானம் செய்கின்றன. இன்னொருபுறம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகள் அந்த அறிவிப்புக்கு பதில்வினை ஆற்றியுள்ளன.

இது தொடர்பில் திருமலை மறைமாவட்டத்தின் ஆயர் தெரிவித்த கருத்து சர்ச்சையைத் தணிக்கப் போதுமானதாக இல்லை. அண்மை ஆண்டுகளில் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணிகள் உட்பட சிவில் சமூக செயற்பாடுகளில் ஒப்பீட்டளவில் தீவிரமாக செயற்படுகிறார் திருமலை ஆயர். முன்னாள் மன்னார் ஆயரின் தொடர்ச்சியாக ஆனால் அமைதியாக செயற்படும் ஒரு மதத் தலைவரான அவர் கூறுகிறார், கத்தோலிக்க சமூகத்தை நோக்கியே அந்த அறிக்கை வெளியிடப்பட்டது என்று. ஆனால் அந்த அறிக்கையில் அப்படிப்பட்ட தெளிவான குறிப்புகள் எதுவும் கிடையாது என்று அதை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள்.

தமிழ்த்தரப்பில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள் ஒவ்வொன்றும் தமக்கென்று தனித்தனியாக தியாகிகள் நாளை அனுஷ்டித்து வருகின்றன. இதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு நாட்டில் சட்டரீதியாக நெருக்கடிகள் உண்டு. ஏனைய தியாகிகளின் நாட்களை அனுஷ்டிப்பதற்கு தடைகள் ஏதும் கிடையாது. அதேசமயம் போரில் உயிர்நீத்த அனைவரையும் நினைவு கூரும் நாளாக அதாவது இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாக மே18 கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதற்கும் நெருக்கடிகள் உண்டு.

இவ்வாறானதொரு அரசியல் பின்னணியில் சட்டரீதியாக தடுக்கப்படக்கூடிய ஒரு நினைவு நாளை, போரில் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவுகளோடு இணைத்து, உலகளாவிய கத்தோலிக்கர்களின் நினைவு கூரும் மாதத்துக்குள் பொத்தாம் பொதுவான ஒரு நினைவு கூர்தலாக வகைப்படுத்தியதுதான் சர்ச்சைகளுக்கு காரணம் என்று அந்த அறிக்கையை விமர்சிப்பவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆயர்களின் அறிக்கை மாவீரர் நாளை அனுஷ்டிக்க வேண்டும் என்பதனை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது. உலகம் முழுவதிலும் உள்ள கத்தோலிக்கர்கள் இறந்தவர்களை நினைவு கூரும் ஒரு காலகட்டத்தில் மாவீரர்களையும் நினைவு கூருமாறு ஆயர்கள் மறைமுகமாக அழைப்பு விடுக்கிறார்கள். அதை நேரடியாகச் சொல்ல அவர்கள் தயங்குகிறார்கள். கடந்த மாவீரர் தினத்தின்போது விளக்கேற்றியதற்காக ஒரு மதகுரு கைது செய்யப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில் அவர்கள் அதிகம் முன்னெச்சரிக்கையோடு சிந்திப்பதாக தெரிகிறது. எனவே அவர்கள் நேரடியாக அரசியல் பேச விரும்பவில்லை என்று தெரிகிறது.

ஆனால் இங்கேயுள்ள விவகாரம் என்னவென்றால் நினைவுகூர்தல் என்பது ஓர் அரசியல் உரிமை ஆகும். அது ஒரு பண்பாட்டு உரிமை. அது ஒரு குணப்படுத்தல் செய்முறை. பண்பாடு சார்ந்தும் அரசியல் சார்ந்தும் அனைத்துலகச் சட்டங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு உரிமை. எனவே ஓர் அரசியல் உரிமை சார்ந்த விவகாரத்தில் அதன் அரசியல் உள்ளடக்கத்தை நீக்குவதற்கு பதிலாக அந்த அரசியலின் பாற்பட்ட கூட்டு உரிமைக்காக குரல் எழுப்புவதற்கு மதத்தலைவர்கள் ஏன் தயங்க வேண்டும்? அதனை ஒரு மதத்துக்கு உரியதாகவோ ஒரு இனத்துக்கு உரியதாகவோ கருதத் தேவையில்லை. மாறாக மனிதர்களாகப் பிறந்த எல்லாருக்குமான ; பொதுவான; உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு உரிமை அது. ஆயர்களின் அறிக்கையானது நினைவு கூர்வதற்கான தமிழ்மக்களின் கூட்டு உரிமையை வலியுறுத்தி வெளிவந்திருந்தால் இப்படி சர்ச்சைகள் எழுந்திருக்காது. பதிலாக அது கத்தோலிக்க நோக்கு நிலையிலிருந்து கத்தோலிக்க பாரம்பரியம் ஒன்றின் மறைப்புக்குள் நினைவு கூருமாறு கேட்கப்பட்டமைதான் ஒரு விவகாரமாக மேலெழுந்திருக்கிறது.

எனவே உலகளாவிய, அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆன்மீகப் பேரரசாகிய கத்தோலிக்கத் திருச்சபையின் நான்கு ஆயர்களும் இந்த விடயத்தில் துணிச்சலாக முடிவெடுத்து நினைவு கூர்தலுக்கான கூட்டு உரிமையை வலியுறுத்தி அந்த அறிக்கையை வெளியிட்டிருக்கலாம். ஆயர்கள் யாருக்கு பயப்படவேண்டும்? கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசாங்கத்துக்கு எதிராகத் தொடர்ச்சியாக கருத்துக்களைக் கூறி வருகிறார். ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு நீதிகேட்டு அனைத்துலக சமூகத்தை அணுகவும் அவர் தயாராக காணப்படுகிறார். நடந்தது இனப்படுகொலையே என்பதனை தமக்குரிய அறத்தோடு வெளிப்படுத்திய நான்கு ஆயர்களும் அதன் அடுத்தகட்ட தர்க்க பூர்வ வளர்ச்சியாக தமது மக்களுடைய கூட்டு உரிமையை வலியுறுத்துவதே அதிகம் பொருத்தமாயிருக்கும்.






## இந்தோ - பசுபிக் விவகாரமும்

# பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடும்

அ.நிக்ஸன்

இந்தோ -பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் இலங்கையைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றியமைக்க முற்படும் அமெரிக்க, இந்திய மற்றும் சீன அரசுகள், இலங்கைக்கு அதிகளவு நிதியுதவிகளை ஏட்டிக்குப் போட்டியாக வழங்கி வருகின்றன. இதனையே கொழும்பில் உள்ள இந்த நாடுகளின் தூதரகங்கள் வெளியிடும் அறிக்கைகள் காண்பிக்கின்றன. அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்படாமலும் நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இந்த வல்லாதிக்க நாடுகள் நம்புவதுபோல் இந்தோ-பசுபிக் பாதுகாப்பு என்று காண்பிக்கப்பட்டாலும் வடக்கு, கிழக்கில் தமிழர் முஸ்லிம்களின் இனப் பரம்பலைக் குறைக்கும் நோக்கிலேயே இலங்கை, பாதுகாப்பு அமைச்சுக்கான நிதியைக் கையாளுகின்றது.

போர்க்குற்றம், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகக் கூறியே அமெரிக்கா 2011 ஆம் ஆண்டு இலங்கைக்கு வழங்கவிருந்த 13 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை நிறுத்தியிருந்தது. இதன் பின்னணியிலேயே 2012 ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதன் பின்னரான சூழலில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச அமெரிக்க, இந்திய நலன் சார்ந்து திருகோணமலைத் துறைமுகம் மற்றும் எண்ணெய்க் குதங்களை வழங்குவது உள்ளிட்ட பல விடயங்களுக்கு ஒப்புக்கொண்டிருந்தார். இதன் பின்னணியிலேயே அமெரிக்கா மீண்டும் 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் மனிதாபிமான உதவிகள் என்ற அடிப்படையில் இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்க ஆரம்பித்தது. அப்போது கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதுவர் இலங்கைக்கு மீண்டும் நிதியுதவி வழங்குவது பற்றிச் செய்தியாளர்களிடம் விளக்கியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இருந்து இன்று வரையான வரவு- செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கே அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. போர் இல்லாத சூழலில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவு நிதி எதற்கு ? என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். சென்ற ஆண்டில் இருந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் நாடாளுமன்றத்தில் இந்தக் கேள்வியை முன்வைக்கிறது.

ஆனால் பிரதான சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியோ, ஜே.வி.பியோ இதுவரையும் அவ்வாறான கேள்விகளை முன்வைக்கவில்லை. 2015 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டுவரையான ரணில் - மைத்திரி அரசாங்கத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டபோது மஹிந்த தலைமையில் எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவும் கேள்வி எழுப்பவில்லை. ஜே.வி.பி அது பற்றி ஒப்பாசாரத்துக்காகப் பேசியிருந்தது.

ஆகவே போர் இல்லாதவொரு சூழலிலும் முப்படையினரையும் பலமாக வைத்திருக்க வேண்டுமென்பதில் பிரதான சிங்களக் கட்சிகள் ஒரேமுடிவில் இருக்கிறார்கள் என்பது தெளிவு. இந்தோ-பசுபிக் பாதுகாப்பை மையமாகக் கொண்டு அமெரிக்க, இந்திய அரசுகள் வெவ்வேறு அபிவிருத்திகளுக்காக நிதிகளை வழங்கும்போது சீனா அதனைவிடக் கூடுதலாகக் கொடுக்கின்றது.

ஆகவே பாதுகாப்பு அமைச்சுக்கான அதிகளவு நிதி ஒதுக்கீட்டு விடயத்தில் அமெரிக்க, இந்திய மற்றும் சீன அரசுகளின் ஆதரவு ஏட்டிக்குப் போட்டியாக இருக்கின்றது என்பது இங்கே தெளிவாகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியமும் ,சீன அபிவிருத்தி வங்கியும் மொத்தமாக இலங்கைக்கு ஆயிரத்து 80 மில்லியன் அமெரிக்க டொலரை, கடந்த ஜூன் மாதம் வழங்கியிருந்தன. சர்வதேச நாணய நிதியத்தினால் 780 மில்லியன் அமெரிக்க டொலரும் சீன அபிவிருத்தி வங்கியின் மூலம் கடனாக 300 மில்லியன் அமெரிக்க டொலரும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் 150 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி அமெரிக்காவினால் வழங்கப்பட்டிருக்கின்றது. (ஆனால் இது பற்றி அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஏதும் வெளியிடவில்லை.)

இலங்கையிடம் தற்போது கையிருப்பிலுள்ள அமெரிக்க டொலர் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி இந்த மாத ஆரம்பத்தில் அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தது. அதன்படி, இலங்கையில் அமெரிக்க டொலரின் கையிருப்பு 937 மில்லியன். சர்வதேச நாணய நிதியம் தனது உறுப்பு நாடுகளுக்குப் பணமாக மாற்றக்கூடிய எஸ்.டி.ஆர்(S.D.R) எனப்படும் விசேட மீள்செலுத்துதல் உரிமைகளின் படி நிதியுதவி வழங்கி வருகிறது. அதன்படி இலங்கையினால் 787 மில்லியன் அமெரிக்க டொலர் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் , மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் அமெரிக்க, இந்திய மற்றும் சீன அரசுகளினால் வழங்கப்பட்ட நிதியுதவிகள் மத்திய வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதைவிட, மேலும் அதிகமாகவே இருக்கும் என்பதைத் தூதரங்கள் வெளியிட்ட அறிக்கைகளின் மூலம் அறியலாம்.

மிக விரைவில் சீன அபிவிருத்தி வங்கியின் கடன் தொகை மேலும் கூடுதலாகக் கிடைக்குமென நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். ஆகவே இதனடிப்படையில் நோக்கினால் இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் குறிப்பாக இலகுக் கடன், நன்கொடை போன்றவை பற்றிய தகவல்கள் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகால வரவு- செலவுத் திட்டத்தில் உரிய முறையில் காண்பிக்கப்படவில்லை என்பது கண்கூடு. ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் மாறி மாறி ஆட்சியமைக்கும் பிரதான சிங்களக் கட்சிகள் இந்த விடயங்களை வரவு- செலவுத் திட்ட விவாதங்களில் வெளிப்படுத்த விரும்புவதில்லை.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச சமர்ப்பித்த வரவு -செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு உதவிகள் கிடைத்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் அதன் முழுமையான விபரங்கள் அதில் இல்லை. 2022 ஆம் ஆண்டுக்கான அரச செலவினமாக 250,534 கோடியே 65 லட்சத்து 58 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் வழக்கத்துக்கு மாறாக பாதுகாப்பு அமைச்சை இரண்டு அமைச்சுக்களாகப் பிரித்து 2022 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினமாக பாதுகாப்பு அமைச்சுக்கு 37,304 கோடியே 58 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 10,655 கோடியே 86 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுமென மொத்தமாக 47,960 கோடியே 45 லட்சத்து 10 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதாவது இரண்டரை இலட்சம் கோடியில் அண்ணளவாக 50 இலட்சம் கோடி பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2021 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினமாக 35,515கோடியே 92 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2021 ஆம் ஆண்டைவிட 2022 ஆம் ஆண்டுக்கு 12,444 கோடியே 52 லட்சத்து 60 ஆயிரம் ரூபா அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்காக சுகாதார அமைச்சுக்கு 15947 கோடியே 59 லட்சத்து 93 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2022 ஆம் ஆண்டுக்காக சுகாதார அமைச்சுக்கு 15352 கோடியே 89 லட்சத்து 98 ஆயிரம் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. இது 594 கோடியே 69 லட்சத்து 95 ஆயிரம் ரூபா குறைவானதாகும். 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்கு தீர்வை முன்வைப்பதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆனால் கல்வி அமைச்சுக்கு 2021 ஆம் ஆண்டுக்கு 12,654 கோடி ரூபாவை ஒதுக்கியிருந்த நிலையில் 2022 ஆம் ஆண்டுக்காக 12,760 கோடியே 50 லட்சம் ரூபாவையே ஒதுக்கியுள்ளது. அதாவது 110 கோடியே 50 லட்சம் ரூபாவே அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் குறைந்தது 250 கோடி ரூபா தேவையென கல்வி அமைச்சு கடந்தவாரம் கூறியிருந்த நிலையில், குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

## வரவு - செலவுத் திட்டத்தில் மூடிமறைக்கப்படும் வெளிநாட்டு நிதி



(11 ஆம் பக்கம் பார்க்க)

பால் இன்று நேற்று நாளை 5

எஸ். கிருபானந்தகுமாரன்[ MVSc]
கால்நடை மருத்துவர்



# பாலுற்பத்தியும் கால்நடை உணவுகளும்

மாடு, ஆடு போன்ற கால்நடைகள் இயற்கையில் கிடைக்கும் புற்களை செரிமானம் செய்யத் தக்க உணவுக் கால்வாய் தொகுதியை கொண்டவை. குறிப்பாக அவற்றின் அசையூன் இரைப்பையில் உள்ள நுண்ணுயிர்கள் புற்களில் உள்ள நார்ச்சத்தையும் ஏனைய உயிர்ச்சத்துகளையும் சமிபாடடையச் செய்வதன் மூலம் தேவையான சத்துக்களை பெற்றுக் கொள்கின்றன.

ஆரம்ப காலத்தில் இயற்கையில் மாடுகள் முற்று முழுதாகப் புற்களையும் மர இலைகளையும் செடிகளையும் நம்பியே வாழ்ந்தன. மனிதனின் பயன்பாட்டுக்கு கால்நடைகள் வந்த பின் மேலதிகமாக விவசாய மீதிகளையும் வீட்டு உணவுக் கழிவுகளையும் உட்கொண்ட அவை, இன்று அவற்றின் உற்பத்திக்கு அமைய விசேடமாக தயாரிக்கப்பட்ட கால்நடை செறிவு உணவையும் சேர்த்து உட்கொள்கின்றன. அதிக பாலுற்பத்திகளை தரத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ள இன்றைய கால்நடைகள் அதற்கேற்ப தரமான உணவுகளை உண்ண வேண்டியது அவசியமாகும். இலங்கையின் கால்நடைகளைப் பொறுத்தவரையில் நவீன உணவு முறைகள் மிகக் குறைவாகவும் பாரம்பரியமான முறைகள் அதிகளவிலும் பயன்படுத்தப்படுகின்றன. பாலுற்பத்தியில் தன்னிறைவு காண முடியாத நிலைக்கு கால்நடைகளுக்கு வழங்கப்படும் மேற்படி பொருத்தமற்ற உணவு முறைகளும் காரணமாகும்.

## மேய்ச்சல் முறை

இயற்கையில் உள்ள புல்வெளிகளிலும், காடுகளிலும் மலை அடிவாரங்களிலும் குள,ஆற்றங் கரைகளிலும் வயல் வெளிகளிலும் வீதி ஓரங்களிலும் புகையிரத வீதி ஓரங்களிலும் வெற்றுக் காணிகளிலும் உள்ள புற்களை அவை மேய்கின்றன. மேற்படி புற்கள் ஊட்டச் சத்துக் குறைந்தவை. வெறுமனே வயிற்றை மாத்திரம் நிரப்புபவை. அதிக பாலுற்பத்தி செய்யாத நாட்டு மாடுகளுக்கு அவை ஓரளவுக்குப் பொருத்தமானவை. எனினும் அதிக பாலை தரக் கூடிய உயர் ரக, மற்றும் கலப்பு மாடுகளின் ஊட்டச் சத்து தேவையை பூர்த்தி செய்ய முடியாதவை. இலங்கையின் கால்நடை உணவில் 90 % அதிகமாக இந்தப் பாரம்பரிய இயற்கைப் புற்களை உண்பதன் மூலமே நிறைவு செய்யப்படுகிறது. இலங்கையின் மேய்ச்சல் புல் வெளிகளில் உள்ள புற்களின் அடர்த்தி ,உற்பத்தி அளவு தரம் மிக மிகக் குறைவானது. [இலங்கை புல் வெளிகளின் உற்பத்தி 6811MT/ ஹெக்டேயராக் காணப்படுவதோடு இந்தியாவின் பல புல்வெளிகளின் உற்பத்தி 3810MT/ ஹெக்டயராகக் காணப்படுவதை ஒப்பிடலாம்.]

இந்தப் புற்களைப் பொறுத்த வரையில் மழை காலத்தின் பின் அதிக அளவிலும் ஊட்டசத்து மிக்கதாகவும் கிடைப்பதோடு வறட்சியான காலத்தில் குறைவாகவும் சத்து குறைந்ததாகவும் கிடைக்கின்றன. வீதி ஓரங்களிலும் புகையிரதப் பாதை ஓரங்களிலும் உள்ள புற்களை உண்ணச் செல்லும் பல கால்நடைகள் விபத்துக்கு உள்ளாகுவதையும் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதையும் பல இடங்களில் அவதானிக்கமுடிகிறது. பெரும்போக நெற்பயிர்ச்செய்கை செய்யப்படும் காலப்பகுதி மழை காலம் என்பதால் நீர் நிரம்பிய குளங்கள் மற்றும் ஆறுகளின் ஓரங்களில் ,நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மேய்ச்சல் செய்ய முடியாது என்பதுடன் வயல்கள் பயிர்களால் நிரம்பிய காரணத்தால் அங்கும் மாடுகள் மேய முடியாது. அதிகளவு மாடுகளை அந்தப் பகுதிகளில் வளர்ப்பவர்கள் மேய்ச்சலுக்காக அவற்றை வேறு பகுதிக்கு கொண்டு செல்வதைக் காண முடியும். இந்தக் காலத்தில் மாடுகளின் உடல் நலிவடைந்து பால் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படுவதோடு மாடுகளில் பல தொற்று நோய்களும் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. [ பரம்பிஸ்டோமியோசிஸ் போன்ற புழுத் தொற்றுகள் ]

## தீவனப் புல் வளர்ப்பு

பொதுவாக கால்நடை வளர்ப்பாளர்களின் கூட்டங்களின் போது மிக முக்கிய பிரச்சனையாக அவர்கள் கூறுவது மேற்படி புற்கள் காணப்படும் மேய்ச்சல் தரைப் பிரச்சனையை [Grazing lands] பற்றியதே. முன்னர் அதிகமாகக் காணப்பட்ட இயற்கையான மேய்ச்சல் தரைகளின் அளவு குறைவடைய பாரம்பரியமாக அவற்றை நம்பி வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு உணவு இல்லாத நிலை ஏற்படுகிறது. இலங்கையில் தீவனப் புற்களை பயிர்ச் செய்து மாடுகளுக்கு உணவூட்டும் முறை 10 % வரையிலேயே காணப்படுகிறது. பயிர் செய்வதில் உள்ள நேரப் பிரச்சனை, நிலப் பற்றாக்குறை ,வேலையாள் கிடைப்பதிலுள்ள சிக்கல் மற்றும் புற்களை வளர்த்து மாடுகளுக்கு வழங்கி எடுக்கப்படும் பாலின் விலை குறைவாகவும் தேறிய இலாபம் குறைவாகவும் இருப்பதாலும் பலர் இந்த வேலையை செய்வதில் பின்னடிக்கின்றனர். [பாரம்பரியமாக மாடுகளை வளர்த்து வந்த குடும்பங்களின் இளம் தலைமுறையினர் வேறு தொழில்களுக்கு மாறி விட்டதை அவதானிக்க முடிகிறது. பல பகுதிகளில் மாடுவளர்ப்பு முதியவர்களின் தொழிலாகக் கருதப்படுவதோடு அவர்களின் பின் அந்த மாடுகள் விற்கப்படுகின்றன] .

பல வருடங்களாக அரசாங்கமும் [ கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஊடாக] பல தனியார் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளும் புல் வளர்ப்பை ஊக்குவிக்க பல செயற்பாடுகளையும் திட்டங்களையும் ஒழுங்குபடுத்திய போதும் [ புற் துண்டங்கள் வழங்குதல்,மானியம் வழங்குதல் ,புல் நறுக்கும் இயந்திரம் வழங்குதல், தண்ணீர் இறைக்கும் வசதிகள் வழங்கல், ஊறுகாய்ப் புல் செய்ய உதவி புரிதல், பயிற்சிகளை வழங்குதல்] மக்களின் ஈடுபாடின்மை மற்றும் இந்தப் பகுதியில் மேற்கூறிய காரணங்களால் இன்றைவரையில் இந்த முயற்சிகள் வெற்றியாளிக்காது காணப்படுகின்றன.

இலங்கையில் அதிக பால் உற்பத்தியைச் செய்யும் சிறு பண்ணையாளர்கள் மற்றும் மலையக தோட்ட தொழிலாளர்கள் தமது கால்நடைகளை வளர்க்க மற்றும் அவற்றுக்கு தீவனச் செய்கையை மேற்கொள்ளப் போதிய நிலமில்லாததால் தரமான உணவு அளிக்க முடியாது உள்ளனர். அதாவது அவர்களின் கால்நடைகள் தமது உச்ச உற்பத்தியைக் காட்ட முடியாது காணப்படுகின்றன. [போதிய நிலம் இருக்கும் பட்சத்தில் இன்னும் அதிக உற்பத்தியை அவை தரக் கூடும்]

## விவசாய கழிவுகள் மற்றும் வர்த்தக விலங்கு உணவுகள்

புற்களுக்கு மேலதிகமாக விவசாயக் கழிவுகளான வைக்கோல்,கரும்புத் தோகை, உளுந்து,பயறு, கடலை பயிர்களின் கொடிகள் அவற்றின் மீதிகள், வீட்டு உணவுக் கழிவுகளை உணவாக வழங்குகின்றனர். விவசாயப் பொருட்களான தவிடு, எண்ணெய் மீதிகளான புண்ணாக்கு, கரும்பு சக்கை , மதுபான





ஆலைக் கழிவுகள் போன்றவற்றை வழங்குவதோடு அண்மைக் காலத்தில் பரவலாக வர்த்தக ரீதியான உணவுப் பொருட்களும் [ commercial feed] சந்தையில் கிடைக்கின்றன. குறிப்பிட்டளவு பெரிய, நடுத்தர அளவிலான விலங்குணவுத் தொழிற்சாலைகள் [ Feed processing plants] இலங்கையில் காணப்படுகின்ற அதே வேளை உள்ளூர்ப் பண்ணையாளர்களும் தமது சக்திக்கு ஏற்ப செறிவுணவுகளைத் தயாரித்துக் கொள்கின்றனர். வர்த்தக உணவுகளின் விலை அதிகரிப்பு, பாலின் விலைக் குறைவு போன்ற காரணங்களால் வர்த்தக ரீதியான உணவுகளை மிக மிகக் குறைவாகவே பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்கு வழங்குகின்றனர். சோயா , மீன் உணவுகள் ,சோளம் என பல மூலப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்ற அதேவேளை தவிடு,சோளம், புண்ணாக்கு போன்ற சில பொருட்கள் உள்ளூரில் பெறப்படுகின்றன. தவிடு, புண்ணாக்கு போன்ற பொருட்களை கோழி [ அதிகளவில் ] , பன்றிகளின் உணவுக்கு பயன்படுத்துவதாலும் தரமானவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாலும் கால்நடை உணவுத் துறை போட்டிகளைச் சந்திக்கின்றது.

மேலும் கால்நடை உணவுக்கு இறக்குமதி வரி விதிக்கப்படுவதும் இந்தத் துறையை அதிகம் பாதிக்கின்றது. உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கம் 2020 ஆம் ஆண்டு முதல் சோளத்தின் இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளது. மனித நுகர்வுக்கு பயன்படும் அரிசியை விலங்கு உணவைக் காரணம் காட்டி வியாபாரிகள் பதுக்குவதை தடுக்க அரசாங்கம் அரிசியை விலங்கு உணவுக்கு பயன்படுத்துவதையும் தடை செய்துள்ளது. பல மூலப் பொருட்களின் இறக்குமதி தீர்வை அதிகரிப்பு, உள்ளூரில் செய்கை பண்ணப் படும் சோளப்பயிர்ச் செய்கைக்கான நிலப் பற்றாக்குறை, காடழிப்பு தொடர்பான சூழலியல் எதிர்ப்புகள் மற்றும் அண்மைக் காலத்தில் படைப் புழு தாக்கத்தால் பாதிப்பை சந்தித்து முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ள அதே வேளை, கொவிட் தொற்றின் பின்னரான பொருளாதார, வர்த்தக இறுக்க நிலை காரணமாகவும் இந்த துறை மிகப் பெரும் சவால்களை இன்று எதிர் நோக்குகிறது.

## வைக்கோலை உணவாகப் பயன்படுத்தல்

இலங்கை ஒரு விவசாய நாடு என்ற வகையில் தாராளமாக வைக்கோல் கிடைக்கிறது. என்னினும் அதிகளவான வைக்கோல் உரமாகவே பயன்படுகிறது என்பதுடன் மிகக் குறைவாகவே விலங்கு உணவாகப் பயன்படுகிறது. அண்மைக் காலத்தில் விவசாய அறுவடையில் பாவிக்கப்படும் இயந்திரங்கள் காரணமாக வைக்கோல் விலங்குகள் உண்ண முடியாத வகையில் சிதைக்கப்பட்டு வீணடிக்கப்படுகிறது. இயந்திரங்களில் அறுவடை செய்யப்பட்ட வைக்கோலை மாடுகள் விரும்புவதும் கிடையாது. ஒப்பீட்டளவில் வைக்கோல் ஊட்டச்சத்துகள் குறைந் தது என்ற போதும் வைக்கோலை உணவாகக் கொடுக்கும் பண்ணையாளர்கள் நேரடியாகவே அதனைக் கொடுக்கின்றனர். யூரியா செறிவூட்டும் முறை மூலம் வழங்கினால் அதிக ஊட்டச் சத்தைப் பெற முடியும் என்ற போதும் பலர் அதனைச் செய்வது கிடையாது.

### இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்ட புல் வகைகள்

கினியா புல் [Type A panicum maximum]

இந்த வகை 1820ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப் பட்டு பல இடங்களில் பரவலாக காணப்படுகிறது. மத்திம அளவில் பலனைத் தரும். [ CP7.5%,ME 6.8MJ]

ஹைபிரீட் நேப்பியர் - Hybrid Napier/ CO3/CO4[ penisetum purpureum*penisitum americans]

தமிழகத்தின், கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட இந்த மேம்படுத்தப்பட்ட புல் ரகம் 1999 ஆம் ஆண்டில் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்டது. அதிக புரதம்,அதிக உற்பத்தி,நோய் மற்றும் பீடைகளின் மீது எதிர்ப்பு தன்மை,விலங்குகளால் அதிகம் விரும்பி உண்ணும் தன்மையால் பரவலாக விரும்பிப் பாவிக்கப்படுகிறது. co5 [super napeir] போன்ற மேம்படுத்தப்பட்ட வகைகளும் தற்போது கிடைக்கின்றன. இவற்றுக்கு மேலதிகமாக bracharia புல்லும் ,அசேலா பாசியும் கால்நடை வளர்ப்பில் பயன்படுகின்றன. கிளிசிறீயா,இபில் இபில் போன்ற அதிக புரதச் சத்தை கொண்ட மர அவரைத் தாவரங்களும் கால்நடை வளர்ப்பில் பயன்படுத்தப்படுகின்றன.

## நவீன உணவூட்டல் நுட்பங்கள் மற்றும் வாய்ப்புக்கள்

இவற்றுக்கு மேலதிகமாக பெரும் பண்ணைகளில் TMR [Total mixed ration] எனப்படும் புல் மற்றும் செறிவு உணவை சரியான விகிதத்தில் கலந்து கொடுக்கும் முறையும் தற்போது அறிமுகப் படுத்தப்படுகிறது. இதனை சிறிய மற்றும் நடுத்தரப் பண்ணையாளர்களும் கடைப்பிடிக்கலாம்.

அண்மைக் காலத்தில் பல பண்ணைகளில் ஊறுகாய்ப் புல்[ silage] தயாரித்து வறட்சியான காலத்தில் பயன்படுத்துவதோடு ஹைட்ரோபோனிக்ஸ் (hydroponics) எனும் நிலமில்லாத் தீவனப் பயிர் செய்கையும் மேற்கொள்ளப்படுகிறது. ஊறுகாய்ப் புல் மற்றும் ஹைட்ரோபோனிக்ஸ் முறைகளில் தீவன பயிர்களை வளர்த்து தேவைப்படும் பண்ணையாளர்களுக்கு விற்க கூடிய ஒரு தொழிலாக மாற்றி அதிக வருமானத்தை பெற முடியும். இதற்கு அரசாங்கமும் பல அமைப்புகளும் மானியங்களையும்,தொழில் நுட்ப அறிவையும் வழங்குகின்றன. அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக ரீதியான விலங்கு உணவு தொழிற்சாலைகளுக்கும் [ feed mills] பல உதவி திட்டங்கள் உள்ளன. இவற்றை பண்ணையாளர்களும் வியாபாரிகளும் கருத்திற் கொண்டால் இந்தத் துறையில் மாபெரும் முன்னேற்றத்தை காண முடியும். சகலத்துக்கும் வெளி நாடுகளை தங்கியிராமல் எமது நாட்டிலேயே உற்பத்தி செய்து அந்நியச் செலாவணி இழப்பை தவிர்ப்பதோடு நாமும் தன்னிறைவு காணலாம்.

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## ஜே.வி.பி. எழுச்சி



இலங்கையின் அரசியல் நிலைவரம் தொடர்பில் முக்கியமானதொரு சர்வதேச அமைப்பு ஆய்வை நடத்தியுள்ளது. தற்போது அந்த ஆய்வின் முடிவு உத்தியோகபூர்வமற்ற முறையில் வெளியாகியுள்ளது.

அரசுமீது மக்கள் அதிருப்தியில் இருப்பது அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கான காரணங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

அத்துடன், தற்போது 3 வீதமாக இருக்கும் ஜே.வி.பியின் வாக்குவங்கி அடுத்த தேர்தல் வரும்போது 13 வீதம் வரை அதிகரிக்கக்கூடும் எனவும், 12 வீதமாக உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வாக்குவங்கி 21 வீதம்வரை அதிகரிக்கும் எனவும் ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

## மாற்றம் உறுதி

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் முடிவடைந்ததும் அமைச்சரவையில் மாற்றம் இடம்பெறுவது உறுதியாகியுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. சிலரிடமிருந்து அமைச்சுப் பதவிகள் பறிக்கப்படவுள்ளன. அதேபோல முக்கியமான இரு இராஜாங்க அமைச்சர்கள் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. மொட்டுக் கட்சியின் பொலநறுவை மாவட்ட தலைவர் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் புத்தளம் மாவட்ட தலைவர் சனத் நிஷாந்த ஆகிய இருவருமே அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவுள்ளனர் என அறிய முடிகின்றது.






## மஹிந்த 'அவுட்'?

பிரதமர் மஹிந்த ராஜபக்ச விரைவில் செயற்பாட்டு அரசியலுக்கு விடைகொடுப்பார் என்ற தகவல் மீண்டுமொரு முறை வெளியாகியுள்ளது.

இதன்படி பிரதமர் பதவியை அவர் இராஜினாமாச் செய்யக்கூடும் எனவும், புதிய பிரதமராக சமல் ராஜபக்ச நியமிக்கப்படக்கூடும் எனவும் தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

அத்துடன், பஸில் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோரின் பெயரும் புதிய பிரதமர் பதவிக்கான பட்டியலில் இருப்பதாகப் பேசப்படுகின்றது. பிரதமர் பதவியை மஹிந்த ராஜினாமா செய்யவுள்ளார் என்ற தகவல் இதற்கு முன்னரும் வெளியானது. தேசிய நாளிதழ்களிலும் இது தொடர்பான செய்திகள் வெளியானதையடுத்து பிரதமர் அலுவலகம் அதனை நிராகரித்தது.

எனினும், மஹிந்தவின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டு அவரை ஓய்வில் இருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதற்கமையவே அவர் பிரதமர் பதவியைத் துறப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு பிரதமர் பதவியை துறந்தாலும், அவரை கௌரவிக்கும் விதத்தில் அரச உயர்மட்ட அந்தஸ்துடைய பதவி யொன்று வழங்கப்படலாம் எனவும் கதை அடிபடுகின்றது.

## தாவல் ஒத்திவைப்பு

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் ஆளுங்கட்சியிலுள்ள மூத்த அரசியல்வாதிகள் சிலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர்.

சாதகமான பல வழிமுறைகள் இருந்தும், மீண்டும் - மீண்டும் நெருக்கடிக்குள் சிக்கும் விதத்தில் அரச மேல் மட்டம் முடிவுகளை எடுப்பதாலும், சில உறுப்பினர்கள் பொறுப்பற்ற விதத்தில் கருத்துகளை வெளியிட்டுவருவதாலும், மேலும் சிலர் காரணங்களாலும் அவர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர் என அறியமுடிகின்றது.

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் சந்திர வீரக்கொடி ஆகியோர் தற்போது அரசை வெளிப்படையாகவே விமர்சித்துவருகின்றனர். மேலும் சில இன்னும் வெளிப்படையாக விமர்சனக் கணைகளைத் தொடுக்காவிட்டாலும், தமக்கு நெருக்கமானவர்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்திவருகின்றனர்.

பங்காளிக்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் அரசுக்கு கடும் நெருக்கடி கொடுத்துவரும் நிலையில், மொட்டுக் கட்சியிலுள்ள மூத்த உறுப்பினர்களும் தற்போது போர்க்கொடி தூக்கியுள்ளமை தெற்கு அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சியிலிருந்து 41பேர் வெளியேறத் தயாராகிவருகின்றனர் என்ற தகவலை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவும் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

உடனடியாக இவர்கள் அரசிலிருந்து வெளியேறாவிட்டாலும்கூட தக்க தருணம்வரும்போது அதிரடியான நகர்வுகளை கையாளக்கூடும் எனவும் தெரியவருகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம்வாசிப்புமீதான விவாதத்தின்போது ஆளுங்கட்சியிலிருந்து எதிரணிக்கு செல்வதற்கு இந்த 41 உறுப்பினர்களும் தயாராக இருந்துள்ளனர். இதற்கான பேச்சுகளும் இடம்பெற்றுள்ளன.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் எதிரணி பக்கம் வரவேண்டாம் என எதிரணியில் இருந்து சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாம்.

கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியால் அரசு திண்டாடிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் இந்த அரசியல் மாற்றம் இடம்பெற்றால் பின்னடைவுக்கு சதியே காரணம் என கதை கட்டப்படலாம். எனவே, தக்க தருணம்வரும்போது இணையுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாம்.

எனவே, மேற்படி 41 பேரும் பட்ஜட்டை ஆதரித்து இன்னும் சிறிது காலம் மொட்டு அரசுடன் இணைந்து பயணிப்பார்கள் என்பதே 'லேட்டஸ்ட்' தகவல்.



# வாய்ப்புக்களை தவறவிடலாகாது



ஒரு இளைஞன் விவசாயி ஒருவனின் மகளை திருமணம் செய்ய விரும்பி அவனிடம் சென்று அனுமதி கேட்டான். அதற்கு அந்த விவசாயி அந்த இளைஞனைப் பார்த்து சொன்னான். இளையனே நீ என்மகளை மணக்க விரும்பினால், நான் வளர்க்கும் மூன்று காளைகளை அடுத்தடுத்து அவிழ்த்து விடுவேன். அதில் ஏதாவது ஒன்றின் வாலை நீ தொட்டால் போதும், என் மகளை மணமுடிக்க சம்மதிக்கிறேன் என்று சொல்ல அவனும் ஒத்துக் கொண்டான். மாடுகள் அடைக்கப்பட்டிருந்த தொழுவத்தின் கதவுகள் திறக்கப்பட்டது.

முதலில் ஒரு மாடு வந்தது. மிகவும் முரட்டுத்தனமான தோற்றம் கொண்ட அந்த மாடு சீறியபடி பாய்ந்து வந்தது.

அதைப் பார்த்த இளைஞன் வாலைப் பிடிக்க தயங்கி அடுத்த மாட்டை பார்க்கலாம் என்று விட்டுவிட்டான்.

சிறிது நேரத்தில் அதைவிட பெரிய மாடு வெளியே ஓடி வந்தது. பார்க்கவே பயங்கரமான தோற்றம்.

அவனை முட்டிமோதி கொல்வதற்காக கடும் வேகத்துடன் ஓடி வந்தது. இளைஞன் அச்சப்பட்டு இதுவும் வேண்டாம், மூன்றாவதைப் பார்க்கலாம் என்று முடிவு செய்து வேகமாக ஓடி பாதுகாப்பான இடத்தில் நின்றுகொண்டான்.

ஓடி வந்த மாடு அதே வேகத்தில் வேலிக்கு வெளியே ஓடிச் சென்றது.

மூன்றாவது முறையாக கதவு திறக்க, அப்போது வெளியே வந்த மாட்டைப் பார்த்து இளைஞன் முகத்தில் புன்சிரிப்பு வந்தது. அவன் வாழ்க்கையில் பார்த்ததில் இதுவே மிகவும் பலவீனமான மாடு. எலும்பும் தோலுமாய் பார்ப்பதற்கே பரிதாபமாக ஓட முடியாமல் ஓடி வந்தது. இந்த மாட்டை விடக் கூடாது. இதைத்தான் நான் பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்து அதன் வாலைத் தொட தயாராக இருந்தான்.

மாடு அருகில் வந்ததும், ஒரு தாவு தாவி மாட்டின் வாலைத் தொடப்போனான். ஆனால் அதிர்ச்சி அடைந்தான். ஆம் அந்த மாட்டுக்கு வாலே இல்லை. எமது வாழ்க்கையும் இப்படித்தான். அது பல வாய்ப்புகளை எமக்கு வழங்குகிறது. சில வாய்ப்புகள். எளிதாகத் தோன்றலாம். சில வாய்ப்புகள் கடுமையாக இருக்கலாம். ஆனால் எளிதானவற்றைக் கண்டு ஆசைப்பட்டு, மற்றது கடுமையாக உள்ளது என்று நம்பி அதைத் தவறவிட்டால் அந்த வாய்ப்பு மறுபடியும் எமக்கு வராது. ஆகவே, வாய்ப்புகளை பயன்படுத்துவதில்தான் உங்கள் திறமை இருக்கிறது.

## பழமொழிகள்

**அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு**
ஒற்றுமையே பலம்

**அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்**
விடாமுயற்சி பலன் தரும்

**ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு**
எதையும் அளவோடு செய்தல் வேண்டும்

**உப்பிட்டவரை உள்ளளவும் நினை**
நன்றி மறவேல்

**ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
இளமையிற் செய்

**ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்**
ஒன்றை வைத்து மற்றையதன் இயல்பை அறியலாம்

**காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு**
அவரவர் குழந்தைகள் பெறுமதியானவர்கள்

**கடுகு சிறிதானாலும் காரம் பெரிதும்**
சிறியதின் மகிமை

**காற்றுள்ள போதே தூற்றிக் கொள்**
சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது

**குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்**
மனசாட்சி உறுத்தும்

*வ.ஜானுஷா, தரம்-7*
*யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.*



## வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



## சிறுவர் கைவண்ணம்





P.இனுஷியன்,
கார்மேல் பாலர்
பாடசாலை.



க.ஆதிரை,
தரம்: 4
யா/சுழிபுரம் கிழக்கு
அ.மி.த.க.பாடசாலை



ஜெ.அனுசாந்
84/2 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.



றெ.ஹெமோஸ்,
தரம்: 9E
சென்.பற்றிக்ஸ் கல்லூரி.



சம்யுக்தா சதீஸ்,
தரம்: 7B
யா/வேம்படி மகளிர் கல்லூரி.



ச.மாயோன்,
தரம்: 5
யாழ்ப்பாணக் கல்லூரி.





ச.கர்மசாயினி,
தரம்: 5
யா/ வயாவிளான் ஸ்ரீ
வேலுப்பிள்ளை வித்தியாலயம்

# மானத்தி



03

சஞ்சீவி தொடர் கதை

○ கருணை ரவி

பனியைச் சூரிய ஒளி கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் கொண்டிருந்தது. தலையில் மொட்டாக்குப் போட்டபடி கனகம் றோட்டுக் கரையில் கருவாட்டை காயப்போட்டுக்கொண்டிருந்தாள். இன்று அவள் மீன்களைத் தெரிக்கப் போகவில்லை. சொல்லாமல் நின்றதை நினைத்து பயந்தபடி கருவாடுகளைப் பரவினாள். மீன்கள் கனக்கப் பட்டால் வேளைக்கு வரும்படி அந்தோனி பூறாட்டியிடம் சொல்லிவிடுவான். சொல்வதற்கு இப்ப பூறாட்டியில்லை..

வள்ளிநாயகி வந்துகொண்டிருந்தாள். அவள் கிட்டவந்ததும், தான் வராததை சம்மாட்டிக்குச் சொல்லும்படி கனகம் சொன்னாள்.

" உனக்கு ஒரு விசயம் தெரியுமே...?

" என்ன விசயம்?"

கொண்டு வந்த கூடையை கனகத்துக்கு அருகில் வைத்துவிட்டு வள்ளிநாயகி இருந்தாள். கால் சுண்டி வலித்தது. கெழுத்துமீன் முள்ளுக் குத்தி இன்றோடு இரண்டு நாட்கள். மரமஞ்சள் அவித்துக் குடித்துவிட்டு வந்தாள். குனிந்து வலித்தகாலை தடவிக்கொண்டு வள்ளிநாயகி இருக்க, கனகம் மெதுவாகக் கேட்டாள்

" என்ன விசயம்?"

காலில் பிசுபிசுத்த சுரியை கையால் துடைத்துவிட்டு சீலையை உயர்த்தி அடிப்பாவாடையில் கையைத் துடைத்தவள்

" பூறாட்டி க்கு மரியதாஸ் கட்டுமர மறைவிலை அடிச்சவனாம்."

" ஏன்ரி அடிச்சவன்?"

" பூங்கொடியப் பாத்து பூறாட்டி சிரிச்சவனாம்"

" அவன் எல்லாரையும் தானே பாத்துப் பல்லுக்காட்டுறவன். ஏனாம். தன்னைப்பாத்து இளிக்கேலையாமே?"

" அவளைத் தூக்கப்போறான் போலை மரியதாஸ்"

சொல்லிவிட்டு வள்ளிநாயகி எழுந்தாள். கனகம் கருவாடு கொண்டுவந்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு வேகமாக நடந்தாள். அவளுக்கு மரியதாஸ்மேல் கோபம் வந்தது. மரியதாஸ் நினைத்தால் எதையும் செய்வான். மரியதாஸின் வலைக்குள் பூங்கொடி விழுவதை கனகம் விரும்பவில்லை.

கந்தவிக்கிழவன் வந்தார். அவரைக் கண்டதும் கனகத்தின் முகத்தில் வாஞ்சை துளிர்த்தது. பூறாட்டிக்கு மரியதாஸ் அடித்ததை சொல்லவேணும் போலிருந்தது.

" அண்ணை உன்னோடை ஒருவிசயம் கதைக்கோணும்"

" இந்த வயசிலை என்னோடை என்ன கதை? ஆ, சொல்லு?".

" பூறாட்டிக்கு மரியதாஸ் அடிச்சவனாம்?



" ஏனடிச்சவன் அந்த அப்புறாணிக்கு?"

" அது வந்தண்ணை..."

" என்னடி இழுக்கிறாய்... வேளைக் குச் சொல்லன்?"

" பூறாட்டி பூங்கொடியை திரும்பிப் பாத்தவனாம்"

" அவன் எல்லாரையும்தானே பாக்கிறான். வஞ்சகம், கரவு இல்லாதவன்"

" நானும் அப்பிடித்தான் நினைச்சனான். பூறாட்டி அப்பிடி நடந்தா அதை உங்களுக்குச் சொல்லியிருக்கலாம்தானே...?"

" அதுதானே... அவன் அடிச்சனாடி பூறாட்டி , பொடிச்சியோடை கதைக்கிறான் எண்டுதானே சனங்கள் நினைக்குங்கள்"

கனகத்தின் கதையைக்கேட்டு கொஞ்சநேரம் யோசித்தவர் கையில் இருந்த வலை பொத்துற ஊசியை எடுத்து பற்களைக் கிண்டினார்.

" மரியதாஸ் பெண்பிடிகாரன். பூங்கொடியிலையும் கண் வைச்சிட்டான்."

" என்ன?"

அவர் அதிர்ந்து போனார். அவரின் நாடி நரம்புகள் விறைத்து உடல் உரோமங்கள் நிமிர்ந்து கொண்டிருந்தன.

" கடக்கரேலை சனங்கள் கதைக்கிதுகள் . மரியதாஸ் கண்வச்சா விடமாட்டானெண்டு. பூங்கொடி உங்களுக்கு சாப்பாடு கொண்டு வாற நேரமெல்லாம் பூங்கொடிக்குப் பின்னாலை வாலாட்டுறானாம்"

கிழவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வலை பொத்தும் ஊசியை காதில் வைத்துக்கொண்டு நடந்தார். மரியதாஸ் எதிரே வந்தான். மரியதாஸைக் கண்டதும் கனகம் பயந்தாள். பிள்ளையாரை நேர்ந்தாள். கிழவன் மரியதாஸோடு சண்டை பிடிக்கக் கூடாதென்று அந்தோனியாரை மன்றாடினாள். மரியதாஸ் ஒரு சொறியன், தன்னோடு மல்லுக்கட்டும் ஆட்களை சும்மா விடமாட்டான். ஆட்கள் வைத்து அடித்துவிட்டு தான் நல்ல பிள்ளைமாதிரித் திரிவான்.

அவள் கண்களை மூடாது அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றாள். கிழவன் மரியதாஸை நிமிர்ந்து பார்க்காது கடந்து போனார்.

(வருவாள்)

> கனகம் கருவாடு கொண்டுவந்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு வேகமாக நடந்தாள். அவளுக்கு மரியதாஸ்மேல் கோபம் வந்தது. மரியதாஸ் நினைத்தால் எதையும் செய்வான். மரியதாஸின் வலைக்குள் பூங்கொடி விழுவதை கனகம் விரும்பவில்லை.

## அமுதத் தமிழ் ஊட்டும் ஆர்வமுள்ள ஆசான்களே....!

அமுதத் தமிழ் மொழியை
அன்போடு போதிக்கும்
கண்ணிய ஆசான்கள்
கவனிக்க சில மொழிகள்...!

ஏ,பி,சி கணக்கெடுக்கும்
புள்ளிவிவரப் புண்ணியரின்
புண்பட்ட வழி விலகி
சாதிக்கப் போதிப்பீர்!

தணியாத வாசிப்பு
தளராத செவிச்செல்வம்
ஏணியாய் ஏற்றி வைக்க
பணியாது பணி செய்வீர்!

நாளைய நம்மினத்தை
தாங்கிடும் தலைவர்களை
தகுந்தபடி வடிவமைத்தல்
தமிழாசான் பணியன்றோ?

தமிழ் தாக வேட்கையெழ
தகுந்த வழி கற்பித்தால்
ஏ,பி,சீ சுவர் தாண்டி
சாதிக்க மாட்டாரோ?

தளர்ந்துபோய் தவிக்கும்
நம்தமிழர் சமூகத்தில்
நம்பிக்கை ஒளி பாய்ச்ச
நற்கவிஞர் எழுவாரே!

பாதகப் பழைமைகளை
பாட்டுகளால் வேட்டு வைத்து
பூட்டுகளை உடைக்கின்ற
புதுவழிகள் செய்வாரே!

நம் சமூக நோய்களினை
நல்லபடி குணமாக்க
வல்ல நாவல் சிறுகதைகள்
நாடகங்கள் தருவாரே!

ஊடகத் துறையெங்கும்
உணர்வூட்டும் தமிழாலே
அறியாமை இருள் போக்கி
அற்புதமாய் உழைப்பாரே!

இலக்கியப் புதையல்களை
இளகிய தமிழ் கொண்டு
பாமரரும் பருகவென
சொற்பொழிவு செய்வாரே!

நாளைய இனம் காக்க
நாடி வரும் தலைவர்கள்
தித்திக்கும் தமிழ் கொண்டு
எத்திக்கும் எழுவாரே!

தணியாத தமிழ் மோகம்
தலையெடுக்கும் புது வேகம்
களையாத உம் யாகம்
கருவாகும்!இனி வாரும்!!

இரா.ஜெயக்குமார்

## நாம் வாழ எமக்கொரு நாடு



நாடு வேண்டும்.
நாம் வாழ
நல்ல வீடு
எமக்கு வேண்டும்.

படை வேண்டும்.
நாடு காக்க
நாகம் போல
வீரர் வேண்டும்.

தலைவன் வேண்டும்.
சோர்ந்த போதும்
சோராது நிற்கும்
தீரத்தோடு வேண்டும்.

ஆசிரியர் வேண்டும்.
வலிகள் கடந்து
வழிகள் ஆக்கும்
ஆற்றலோடு வேண்டும்.

மாற்றம் வேண்டும்.
சருகில் இருந்து
பசுமை பெறும்
முயற்சியோடு வேண்டும்.

நூல்கள் வேண்டும்.
நன்றே வாழும்
வழிகள் சொல்லும்
செயலோடு வேண்டும்.

சந்ததி வேண்டும்.
இயல்பு மாறாத
சுயமாக நடந்திடும்
சிந்தையோடு வேண்டும்.

எல்லாம் வேண்டும்.
நாம் தமிழர்
என்ற உணர்வு
மாறாத நாடு வேண்டும்.

நதுநசி

# சொற்சிலம்பம் போட்டி

58



அனுப்புபவர் பெயர்:.......................................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

.....................................................................

கையொப்பம்:.....................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. செய்தி/ தகவல்/ புதினம் 4. இது ஒரு தானிய வகை 6. ஒன்றின் பௌதிக அளவைக் குறிப்பது 8. தட்டுப்போன்ற மெல்லிய உலோகப்படை 10. தாமரை 11. செல்வம் 12. தொடுக்கப்பட்டது 13. வார்த்தைகளின் கூட்டம் 15. ஒரு சத்தம் 16. விரைவு சேவை 17. எருது 18. காற்று (மண்டலம்) வாயு 20. அரற்றல் 21. பாவம் செய்தவன்.

## மேலிருந்து கீழ்

1. தலைமுறை 2. வஞ்சகம் 3. பெயரின் முன்னால் சேர்க்கும் ஒரு மரியாதைச் சொல் 4. வைராக்கியம் 5. அப்பா, அம்மா, மகன், மகள் ஒன்று சேர 7. (சுறாமீன்) ராசி 9. உப்புப் போராட்டு காயவைத்த மீன் 12. சேறு 14. எல்லாம் 15. சிறிய கவிதைவடிவம் 16. தடி 17. வைதல் 18. இது ஒரு முற்கால ஆயுதம் 19. உலகம்

### சொற்சிலம்பம் போட்டி 57 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அகம்பாவம் 6. சனி 7.வட 8. கட 9. அலம்புதல் 11. பாமரன் 13. வலி. 14. விதம் 15. என 17. தலை 18. விரும்பல் 20. கொடுமை 21. கல 22. சடுதி 23. கல்வி

**மேலிருந்து கீழ்**

1. அசம்பாவிதம் 2. கனி 3. பாவலன் 4. வடம் 5. கடல் 8. கதலி 9. அரம் 10. புவனம் 12. மதலை 15. எருமை 16. பல்லவி 18. விடுதி 19. பகல் 20. கொடு

**சொற்சிலம்பம் போட்டி இல.58**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**26.11.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 57இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**க.கலைவாணி**
49/1 பெரேரா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு

**2 ஆம் பரிசு**
**லக்சனா அருள்தாஸ்**
96 ,கெட்சன் வீதி
வட்டக்கச்சி

**3 ஆம் பரிசு**
**சி.அனிஸ்காந்தா**
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை

**4 ஆம் பரிசு**
**அ.சத்தியரூபன்**
தபாலகம்,
காங்கேசன்துறை

**5 ஆம் பரிசு**
**ந.யசோஜி**
யா/சாவகச்சேரி
இந்துக்கல்லூரி.

**பிறேமனின்ர தகப்பன் சுப்பிரமணியம் இருக்கிறாரெல்லோ? அவர் இங்கிலீஸ் கதைக்கிறதில மட்டுமில்லை. தூயதமிழில் கதைக்கிறதிலயும் வலுவிண்ணன். மற்றது ஊருக்குள்ள தூயதமிழில் கதைக்கிற ஒரேயொராள் அவர் மட்டும்தான்.**



○ இராகவன்

இராசேந்திரம் மாஸ்ரர் என்ன செய்தவரெண்டால் ஒரு பதிவான கோழிக்கூட்டை எடுத்து ஆமையைப் போல டிசைன் பண்ணினார். பிறகு அதுக்குள்ளை நுழையக் கூடிய ஒரு பொடியனைத் தேடினார். ஒருத்தன் அதுக்கு எல்லாவிதத்திலயும் பொருத்தமாயிருந்தான். அவனைப் பிடிச்சு அதுக்குள்ள நுழைச்சுவிட்டார். ஆமை கிறவுண்சுக்குள்ள ஊரத் தொடங்கிச்சு. அச்சுஅசலாய் ஒரு கடலாமை ஊர்ந்து வாற மாதிரியே இருந்திச்சுது. எல்லோரும் மூக்கில விரலை வைச்சுப் பாத்துக் கொண்டிருந்தினம். உள்ளுக்கை இருக்கிற விண்ணன் ஆரெண்டு பாக்கிறதுக் காண்டிப் பலரும் முண்டியடிச்சினம்.

பாக்கவே முடியேல்ல. ஆமை அப்படியே ஊர்ந்து புறப்பட்ட இடத்துக்குள்ளேயே போய் மறைஞ்சிட்டுது. பிறகு விநோத உடைப் போட்டி முடிவுகளை அறிவிக்கேக்குள்ள ஆமைக்கு முதல்பரிசு கிடைச்சுது.

"ஆமையாரே! உங்களுக்குத்தான் முதற்பரிசு. வந்து வாங்கிக் கொள்ளுங்கள்'' எண்டு அறிவிப்பாளர் எனவுன்ஸ் பண்ணினார். எல்லோரும் கைதட்டிச்சினம். விசிலுகள் பறந்திச்சுது. அந்த விண்ணன் ஆரெண்டு பாக்கிறதுக்கு எல்லோரும் தள்ளுமுள்ளுப்பட்டினம். அப்ப கூட ஆமையாய்த்தான் வந்து அந்த விண்ணன் பரிசைக் கைநீட்டி வாங்கிக் கொண்டு போனான். அந்த விண்ணன் ஆரெண்டது கனகாலமாய்ச் சஸ்பென்ஸாகவே இருந்தது.

வல்லவனுக்கு வல்லவன் ஊருக்குள்ள இருக்கத்தானே செய்வான்? அப்படியொருத்தன் தான் ஆமையாக வந்த விண்ணன் பிறேமன்தான் எண்டு கண்டுபிடிச்சான். அதுக்குப் பிறகு பொடியள் எல்லாம் பிறேமனை "ஆமை! ஆமை!" எண்டு கூப்பிடத் தொடங்கிட்டாங்கள். ஆமையெண்டு கூப்பிடேக்குள்ள பிறேமனுக்குச் சுள்ளெண்டு கோபம் வரும். கூப்பிட்டவனைத் துரத்திக் கொண்டே போவான். ஆள் அகப்பட்டால் முதுகில குத்து குத்தெண்டு குத்திப் போடுவான். கன்னத்தைப் பொத்தியும் விழும். தன்னால் அடிக்கேலாதாக்கள் ஆமையெண்டு கூப்பிட்டால் புழுத்த பாட்டில பேசுவான். அப்படிப் பேசவு மேலாதாக்களோட கதைக்காமல் விட்டிடுவான். கொஞ்சக் காலமாய் இது நடந்துச்சுது. பிறகு 'ஆமை'யை ஊர்ப்பொடியள் மெல்ல மெல்ல மறந்திட்டாங்கள். பிறேமனின்ர தகப்பன் சுப்பிரமணியம். நாங்கள் அவரை 'மணியண்ணை' எண்டு தான் கூப்பிடுவம். ஊருக்குள்ள ட்ரவுசரும் சேட்டும் போட்டுச் செருப்பும் கொழுவிக் கொண்டு திரியிற ஒரேயாள் அவர் மட்டும்தான். அந்தக் காலத்தில இங்கிலீஸ் கதைக்கத் தெரிஞ்சாக்கள் மட்டும்தான் ட்ரவுசரும் சேட்டும் போடுறது வழக்கம். மணியண்ணையும் தலைகறணமாய் இங்கிலீஸ் கதைப்பார். நான் அம்மாவோடை குலமக்கா வீட்டை போகேக்குள்ள மணியண்ணை பிறேமனுக்கு இங்கிலீஸ் படிப்பிச்சுக் கொண்டிருக்கிறதைப் பாக்கிறனான். பிறேமன்ர வீட்டோட ஒரு சின்னக் கடையுமிருந்தது. அங்கை மண்ணெண்ணெய், மரக்கறி, பழவகைகள், உப்பு, புளி, சீனி எண்டு சில்லறை சாமான்களை வாங்கிறதுக்கு ஊராக்கள் இரண்டு மூன்று பேர் எப்பவும் நிப்பினம். அதால போகேக்குள்ள மண்ணெண்ணெய் வாசம் குப்பெண்டடிக்கும். அதோட சேர்ந்து கிளிசீறியாக் குழைவாசமும் அடிக்கும்.

15




பிறேமன் வீட்டில் இரண்டு மூண்டு ஆடுகள் வளர்த்தவை. அதுகளுக்குத்தான் கிளிசீறியாக் குழை வெட்டிக் கட்டியிருக்கும். அதுகள் குழையைச் சப்பேக்குள்ளதான் அந்த மணங்கிளம்பும்.

பிறேமனின்ர தகப்பன் சுப்பிரமணியம் இருக்கிறாரெல்லோ? அவர் இங்கிலீஸ் கதைக்கிறதில மட்டுமில்லை. தூய தமிழில் கதைக்கிறதிலயும் வலு விண்ணன். மற்றது ஊருக்குள்ள தூய தமிழில் கதைக்கிற ஒரேயொராள் அவர் மட்டும்தான்.

(தொடரும்)

ம.மயூரபாலன்

# வாழ்க்கை வழங்கும் செல்வம்!



மேற்கத்தைய நாட்டில் வசிக்கும் ஒருவன் யானைகளைப் பார்க்க விரும்பி ஒரு கிராமத்துக்குச் சென்றான். அங்கு சென்று பார்த்த பொழுது அவனுக்கு மிகவும் வியப்பாகிப் போய்விட்டது. அங்கே பலம் பொருந்திய பெரிய யானைகள் அசையாது ஒரே இடத்தில் கட்டப்பட்டு நிற்பதைக் கண்டான். இத்தனைக்கும் அந்த யானைகளின் காலில் சிறிய கயிறுதான் கட்டப்பட்டு இருந்தது. இவ்வளவு பலம் பொருந்திய பெரிய யானைகள் ஏன் அந்தக் கயிற்றை அறுத்துக் கொண்டு செல்லாமல் அதே இடத்தில் நிற்கின்றன என்ற கேள்வி அவனுள் எழுந்தது. அவன் சென்று அந்த யானைப் பாகனிடம் "ஐயா இந்த யானைகளுக்கு அந்த கயிற்றை அறுப்பது பெரிய விஷயமல்லவே! அப்படி என்றால் அவை ஏன் அவ்வாறு தப்பித்து ஓடாமல் இங்கேயே நிற்கின்றன?" எனக் கேட்டான்

அதற்கு அந்த யானைப்பாகன் "யானைகள் சிறிய குட்டிகளாக இருக்கும் பொழுது நாம் அவற்றின் கால்களிலே அந்த கயிற்றை கட்டிவிடுவோம். அவையும் அதனை அறுத்துக் கொண்டு ஓடுவதற்காக முயற்சி செய்து கொண்டே இருக்கும். அவை குட்டிகளாக இருந்ததால் அவற்றால் அந்த கயிற்றை அறுக்க முடியாதிருந்தது. நாட்கள் செல்லச் செல்ல அவை அந்த கயிற்றை அறுக்க முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டன. இப்பொழுது அவை மிகவும் பெரிதாக வளர்ந்த போதிலும் அந்த எண்ணம் இன்னமும் மாறவில்லை. அதனால்தான் அவை இப்பொழுதும் அந்த கயிற்றுக்கு கட்டுப்பட்டு நிற்கின்றன" எனக் கூறினார்.

நமது வாழ்விலும் இதுதான் நடைபெறுகின்றது. நாங்கள் சிறு பிள்ளைகளாக இருந்த பொழுது பலவிதமான எண்ணக் கருத்துகள் நம்முள் திணிக்கப்படுகின்றன. நாமும் அவ்வாறு ஒரு கயிற்றால் கட்டப்படுகிறோம். அந்த கயிறு ஒரு இழையினால் ஆனது அல்ல. அங்கு பயம், வெறுப்பு, பேராசை எனப் பல விடயங்கள் ஒன்று சேர்ந்து உறுதியாக பிணைக்கப்பட்டுள்ளன. "பொய் சொன்னால் கடவுள் கண்ணை குத்துவார்" என பிள்ளைகளுக்கு கூறுவார்கள். கருணை நிறைந்த கடவுள் ஏன் கண்ணை குத்தவேண்டும் என கேட்கக் கூடிய பக்குவம் குழந்தையிடம் இருப்பதில்லை. ஆனால் அது வளர்ந்த பின்னரும் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் நம்பி வாழ்வைப் பயத்துடன் கழிக்கின்றது. அவற்றில் எந்த வித ஆதாரமும் இல்லாத போதும் அவை உண்மையல்ல எனத் தெரிந்தும் அவற்றை விட்டு விட அது தயாராக இல்லை.

இதனையே பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் மிகவும் அழகாக எழுதி உள்ளார்.

*"சின்னப் பயலே! சின்னப் பயலே!*
*சேதி கேளடா.!*
*வேப்ப மர உச்சியில் நின்னு*
*பேய் ஒண்ணு ஆடுதுன்னு*
*விளையாடப் போகும் போது*
*சொல்லி வைப்பாங்க உந்தன்*
*வீரத்தை கொழுந்திலேயே*
*கிள்ளி வைப்பாங்க அந்த*
*வேலையற்ற வீணர்களின்*
*முளையற்ற வார்த்தைகளை*
*வேடிக்கையாகக் கூட*
*நம்பி விடாதே"* - என அந்தக் காலத்திலேயே அவர் எச்சரித்துள்ளார். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் நம்மை நாம் அறிந்து கொள்ளாதது தான். நம்மை நாம் அறிந்து கொண்டால் நமது உண்மையான வல்லமையை தெரிந்து கொண்டால் பின்னர் நாம் நமது வாழ்வை ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியும்.

அதனால் தான் "உன்னையே நீ அறிவாய்" என சோக்கிரட்டீஸ் கூறினார். "தன்னை அறிய தனக்கொரு கேடில்லை" என திருமூலர் கூறினார். இவ்வாறு ஞானிகளும் மகான்களும் நாங்கள் உண்மையிலே யார் என்பதனை அறியவேண்டும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

இடையன் ஒருவன் தனது செம்மறி ஆடுகளை மேய்ச்சலுக்காக காட்டுக்கு கூட்டிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் தனது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு சிறிய சிங்கக் குட்டியை கண்டான். தாய் இல்லாத அந்த சிங்கக் குட்டியின் மேல் கருணை கொண்டு அவன் அதனை தன்னுடன் வீட்டுக்கு எடுத்துச் சென்றான். அதற்கு பால் கொடுத்து அதனை அந்த செம்மறி ஆடுகள் இருக்கும் கூட்டின் உள்ளே விட்டுவிட்டான். தினமும் அந்த சிங்கக்குட்டி செம்மறி ஆடுகளுடன் காட்டுக்கு சென்று வந்தது.

ஒருநாள் எதிர்பாராத விதமாக பிறிதொரு சிங்கம் இந்தச் செம்மறி ஆடுகளின் மத்தியிலே வந்துவிட்டது. எல்லா ஆடுகளும் பயந்து அங்கும் இங்குமாக ஓடி ஒளிந்து கொண்டன. இந்த சிங்கக் குட்டியும் பயந்து ஓடி ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டது. இந்தக் காட்சியைப் பார்த்த சிங்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. அது மெதுவாகச் சென்று அந்த குட்டியை பிடித்தது. அதற்கு அந்த சிங்கக்குட்டி "தயவு செய்து என்னைச் சாப்பிடாதீர்கள்" என மன்றாடிக் கேட்டது. அதற்கு அந்த சிங்கம் "நான் ஏன் உன்னைச் சாப்பிடவேண்டும்? நீயும் என்னைப் போன்ற ஒருவன்தான்" எனக் கூறியது. ஆனால் சிங்கக் குட்டியோ தொடர்ந்தும் என்னை சாப்பிடாதீர்கள் என மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தது.

அப்பொழுது சிங்கம் அந்த குட்டியை ஒரு குளத்தின் அருகே இழுத்துச் சென்றது. அங்கு அதனது முகத்தின் பிம்பத்தை தண்ணீரில் காட்டியது. "உனது முகமும் எனது முகமும் ஒரே மாதிரி உள்ளதை பார் "என்றது. அத்துடன் கர்ச்சித்தும் காட்டியது. அந்தக் குட்டியையும் கர்ச்சிக்கும்படி கூறியது. சிங்கக்குட்டி தான் ஒரு செம்மறி ஆடு அல்ல என உணர்ந்த பொழுது சிங்கத்துக்கு நன்றி கூறியது.

நம்முள்ளே எப்பொழுதும் ஒரு இழுபறி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. உள்ளத்திலிருந்து ஒரு குரல் "நீ ஒரு சிங்கக்குட்டி. நீ சுயமாக சிந்தித்து செயலாற்ற வேண்டும் ஆனந்தமாக இருக்க வேண்டும்" என்று சொல்கின்றது. மறுபுறம் இந்த முழு உலகமும் நீ இவ்வாறுதான் சிந்திக்க வேண்டும். இது தான் நாகரீகம். நீ இவ்வாறுதான் வாழவேண்டுமென கூறுகின்றது. ஆட்டு மந்தைக் கூட்டத்தில் மேலும் ஒரு ஆடாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது. எதிர்பார்ப்பது மட்டுமன்றி தினமும் அவற்றை நம் உள்ளே திணிக்கவும் செய்கின்றது.

ஆனந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும் ஒருவனை இந்த உலகம் வெற்றி அடைந்தவன் எனச் சொல்வதில்லை. யார் ஒருவனிடம் பணம் பொருள் உள்ளதோ அவன்தான் வெற்றி அடைந்தவன் எனக் கூறுகின்றது. அத்துடன் அதுதான் வெற்றி என நமக்கு மூளைச் சலவையும் செய்யப்படுகிறது. அதனை நம்பி நாங்களும் ஓடி ஓடி இறுதியில் மரணப்படுக்கையில் தான் இவையெல்லாம் உண்மையல்ல என உணர்கின்றோம். யாரோ ஒருவர் கூறியது போல "திருப்தி என்பது வாழ்க்கை வழங்கும் இயற்கையான செல்வம். ஆடம்பரம் என்பது நாங்கள் உருவாக்கிய போலியான வறுமை" என்பது தெரியவருகின்றது. ■

> **ஆனந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும் ஒருவனை இந்த உலகம் வெற்றி அடைந்தவன் எனச் சொல்வதில்லை. யார் ஒருவனிடம் பணம் பொருள் உள்ளதோ அவன்தான் வெற்றி அடைந்தவன் எனக் கூறுகின்றது. அத்துடன் அதுதான் வெற்றி என நமக்கு மூளைச் சலவையும் செய்யப்படுகிறது. அதனை நம்பி நாங்களும் ஓடி ஓடி இறுதியில் மரணப்படுக்கையில் தான் இவையெல்லாம் உண்மையல்ல என உணர்கின்றோம்.**





# பணத்துக்கு எத்தனை பெயர்கள்...

'பணமே' உனக்கு எத்தனைப் பெயர்கள்
அர்ச்சகருக்கு கொடுத்தால் தட்சணை
கோயில் உண்டியலுக்கு காணிக்கை
யாசிப்பவருக்குக் கொடுத்தால் பிச்சை
கல்விக்கூடங்களில் கட்டணம்
திருமணத்தில் வரதட்சணை
திருமண விலக்கில் ஜீவனாம்சம்
விபத்துகளில் இறந்தால் நஷ்டஈடு
ஏழைகளுக்கு கொடுத்தால் தர்மம்
திருமண வீடுகளில் பரிசாக மொய்
திருப்பித் தர கொடுத்தால் கடன்
இலவசமாகக் கொடுத்தால் அன்பளிப்பு
விரும்பிக் கொடுத்தால் நன்கொடை
நீதிமன்றத்தில் செலுத்தினால் அபராதம்
அரசுக்குச் செலுத்தினால் வரி
வேலைக்கு மாதந்தோறும் சம்பளம்
பணி ஓய்வுப் பெற்றால் ஓய்வூதியம்
சட்டத்துக்கு விரோதமாக லஞ்சம்
தொழில் தொடங்கும் போது முதலீடு
ஹோட்டலில் நல்குவது டிப்ஸ்
இவ்வாறு பல பெயர்களில் கைமாறும்
இந்தப் பணத்துக்கு மாற்றாக
வேறொன்றும் இப்புவியில் இல்லை...

**சுபியா**, நாயன்மார்கட்டு

# அனைத்தும் என் தாயவளே!



அன்பும் நீ
அறிவும் நீ
ஆருயிரும் நீ
ஆழ்பவளும் நீயே
இன்பமும் நீயே
இணையில்லாதவளும் நீயே
ஈகைக்குரியவள் நீ
ஈடில்லா தாயும் நீயே
உறவுக்கு உரியவள் நீ
உற்ற துணையும் நீயே
ஊக்கம் நீ
ஊக்குவிப்பவளும் நீயே
என் உயிர் நீ
எனக்காய் உருகுபவளும் நீயே
ஏணியானவள் நீ
ஏற்றம் இறைத்தவளும் நீயே
ஒற்றுமையும் நீ
ஓங்காரவிளக்கம் நீ
ஓர் உயிரும் நீயே
ஔவை காட்டியவள் நீ
ஔவை பாட்டு சொன்னவள்
அகிலத்தில் அனைத்தும் தாயவளே!

**எஸ்.கலாமணி, மன்[illegible]தீவு**

# கொலையுதிர் பள்ளிகள்



○ மயூ

தமிழகத்தில் ஆசிரியர் ஒருவரின் பாலியல் அத்துமீறலால் மாணவி ஒருவர் உயிர் மாய்த்துக் கொண்டுள்ள சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழகத்தில் முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதன்போது ஆசிரியர்கள் சிலர் இவ்வாறான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்கள். ஆனால் இந்தக் கொடூரம் தொடர்வது தான் பெரும் அவலம்.

கோவை மாவட்டம், உக்கடம் பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவர், அங்குள்ள தனியார் மெட்ரிக் பள்ளியில் கற்கிறார். கொரோனாத் தொற்றால் இணையவழி வகுப்புக்களே நடந்தபோதும், அவ்வப்போது பாடசாலையில் சிறப்பு வகுப்புக்கள் நடந்ததால் அதற்கும் செல்ல வேண்டியிருந்தது. ஒரு கட்டத்தில் அந்தப் பாடசாலையில் படிக்கமாட்டேன் என்று மாணவி கூற, பெற்றோரும், அங்குள்ள அரச பள்ளி ஒன்றில் மகளைச் சேர்த்துள்ளனர். கடந்த 11ஆம் திகதி மாலை வீட்டில் யாரும் இல்லாத நிலையில் மாணவி உயிர் மாய்த்துக் கொண்டிருக்கிறார்.

வீட்டுக்கு வந்து பார்த்த பெற்றோர் அதிர்ந்து போனார்கள். வீட்டில் மாணவி எழுதியதாக நம்பப்படும் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அதில் சில பெயர்களை எழுதி "யாரையும் சும்மா விடக்கூடாது" என்று எழுதப்பட்டிருந்தது.

மாணவியின் கைபேசியை ஆராய்ந்த பொலிஸார் விசாரணையைத் தீவிரப்படுத்தினர். அப்போது தனியார் பாடசாலையில் இயற்பியல் பாடம் கற்பித்த மிதுன் சக்ரவர்த்தி என்பவர் மாணவிக்கு பாலியல் ரீதியாகத் தொல்லை கொடுத்து வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறப்பு வகுப்புகளுக்கு மாணவி சென்றபோது, மிதுன் சக்ரவர்த்தி அத்துமீறி நடந்தமையும் விசாரணையில் தெரியவந்திருக்கிறது.



மாணவி இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்தினரிடம் தெரியப்படுத்தியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. மாணவிக்கு உள ஆலோசனை வழங்கிய பாடசாலை நிர்வாகம், இது தொடர்பாக வீட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டாம் என்றும் மாணவியை வற்புறுத்தியுள்ளது. ஆறு மாதங்களுக்கு மேலாக நடந்த இந்த இம்சையைப் பொறுக்க முடியாமலே மாணவி பாடசாலை மாற முடிவெடுத்திருக்கிறார் என்று பெற்றோர் கூறுகின்றனர்.

"இந்த சம்பவத்தைப் பற்றி அந்த அதிபரிடம் பேசும் போது, `பஸ்ல ரெண்டு பேர் இடிச்சாங்கன்னு பொறுத்துட்டுதானே போறோம், அப்படி நினைச்சுக்கோன்னு என் பொண்ணுகிட்ட சொல்லியிருக்காங்க. இதை மனசுக்குள்ளேயே வச்சிருந்துட்டு என் பொண்ணு போய் சேர்ந்துட்டா." என்று கதறி அழுகின்றார் மாணவியின் தாய்.

"கடந்த வருடம் ஏப்ரல் மாதம், மே மாதம் பாடசாலைக்குச் சென்றபோது மிதுன் சக்ரவர்த்தி வகுப்பு எடுத்தார். அதன்பின்னர் மாணவியின் கைபேசி இலக்கத்தை பெற்று பேச ஆரம்பித்தார். ஒருநாள் பாடசாலையில் மாடிக்கு அழைத்து தப்பாக நடக்க முயன்றிருக்கிறார். அதை நினைத்து மாணவி அழுது கொண்டே இருந்துள்ளார்.

சில நாள் கழித்துத்தான் எனக்கு கூறினார். நான் உடனே பாடசாலை அதிபரிடம் தெரிவித்தேன். நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அதன்பிறகு `என்னால அங்க படிக்க முடியல, மதுரைக்கே போய் செட்டில் ஆகறேன்'னு பலமுறை சொல்லி அழுதாள்" என்றார் உயிரிழந்த மாணவியின் நண்பி.

"அதன்பின்னர் பித்து பிடிச்ச மாதிரி இருந்ததால மனநல மருத்துவர்கள்கிட்ட கூட்டிப் போனாங்க. ஒருகட்டத்தில் பசங்களைப் பார்த்தாலே பயப்பட ஆரம்பிச்சுட்டா. அன்னைக்கு நடந்த சம்பவத்துல இருந்து அவளால வெளிய வரவே முடியலை. அவ இறந்த அன்னைக்கு சாயந்தரம் நாலரை மணிக்கு எனக்கு அவகிட்ட இருந்து போன் வந்துச்சு. நான் எடுக்கலை. மறுபடியும் போன் பண்ணினேன்.

அவகிட்ட இருந்து பதில் வரலை. அவ தற்கொலை பண்ணிக்குவான்னு நினைச்சுகூட பார்க்கலை" என்றார் அந்த நண்பி. இப்போது அந்த ஆசிரியரும், பாடசாலை அதிபரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குகளை எதிர்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாணவியின் உயிர் திரும்பி வரப் போவதில்லை. இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதை தடுக்க வேண்டுமே தவிர, நடந்து முடிந்த பின்னர் நடவடிக்கைகள் எடுப்பதால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை. தாங்கள் துன்புறுத்தப்பட்டு, அது தொடர்பாக முறைப்பாடு அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்ற மன உளைச்சல் ஒருபுறமிருக்க, பல தருணங்களில் பெற்றோரையோ பள்ளி நிர்வாகத்தையோ நம்பி, இந்த விடயங்களை பேசுவதற்கு மாணவர்கள் தயங்குகின்றனர்.

ஆசிரியர் பணி என்பது என்றைக்கு வேலை என்ற வரையறைக்குள் வந்ததோ, அப்போதே இந்தப் பிரச்சினை ஆரும்பித்து விட்டது என்கிறார் தமிழக பொதுக் கல்வித் துறையில் இருக்கும் அதிகாரி ஒருவர். குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்புக்கு வருபவர்கள், தாம் செய்யும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து வர வேண்டும். அது மற்றொரு வேலை என நினைத்து வரக்கூடாது என்கிறார் அவர்.

பெற்றோர் குழந்தைகளை நம்ப வேண்டும். அவர்கள் தங்களிடம் வந்து எதையாவது சொன்னால் அதை கரிசனையோடு அணுக வேண்டும். அப்போதுதான் குழந்தைகளுக்கு நம்பிக்கை ஏற்படும்.

அந்த நம்பிக்கை ஏற்பட்டால்தான் அவர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நம்பிக்கையோடு பெற்றோருக்குத் தெரியப்படுத்துவர் என்கிறார் மனநல மருத்துவர் ஒருவர்.

தற்போதைய சூழலில், இதுபோன்ற நிகழ்வுகள் நடந்த பிறகு சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டவுடன் இந்தச் சம்பவங்களே மக்களின் மனதிலிருந்து மறைந்துவிடுகின்றன.

மீண்டும் ஒரு நிகழ்வு நடக்கும்போதுதான் சலசலப்பு ஏற்படுகிறது. அந்த நிலைமை மாற வேண்டும். இவ்வாறான கொடுமைகள் நடக்காது தடுக்க அவசர நடவடிக்கைகளே அவசியம்.

1505-1948 வரை



# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

இங்கு திருமணத்தின் போது மணமகன் மணமகளின் கழுத்தில் தாலி கட்டுகிறார். கணவன் இறந்ததும் தாலியும் கணவனின் சடலத்துடன் சேர்த்து எரிக்கப்படுகிறது. திருமணம் செய்யாதவன் அரை மனிதன் என இங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

பெண்களுக்கு 10-11 வயதிலேயே திருமணம் செய்து வைத்து விடுகின்றனர். ஆனால் 13-14 வயது வரை கணவனைச் சந்திக்க அனுமதிப்பதில்லை. 8-9 வயதிலேயே எனது பிள்ளை உனக்குத்தான் என பெற்றோர் முன்னிலையிலேயே நிச்சயதார்த்தம் செய்து விடுகின்றனர். பெண்களின் சம்மதத்தைப்பற்றி அவர்கள் அக்கறைப்படுவதில்லை. விவரம் தெரியாத வயதில் அவர்களின் சம்மதமின்றித் திருமணம் செய்து வைத்தால் விவரம் தெரிந்த பின் அவர்களுக்கு தனது கணவனை பிடிக்காவிட்டால் அவர்கள் கவலைப்படுவார்கள் என்று சொன்னேன்; எனது கருத்தை அவர்கள் ஏற்கவில்லை. திருமண நிகழ்வுகளில் மது பரிமாறப்படுவதில்லை. திருமணக்கொண்டாட்டம் நான்கு நாட்கள் நடைபெறும்; மாலை வேளைகளில் ஆடல், பாடல் என்பன இடம்பெறும்.

சுண்டுக்குழி தேவாலயத்துக்கு அருகில் சிவிகையர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் அரசனின் கீழ் பணி புரிந்தவர்கள். இவர்களுடைய திருமணங்கள் அரசனின் முன்னிலையிலேயே நடைபெற்றன. இவர்களுடைய தொழில் பல்லக்கு சுமப்பது. இப்போது இவர்கள் இருபது பேர் சேர்ந்து டச்சுக்காரர்களை சுமந்து செல்கின்றனர். இவ்வாறு டச்சுக்காரர்களை சுமந்து செல்வது இவர்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயம். அத்துடன் இங்குள்ள டச்சுக்காரர்களுக்கு தேவையான விறகு தண்ணீர் போன்றவற்றையும் இவர்கள் தான் கொண்டு வந்து தருகின்றனர். இங்கு பரதவர்களும் வாழ்ந்து வருகின்றனர். கடற்குதிரையின் பற்களை சுழியோடி எடுப்பதும் முத்துக்குளிப்பதும் தான் இவர்களுடைய தொழில். இவர்கள் போர்த்துக்கீச மொழியையே பேசுகின்றனர்.

செட்டிமார்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். செட்டிமார் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். செட்டி என்றால் வர்த்தகம் செய்பவர்கள் என்று பொருள் இவர்களும் தமது உறவுகளுக்குள்ளேயே திருமணம் செய்கின்றனர். ஆடை உற்பத்தி செய்தல் இவர்களது பரம்பரைத்தொழில். ஆடை உற்பத்தி தொழில் நுட்பங்களை தந்தை ,மகனுக்கு சொல்லிக்கொடுப்பர். இதே போல் உலோக வேலை ஆபரணத்தொழில் போன்றவற்றில் ஈடுபடுபவர்களும் பரம்பரையாகத் தமது தொழிலைச்செய்து வருகின்றனர். கரையார் பெரிய நீளமான வலைகளை வைத்து மீன் பிடித்து வருகின்றனர்.

வெள்ளாளரின் அடிமைகளாகவும் சிலர் உள்ளனர். தென்னை மரத்திலிருந்து கள் இறக்குவது, கால்நடைகளை பராமரிப்பது, தென்னை மரத்துக்கு பாத்தி கட்டி நீர் பாய்ச்சுவது மற்றும் கூலித்தொழில் என்பன இவர்களது தொழில். மலச் சுத்திகரிப்பு பறைமேளம் அடிப்பவர்களின் இன்னொரு தொழில். இவர்கள் எலியையும் வேட்டையாடி உண்ணுகின்றனர். குறைந்த சாதிக்காரர் , உயர்ந்த சாதிக்காரர் யாரை யாவது வீதியில் கண்டால் உடனே பின்னோக்கிச்செல்ல வேண்டும் (Reverse). எந்தச்சாதியினராக இருந்தாலும் ஆண்களும் ,பெண்களும் சரி சமனாக இருந்து உணவு அருந்துவதில்லை. இங்கு எவருமே மாட்டிறைச்சி சாப்பிடுவதில்லை. பசுவைத் தெய்வீகமாகக் கருதுகின்றனர். டச்சுக்காரர் மட்டும் மாட்டிறைச்சி சாப்பிடுகின்றனர். யாழ்ப்பாண இராச்சியத்தில் உள்ள மக்கள் கள்ளம் கபடமற்றவர்கள். அதீத ஞாபகசக்தி உடையவர்கள். உணவு விடயத்தில் எப்போதும் முன்மாதிரியாக (Moderate) காணப்படுகின்றனர். எப்போதும் தூய்மையாக இருக்கின்றனர்.

வெள்ளைப்பருந்தைக் கண்டால் அது நல்ல சகுனம் என நம்புகின்றனர். வெறுமையான வண்டில், குடம் என்பவற்றை கண்டால் அது கெட்ட சகுனம் என நம்புகின்றனர். கைவினை உற்பத்தியாளர்கள் இங்கு தாராளமாகக் காணப்படுகின்றனர். இங்குள்ள மக்கள் தங்களது நாட்டு சட்டதிட்டங்களில் மிகவும் பற்றுறுதியுடையவர்களாக காணப்படுகின்றனர். . இங்குள்ள மருத்துவர்கள் பொய் பேசுவதில்லை; மருத்துவ நூல்களிலிருந்தும் தமது மூதாதையரிடமிருந்தும் கற்றுக்கொண்ட விடயங்களை அனுபவரீதியாக நிரூபித்து காட்டுகின்றனர். இவர்களுக்கு அறுவை மருத்துவம் தெரியாது. ஆனால் உடனடியாக பறித்த மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்துகுளிசைகள் மூலம் நோய்களை குணப்படுத்துகின்றனர். இந்த மருந்துகள் சற்று வீரியமுள்ளவையாக இருந்தால் மிளகு நீரை உடலில் பூசுமாறு கொடுக்கின்றனர். இங்கு சிறந்த சவரத்தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களது கத்தி எமது கத்தியை விடக் கூர்மையானதாகக் காணப்படுகிறது. இவர்கள் தாடி ,மீசை என்பவற்றை மட்டும் சவரம் செய்வதில்லை புருவ மயிர்கள், நகங்கள், கால் பெருவிரல் என்பவற்றையும் சுத்தம் செய்கின்றனர்.

இங்குள்ள வர்ணம் பூசுபவர்கள்(painters) சிறந்த நிறக்கலவைகளை தயாரிக்கின்றனர். இவர்கள் தயாரிக்கும் வர்ணப்பூச்சு கழுவினாலும் போக மாட்டாது. இங்குள்ள டச்சுக்காரர்களின் வீடுகளில் இவர்கள் யானைத்தந்தம், கருங்காலி போன்றவற்றில் செய்துள்ள வேலைப்பாடுகள் தங்கம் , வெள்ளி போல் ஜொலிக்கின்றன; இங்கு வர்ணம் பூசும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் உண்மையிலேயே சிறந்த விற்பன்னர்கள். இந்தப்பிரதேசத்திலேயே (தமிழ்நாட்டையும் சேர்த்து எனதான் கூறியுள்ளார்) இவர்களைப்போன்ற சிறந்த வர்ணம் பூசுவோர் இல்லையென்று சொல்லலாம்.

*(பசுவைத் தெய்வமாக வணங்குவது, சகுனம் பார்ப்பது போன்ற விடயங்கள் புராதன எகிப்திலும் இருந்ததாக பால்டயஸ் குறிப்பிட்டுள்ளார்)*

# மௌன மொழி

58



அப்பன் குடியின் பிடியில்
வீடோ பிடியின் வடிவில்
இயற்கையும் உம்மை வஞ்சிக்க
பாலகர் இருவரும் வெள்ளத்தில் – அக்கரைக்கு
உணவை தேடி புறப்பட்டீரோ......!

சி.மகாலட்சுமி, கொக்குவில்

சீரான திட்டமிடலின்றியும்
அனுமதியின்றியும்
வேக வேகமாக
எழும்பி வரும்
கட்டடங்களால் எம்
குடிமனைகளிலிருந்து
மழைநீர் வழிந்தோட
வழியில்லை.

ச.செல்வக்குணசந்திரன்,
ஒடக்கரை, பருத்தித்துறை.

கொட்டிய மழை தனில்
கட்டிய வீடுகளில்
கழிவு நீர் புகுந்ததுவே
அறியாத பருவமதால்
நீர் கண்டு ஓடையிலே
படும் பாடு அவரறியார்
உண்ண உணவுமில்லை
நிம்மதியாய் உறக்கமில்லை
தேடுகிறோம் எம் வாழ்வை

எஸ்.மதீசன்
வித்தியானந்தா

வெடித்தது இயற்கையின் கோபம்
வெள்ளமென புரண்டது வீதியில்
பள்ளி செல்லும் கனவினை
பாழாக்கிச் சென்றாயே.
எம் கால்கள் உன்னை நனைக்க
எம் அன்னையே உன் கோபமாறிடுமே

கவிஷா பவன்

தண்ணீரில் தடம் பதிக்கும் தம்பியரே
நீரோடு நீர் செல்ல கூடும்
நீர் நிலையறியாமல் நீர் செல்ல வேண்டாம்
வீடு நோக்கி பயணிக்க எண்ணி
காட்டாற்று வெள்ளத்தில் காணாது போவீர்
பாலங்கள் எங்கும் படுகுளியாய் இருக்க
பார்த்து பயணிக்க முடியாதல்லோ
பெரியவர்களை துணைக்களத்து சென்றால்
பேரிடர் தனை தவிர்த்திட எண்ணும்

வி.பி.சிவேஸ், தண்ணீரூற்று

அடாது மழை விடாது பெய்து
படாத பாடுபட்டு
கள்ளமில்லா உள்ளம் இரண்டு
கால் முட்டிக்கு மேலே நீரில் தள்ளாடி
ஆடை நனைத்து உடல் வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது தழுவி
பள்ளம் இல்லா பாதை தேடி
வெள்ளம் தனில் இல்லம் நோக்கி விரைகின்றனரே.

கும்பவாழியான்
உடுப்பிட்டி

சின்னஞ்சிறு வயதினிலே
சிறகடித்து பறக்க வேண்டிய
சிறார்கள் நீங்கள்
இயற்கையின் விளையாட்டால்
சிறகொடிக்கப்பட்ட பறவைகளாய்
வெள்ள வீதியில் வெறிச்சோடி
நிற்பது தான் ஏனோ?

ஆ.பாலமதுஜா
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

அக்கரை செல்ல
இவர்களுக்குண்டோ தடை
அடங்காத வெள்ளம்
அமைதி அடைக
நீருக்காய் வாடுவோர்
உலகில் பலரே நீண்ட நாட்களாய்
வருந்துபவர் உளரே
வீடும் மூழ்கும் வீதியும் மறையும்
வீணாய் வயல்கள் பயிர்கள் அழியும்
சிறுவர்கள் தாண்டுவது சிறு தூரமே
சிந்தித்து செயற்படு
இயற்கை தான் வரமே

சிவரம்யா
யாழ்ப்பாணம்

கள்ளமில்லா
வெள்ளை உள்ளம் கொண்ட
பாலகரே!
கை கோர்த்து நடப்பது
எங்கே விடியலை நோக்கிய
உன் பயணமா? அல்லது
விலை வாசியை கண்டிக்கும்
கவனயீர்ப்பு போராட்டமா?

எஸ்.லிங்கேஸ்வரி
13/2ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

பரிசு பெறும் கவிதை

பயம் அறியா பாலகரே
மனம் வழியே செல்லாதீர்
விளையாடும் பொருளிதுவோ
வினையாகும் தெரிந்திடுங்கள்
மழைவெள்ளம் அடித்திடுமே
மனை நோக்கித் திரும்பிடுங்கள்
காலனவன் காத்திருப்பான்
காவுவாங்க உயிரையே

கா.கனிவிழி
யாழ்ப்பாணம்

கவிதைக்கு பரிசு
1000/=



அகத்தியர் கமண்டலம்
தடுமாறியது போல்
வீதி விதியாகிய சமயத்தில்
காலணியை கையிலேந்தி
தங்கள் மழலைப் பாதத்தால் எம்மவர்
தெரிந்தே தொலைத்த
இயந்திரயுக அகலிகையான
அழகிய குளத்தை
அவ் ஆதிக் கருப்பையை
தேடும் வேட்கையில் இவர்கள்
கலியுக இராம லட்சுமணன்கள் .....

ச.வைஷாலினி, நல்லூர்

குளமெல்லாம் நிலமானதால்
நிலமெல்லாம் நீரானது
பல மன்னர் கட்டிய குளம் தனை
வேலியிட்டு பிரிக்கும் மானிடரே
யார் மறந்தாலும் நீர் மறக்காதே தன் நிலமதை
எவர் நிலமெனத் தெரியாத பாலகர்கள்
நீர் கண்டு ஓடுகின்றனர்

எஸ். கோதீஷன்
திருகோணமலை

59

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:

26.11.2021

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

**************************************

## இந்தோ - பசுபிக் விவகாரமும்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தச் சுகாதாரத் துறையை மேம்படுத்தல், கல்வித்துறையை ஊக்குவித்தல் என்ற பிரதான திட்டங்கள் எதுவுமேயின்றி பாதுகாப்பு அமைச்சுக்கு மாத்திரம் இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமக்காகவே தம்முடைய உதவியோடு இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவு நிதியை ஒதுக்கியுள்ளதென அமெரிக்க, இந்திய அரசுகள் நம்பலாம். சீன அரசின் எதிர்பார்ப்பும் அதுதான். ஆனால் சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை வல்லாதிக்க நாடுகளின் போட்டியைப் பயன்படுத்தி முப்படைகளின் தரத்தை மேலும் நவீனமயப்படுத்த வேண்டுமென்பதே பிரதான இலக்கு. குறிப்பாக வடக்கு, கிழக்கை இராணுவ மயப்படுத்தி அதன் மூலம் சிங்களக் குடியேற்றங்களைச் செய்து, சிங்கள மரபுரிமைகளையும் அங்கு செயற்கையாக உருவாக்கி இன அழிப்புத் திட்டங்களை முன்னெடுக்க நவீனதரத்திலான முப்படை இலங்கைக்கு அவசியமாகின்றது.

வல்லாதிக்க நாடுகளைப் பொறுத்தவரை தமது பூகோள அரசியல், பொருளாதார நலன் அடிப்படையில் நிதியுதவிகளை வழங்கி இலங்கையை உற்சாகப்படுத்துவதன் மூலம் இலங்கைத்தீவில் வாழும் மற்றைய தேசிய இனங்களின் இருப்பு இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதைத் தெரிந்தும் தெரியாததைப் போன்றே செயற்படுகின்றன. இந்த விடயங்களைத் தமிழ்த்தேசியக் கட்சிகள் விவாதத்தில் விவரமாக எடுத்துக்கூறுவதுமில்லை. பாதுகாப்பு அமைச்சுக்கு ஏன் இவ்வளவு நிதி என்று மாத்திரம் கேட்[illegible] அமைதியாகிவிடு[illegible] அவர்களினால் அமெரிக்க- இந்திய அரசுகளை எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது. ஆனால் சீனாவுக்கு எதிராக மாத்திரம் பேசி இந்திய - அமெரிக்க அரசுகளின் பாராட்டைப் பெறுகின்றனர். இலங்கைக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் வழங்கப்பட்டது. அதனையடுத்து இலங்கை ரூபாவில் 16.5 பில்லியனைச் சீனா வழங்கியிருந்தது. அதன் பின்னர் 150 மில்லியன் அமெரிக்க டொலரை அமெரிக்கா வழங்கியது. தூதரகங்களின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் தகவல்களைப் பார்த்தால் நிதியுதவிகள் பற்றிய விடயங்கள் தெரியும்.

ஒவ்வொரு செலவுத் தலைப்புகளிலும் நிதியுதவிகள் வழங்கப்பட்டாலும். அந்த நிதி உரிய திட்டத்துக்குத்தான் பயன்படுகின்றதா என்பது குறித்து இந்த வல்லாதிக்க நாடுகள் ஆராய்வதாகத் தெரியவில்லை.

கனடாவும், உலக சுகாதார ஸ்தாபனம் மூலமாக இலங்கைக்கு 1.3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதாகக் கடந்தவாரம் அறிவித்திருக்கிறது. சுகாதாரத் துறையை மேம்படுத்தும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு நிதியுதவியை வழங்கவுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண சென்ற செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

37.5 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகவும். 12.5 மில்லியன் அமெரிக்க [illegible] டொலரை அன்பளிப்பாகவும், மொத்தமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கவுள்ளதாக அமைச்சர் ரமேஷ்பத்திரண தெரிவித்தார். ஆகவே கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிதிகளையும் தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ள நிதிகளையும் வைத்தே பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வாறு நிதி ஒதுக்கப்படுகின்றது. புலனாய்வுச் செய்தியிடல் முறை இலங்கையில் உரிய முறையில் இருக்குமானால், வல்லாதிக்க நாடுகள் வழங்கும் நிதியுதவிகளின் விவரங்கள் இன்னும் கூடுதலாகவே கிடைக்கும். 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலிலும் ஈழத்தமிழ் மக்கள் தமது பாரம்பரியக் காணிகளைப் பறிகொடுத்துப் பண்பாட்டு மரபுரிமை அடை ாளங்களையும் இழப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகள்வு நிதி ஒதுக்கப்படுவதே காரணம். சட்டரீதியான சிங்களக் குடியேற்றத்துக்காகவா இந்த நிதி ஒதுக்கீடு என்று கேட்டால் அதனை மறுப்பதற்கில்லை.

இந்தியாவில் வருடத்துக்கு ஆயிரம் சிங்களச் சிப்பாய்களுக்குப் பயிற்சியும் மேலும் 50 இராணுவ அதிகாரிகளுக்குச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பயிற்சியை வழங்கவும் கடந்த மாதம் கொழும்புக்கு வந்த இந்திய இராணுவத் தளபதி மனோஜ் முகுந்த் நரவணே இணங்கியிருந்தார். அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளும் இலங்கை இராணுவத்துக்கு நவீன ரக ஆயுதங்களை வழங்கிப் பயிற்சியும் கொடுக்கின்றன.

2009 க்குப் பின்னரான சூ[illegible] மாறுமொரு தேசிய இனம் உரிமைக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் ,அதுவும் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படுத்தப்படாதவொரு சூழலில் , சிறிய நாடொன்றில் இராணுவக் கட்டமைப்பு ஏன் நவீனமயப்படுத்தப்படுகின்றது?



ஆர்.லயனல்

# முயற்சியின் நாயகன் வேட்

ரி-20 உலகக்கிண்ணம் அவுஸ்திரேலிய அணியின் வசமாகியிருக்கின்றது. மார்ஷின் அதிரடி, வோர்ணரின் மறுவருகை, ஹேசில்வூட்டின் கட்டுக்கோப்பான பந்துவீச்சு என்று ஏராளம் நல்லவிடயங்கள் அவுஸ்திரேலிய அணிக்குள் நடந்தாலும் அனைத்தையும் ஓரங்கட்டி தன் கதையை - வரலாற்றை உரத்து ஒலிக்க வைத்துக்கொண்டிருக்கின்றார் அவுஸ்திரேலிய அணியின் இலக்குக் காப்பாளரும் மத்திய வரிசை வீரருமான மத்தியூ வேட்.

மத்தியூ வேட்டின் கதை சாதாரண ஒரு வீரரின் கதையைப் போன்றதல்ல. பத்துடன் பதினொன்றாக இருந்துவிட்டுப்போகும் வீரரும் அவரல்ல. உண்மையில் அவர் மிகப்பெரிய நிஜ வாழ்க்கைப் போராளி.

சிறுவயதுமுதல் குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த வேட், அதிலிருந்து மீண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் போராட்டங்களும் ஏராளம். இவ்வாறு கடும் போராட்டத்துக்கு மத்தியில் அதிலிருந்து மீண்ட வேட், கிரிக்கெட்டை தன் கனவாகக் கொண்டு தனக்கான பாதையைத் தேர்ந்தெடுத்தார். அப்போதுதான் அவருக்கு பேரிடியொன்று காத்திருந்தது. புற்றுநோயைப் போன்ற மற்றொரு பெரிய நோய்க்கு அவர் ஆட்பட்டிருந்தார். அதுதான் பார்வைக் குறைபாடு. சில காலநிலைகளில் வேட்டால் சில நிறங்களைப் பார்க்க முடியாது. இது காலப்போக்கில் இவருடைய கிரிக்கெட் வாழ்க்கையில் தடங்கல்களை ஏற்படுத்தினாலும், அதிலிருந்து மீண்டு , மீண்டும் ஆஸ்திரேலிய அணியில் தன் இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார்.

இதன்போதுதான் வேட்டுக்கு மற்றுமொரு பெருந்துயர் இடியாக இறங்கியது,அது அவருடைய நெருங்கிய நண்பனான பிலிப் ஹியூக்ஸின் இறப்பு. பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு இறந்து போன பிலிப் ஹியூக்ஸின் உருவப்படத்தை தன் கைகளில் இப்போதும் பச்சை குத்திவைத்துள்ளார் வேட். இது அவருக்கும் ஹியூக்ஸுக்கும் இடையிலான பிணைப்பை கட்டியம் செய்கின்றது. இதன் பின்னர் மனமுடைந்த வேட், பல தடவைகள் அணிக்குள் எடுக்கப்படுவதும் புறக்கணிக்கப்படுவதுமாக இருந்தார். வாழ்வே போராட்டமாகிப் போன மத்தியூ வேட், இவற்றிலிருந்து மீண்டுவந்து இன்று ஆஸ்திரேலிய அணிக்கு உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொடுத்துள்ளார்.

இந்தத் தொடரில் வோர்ணர் தொடராட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும், வேட் அரையிறுதியில் வெளிப்படுத்திய அசுர அதிரடி இல்லாவிட்டால் ஆஸ்திரேலிய அணி இறுதிக்குள் செல்வதே இயலாத காரியமாகியிருக்கும். வேட் வென்றுவிட்டான்.

# ஆர்தர் என்னும் அற்புதன்!

ஒரு தலைமைப் பயிற்சியாளராக இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு என்ன மாற்றம் தேவையோ அதைச் செவ்வனே நிறைவேற்றி தன் கடமையை முழுமையாக முடித்த திருப்தியுடனும், வெற்றியுடனும் விடைபெறுகின்றார் மிக்கி ஆர்தர்.

மிக்கி ஆர்தர் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றபோது அவருக்கு இருந்த சவால் மிகப்பெரியது. உள்நாட்டில் உள்ள தெரிவாளர்களுக்கே தம் அணியின் வீரர்களைப் பற்றி சரிவரத் தெரியாதபோது தென்னாபிரிக்கரான ஆர்தருக்கு என்ன தெரிந்துவிடப்போகின்றது? ஒப்



படைக்கப்பட்ட அணிக்குப் பயிற்சி வழங்குவது அவருக்கான வேலையாக இருக்கவில்லை. மாறாக ஒரு அணியை இனங்கண்டு அதைக் கட்டமைப்பதுதான் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட பெரும் பொறுப்பு.

மொழிப் பிரச்சினை, சர்வதேச அறிமுகமில்லாத வீரர்கள் இவ்வாறான பெரியதொரு சவாலை எவ்வாறு ஆர்தர் சமாளிப்பார் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆர்தர் இந்தச் சவாலில் தோல்வியடைந்து விடுவார் என்றே பலரும் கருதினர். ஆனால், இலங்கை அணிக்கு சரியானதொரு பதினொருவர் கொண்ட குழாமைக் கட்டமைப்பதில் ஆர்தர் வெற்றிபெற்றுள்ளார். அதிலும் அசலன்க, ஹசரன்க, தீக்சன, பதும் நிஷங்க, சாமிக கருணாரத்ன ஆகிய வீரர்கள் ஆர்தரின் வளர்ப்புகள். இலங்கை அணி இன்று இமாலயப் பலம் பெற்றுவிடவில்லை.

ஆனால், ஒரு அடிப்படைக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 9 மாதங்களில் 6 தடவைகள் தலைமைத்துவம் மாற்றப்பட்ட காலத்தில் இருந்து மீண்டு விட்டது. இன்று ஓர் அடிப்படைக் கட்டமைப்பும் அத்திபாரமும் இலங்கை அணிக்குள் வலுவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஆர்தரை எவ்வளவு பாராட்டினாலும் அது தகும்.

# சீனத்தின் முதுகெலும்பு ஜின் பிங்

ஆர்.பிரகாஷ்



சீனாவின் அதிபராக மூன்றாவது முறையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் ஜின் பிங். சீன கம்யூனிஸ்ட் கட்சி நிகழ்த்திய வரலாற்று மாற்றமாக இந்த நகர்வு பார்க்கப்படுகின்றது. அத்துடன் சீனாவின் அதிபர் பதவியில் ஜின் பிங் தொடர்வதற்கு இந்த மாற்றம் பெரும் வழிவகைகளை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சீனாவின் அதிபராக ஜின் பிங் தெரிவுசெய்யப்பட்டார். கடந்த பத்து ஆண்டுகளில் சீனா கண்ட அபரிமிதமான வளர்ச்சிக்கு ஜின் பிங்கின் சிந்தனைகளும் அவர் வழங்கிய நேரடி, மறைமுக பங்களிப்பும் மிகக்கூடுதலானது. அமெரிக்காவுடனும், ஐரோப்பிய ஒன்றியத்துடனும் சீனாவுக்கு இயல்பாகவே இருந்த பிரச்சினைகளை - சவால்களை ஜின் பிங் திறம்படவே கையாண்டார். இன்னும் சொல்லப்போனால் சீனாவுக்கு எதிராக மேற்குறித்த தரப்புகள் முன்னெடுத்த நகர்வுகளை ஜின் பிங் தகர்த்தெறிந்தார். பொருளாதாரத்திலும் இறைமையிலும் சீனாவைத் தலைநிமிர வைத்தார்.

இவற்றை விட கடந்த 8 ஆண்டுகளில் ஜின் பிங் சந்தித்த சவால்களும் ஏற்படுத்திய திட்டங்களும் கனதியானவை. பட்டுப்பாதைத் திட்டம், தென்சீனக் கடலில் செயற்கைத் தீவை அமைத்தமை, அங்கு இராணுவத் தளபாடங்களை நிறுவியமை, தாய்வானை சீனாவுடன் இணைப்பதற்கு எடுக்கும் முயற்சிகள், இந்தியாவுடன் எல்லைப் பிரச்சினை, ஹொங்கொங் பகுதியை சீனாவுடன் இணைத்தமை, அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் என்று இந்தப் பட்டியல் மிக நீளமானது. இதன் ஆகப்பிந்திய வரவாக தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்ற பக்கபலமாக நிற்கின்றமையையும் குறிப்பிடலாம்.

இதில் பெரும்பாலானவை அமெரிக்காவுடனான மோதல். உலக வல்லரசான அமெரிக்காவைப் பகைத்துக் கொண்டு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தையும் ஏறுமுகத்தில் கொண்டுசெல்வதெல்லாம் கனவாகவே இருந்த நகர்வுகள். அமெரிக்காவுக்கு எதிரான ஆயுதமற்ற போரில் இவற்றை மெய்ப்பிதம் செய்த பெருமை ஜின் பிங் ஒருவரையே சாரும்.

ஒரு நாட்டின் இருதரப்பு உறவையும், ஐக்கிய நாடுகள் சபை ஒரு நாட்டுக்குக் கொடுக்கின்ற ஆதரவு மற்றும் எதிர்ப்பையும் தீர்மானிக்கும் சக்தியாக இதுகாலும் அமெரிக்காதான் இருந்துள்ளது. இதற்கு உதாரணங்கள் பல உள்ளன. இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்குகின்ற ஆதரவு காரணமாக ஐக்கிய நாடுகள் சபையால் பலஸ்தீனத்துக்கு நீதிதேட இயலாதிருக்கிறமை இந்த விடயத்துக்கான ஆகப்பெரிய எடுத்துக்காட்டு. தற்போது இந்த இருதரப்பு உறவையும் ஐக்கிய நாடுகள் சபையின் நகர்வையும் சீனா தீர்மானித்துக் கொண்டிருக்கின்றது. வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க இயலாமல் இருப்பதற்கு முட்டுக்கட்டை சீனாதான், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச சமூகத்தால் நீதிதேட முடியாமல் இருப்பதற்குக் காரணமும் சீனாதான். ஆக, இன்று அமெரிக்காவைப் போன்று சீனாவும் உலகப்பொலிஸாக மாறியுள்ளது என்றால் அதை மறுத்துரைப்பதற்கில்லை.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக தற்போது உலகப் பணக்கார நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவைப் பின்தள்ளி சீனா முதலிடம் பிடித்துள்ளது. இத்தனைக்கும் முதுகெலும்பாக ஜின் பிங் இருக்கின்றார் என்றால் அதை மறுத்துரைக்க முடியாது. இதனால்தான் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவுநர் மாவோவுக்குப் பின்னர் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக சீனாவை ஆட்சி செய்வதற்குரிய அங்கீகாரத்தை ஜின் பிங்குக்கு கொடுக்கின்றது சீன கம்யூனிஸ்ட் கட்சி. தற்போது 68 வயதாகும் ஜின் பிங், இறக்கும்வரை அதிபராகத் தொடர்ந்தாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

# சில போராளிகளின் குருதிச் சுவடுகள்

### லெப். கேணல் சூட்டி
**வீரச்சாவு: 14.07.1991**

ஆனையிறவுப் பெருஞ்சமரின் (1991) ஆரம்பம். வெற்றிலைக்கேணிக் கரையோரம் உதவிக்குத் தரையிறக்கப்படும் சிங்களப்படையை எதிர் கொள்ளவென நிறுத்தப்பட்டிருந்த புலிகளின் சேனைக்குத் தளபதியாக, சூட்டி நியமிக்கப்பட்டிருந்தான். சூட்டி ஓய்வில்லாமல் இயங்கிக்கொண்டிருந்தான். இரவு பகலாக எங்கள் அரண்களைச் சுற்றி சூட்டி நடந்துகொண்டிருப்பான்.

" எனது சடலத்தின் மீது தான் எதிரி முன்னேறுவான்" என்று சொன்னான், 14.07. 1991 காலை.

அதிகமான நம்பிக்கையோடு அலட்சியமாக நின்ற ஒரு குழுத்தலைவனைக் கூப்பிட்டு சூட்டி சொன்னான்

" சண்டையின் முடிவில் நாங்கள் சோகத்தோடு செல்லலாம். ஆனால் அவமானத்தோடு திரும்பக்கூடாது."

அன்று மாலை தரையிறங்குவதற்கு எதிரி இரண்டு தடவைகள் எத்தனித்தான்,

முதற்தடவை விரட்டியடிக்கப்பட்டவன், இரண்டாவது தடவை குண்டுமழை பொழிந்து வந்து கரையேறினான்.

தனது அரணில் அசையாது நின்று போராடிய சூட்டியின் சடலத்தைக் கடந்து தான், எதிரி முன்னேறினான்

இப்போது ஆனையிறவுச் சமர் முடிந்துவிட்டது.

சூட்டி அண்ணன் சொன்னது போல, நாங்கள் சோகத்தோடு மட்டுமே திரும்பிவந்தோம்: அவமானத்தோடு அல்ல!

### லெப். சாம்
**வீரச்சாவு: 06.10.1985**

அது ஒரு முற்பகல்வேளை,

முகாமில் சாம் தனது கைத்துப்பாக்கியைத் துப்புரவு செய்து கொண்டிருந்தான்.

அருகில் சில தோழர்கள் ஏதேதோ வேலைகளில் மூழ்கிப்போயிருந்தார்கள். என்ன நினைத்தானோ தெரியவில்லை, திடீரென்று சாம் சொன்னான்

"தம்பிமார், எங்கட எந்த ஒரு பொருளும் ஆமியிட்டை சிக்கக் கூடாது; போகவிடக்கூடாது."

அருகிலிருந்த நண்பன் சிரித்துக்கொண்டே கேட்டான், ' நீங்க ஆமியிட்ட அகப்படுற சந்தர்ப்பம் வந்திட்டா, இந்த றீட்டாவை (கைத்துப்பாக்கியை) என்ன செய்வீங்க அண்ணை ........"

குனிந்திருந்து துடைத்துக்கொண்டிருந்தவன் நிறுத்திவிட்டு, தலையை நிமிர்த்திப் பார்த்துச் சொன்னான்

"ஆமி இதை முழுதாக எடுக்கேலாது. அப்படி ஒரு நிலை வந்தால், றீட்டாவை அடித்து உடைத்துவிட்டுத்தான் நான் சாவன் தம்பி..."

அன்றைய நாளின் பிற்பகல் வேளை.

ஏதோ அலுவலாக, மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு சாம் புறப்பட்டான்.

எதிர்பாராதவிதமாக, நாயாற்றுவெளியில் பதுங்கியிருந்த இராணுவத்தினரிடம் சாம் சிக்க நேர்ந்தது. அவர்கள் வளைத்துத் தாக்க, மோட் டார் சைக்கிளைப் போட்டுவிட்டு சாம் தப்பி ஓட முயன்றான். நூற்றுக்கணக்கில் சுற்றிவளைத்துத் துரத்தும் படையினரை நோக்கித் தனது கைத்துப்பாக்கியால் சுட்டபடி சாம் வெளியேற முயன்றான்.

இயலுமானவரை விரைந்து ஓடினான். எவ்வளவு தூரம் தான் ஓடமுடியும்..... ? கைத்துப்பாக்கியின் கடைசி ரவையும் சுடப்பட்டுவிட இராணுவத்தினர் அவனைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர். அதன் பின் நடந்தது யாருக்கும் தெரியாது.

ஆனால், காலையில் தான் சொன்னதையே மாலையில் அவன் அப்படியே செய்திருந்ததை, மறுநாள் 'இரவு' ரூபவாஹினி' ஒளிபரப்பிய போது அறிந்தோம்.

குப்பி கடித்த வாயோடு சாம் விழுந்து கிடந்ததையும், கல்லில் அடித்து உடைக்கப்பட்ட 'றீட்டா' அருகில் நொருங்கிக் கிடந்ததையும் கண்டோம்.

### மேஜர் ரவிசங்கர்
**வீரச்சாவு: 09.06.1992**

சறுநாவற்குளம் படை முகாமிலிருந்து 300 யார் தூரத்திலுள்ள பிரதான வீதிச் சந்தி.

எப்போதும் இராணுவத்தினரின் அணி ஒன்று அங்கு காவலுக்காகப் பதுங்கி இருப்பது வழமை. முன்னிலையில் ஒரு ஏ. கே. எல். எம். ஜியைக் கொண்டதாக, எந்தநேரமும் இரை தேடியபடி அந்த அணி காத்திருக்கும்.

இந்த இராணுவ அணியை வளைத்துத் தாக்கி அழித்துவிடுவதற்கு முடிவு செய்யப்பட் டது. வேவு பார்த்து திட்டமும் தயாரிக்கப்பட்டது. ரவிசங்கர் இந்த முயற்சியில் ஓய்வின்றிச் செயற்பட்டுக்கொண்டிருந்தான்.

எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி முடிந்திருந்த போது 28.07, 1992 அன்று, எதிர்பாராதவிதமாக ஒரு துயரம் சம்பவித்துவிட்டது.

மேஜர் பாரதி உட்பட எங்களது 4 பெண் போராளிகள் இதே பாதையால் தவறுதலாகப் பிரவேசித்ததில், அதே இராணுவ அணியின் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவடைந்து விட்ட சோகம் நிகழ்ந்தது.

ரவிசங்கர் துடித்துப்போனான். 'எல்லாம் தயார்' என்றாகியிருந்தசமயத்தில் இப்படியாகி விட்டதே என்று வேதனைப்பட்டான்.

அந்த ஏ. கே. எல். எம். ஜி காரன்தான் எங்கட பெண்போராளிகளைப் போட்டிருப்பான்.... முன்னுக்கிருக்கிற அவன்ர 'ரேஞ்சு' க்குள்ள தான் அவையள் சிக்கியிருக்கினம்... என்று தோழர்களிடம் பொருமினான்,

நான் செத்தாலும் பரவாயில்லை ...... இந்தச் சண்டையில் அந்த ஏ. கே. எல். எம். ஜி காரனை சாகடித்து, அந்த ஏ. கே. எல். எம். ஜியை எடுத்தே தீருவன்... என்று, தன் இலக்கில் இன்னும் உறுதியாகினான்,

இது நடந்து ஒன்பதாவது இரவு அந்த இராணுவ அணி தாக்கப்பட்டது. புலிகளின் ஆவேசமான பாய்ச்சல், அனல் விழிகளோடு சண்டையில் முன்னேறிய ரவிசங்கர் அந்த இராணுவத்தினனை வீழ்த்தி எல். எம். ஜியை எடுத்துச் சக போராளிகளிடம் கொடுத்தான், தன் நோக்கத்தை அடைந்த திருப்தி அவனது முகத்தில் பளிச்சிட்டது. அனால் அடுத்த நொடி... எதிரியின் ரவைகளில் சில அவனைத் துளைத்துச்சென்றன.

சண்டை முடிந்த பின்னர் வேறு ஆயுதங்களுடன் இந்த ஏ. கே. எல். எம். ஜியையும் ரவிசங்கரின் உடலையும், நெஞ்சத்தில் அவனது நினைவையும் சுமந்து கொண்டு நாங்கள் வந்தோம்.

### கப்டன் திலகா
**வீரச்சாவு: 08.08.1991**

ஆனையிறவுப் பெருஞ்சமரின் இறுதிக் கட்ட ம். கட்டைக்காட்டிலிருந்து அங்குலமங்குலமாக நகர்ந்த எதிரி, அன்று அகிலன் வெட்டையிலிருந்து தாக்குதலை ஆரம்பித்தான்.

எதிர்கொண்டு மோதிய புலிகளின் சேனையில், மகளிர் பிரிவின் ஒரு அணிக்குப் பொறுப்பாக இருந்து சண்டையை வழி நடத்தினாள் திலகா.

" செத்துப்போன ஒவ்வொரு போராளியயும் நினைச்சு நினைச்சு அடிபடுங்கோ " இப்படிச் சொல்லிச் சொல்லியே களத்தை நெறிப்படுத்தினாள்.

தரையிறங்கிய எதிரி அகோரமாகத் தாக்கியபடி முன்னேறினான்.

திடீரென எதிரியின் எல். எம். ஜி. தாக்குதலொன்று திலகாவைப் படுகாயப்படுத்தியது.

களத்திலிருந்து வெளியேற்றப்படும் பொழுதும், திலகா கத்தினாள் " செத்துப்போன ஒவ்வொரு போராளியையும் நினைச்சு நினைச்சு அடிபடுங்கோ."

விரைந்து செல்லும் அம்புலன்ஸ் வண்டியொன்றினுள் சுயநினைவற்றுப் படுத்திருக்கும் போதும், திரும்பத் திரும்ப அவன் அதையே அரைகுறையாகச் சொன்னாள்,

மருத்துவமனைக் கட்டிலில் மயக்கமுற்ற நிலையில், மெல்லமெல்ல அவளது மூச்சு நின்று கொண்டிருக்கும்போதும், அவனது வாய் அதனையே உச்சரித்தது.

"செத்துப்போன... ஒவ்வொரு போராளியையும் நினைக்க நினைச்சு அடிபடுங்கோ.."

மீள்பிரசுரம்: ஈழநாதம்

**(1989.11.27 அன்று முதன்முறையாக நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் புலிகளின் தலைவர் பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே இது.அன்று முதல் பிரபாகரன் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)**

# தமிழினத்தை தலைநிமிரச் செய்தவர்கள்!



இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகவும் பாதுகாப்புக்காகவும் போரிட்ட படை வீரர்களின், நினைவாக இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம்.

வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம். அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது விடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக்கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஒரு நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம்.

அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப்போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும்.

ஆம், எமது வீரர்களை நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது, எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான், அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியபாதையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ் நாளில் முக்கியமான நாளாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

> **"வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப்போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவுகூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம்.**

## மாவீரர் தினத்தில்
# அலங்காரங்களும் நிறங்களும்



சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்புகரும் புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம். வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிக ளைப் பாவித்தல் வேண்டும். மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும்சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று. இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

**கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்**

**ஆரம்ப நிகழ்வுகள்**

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

* எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது
* அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

**தவிர்க்கப்பட வேண்டியவை**

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்தது மாகும்.

காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும். இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

எமக்குரிய இந்த உயரிய நிகழ்வைதத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்பு அவசியம்.

# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்பட வேண்டும்?

கதிர்






**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக் கப் போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப் பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண் டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

அன்புக்குரிய எமது பெற்றோரே,

மக்களே! எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களதுபிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக பொக்கிசமாக இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.



இது புறமிருக்க, எமது சகதோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம். என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம். எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காது விட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவி செய்வோம் அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம். நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் "தகனம் செய்வது" தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானவை. ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளி களுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர்அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி,ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.



# மாவீரர்

## துயிலும் இல்லங்கள் (அமைந்திருந்த இடங்கள்)





**கிளிநொச்சி**
கனகபுரம்
முழங்காவில்

**யாழ்ப்பாணம்**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எல்லங்குளம்
உடுத்துறை

**முல்லைத்தீவு**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னிவிளான்குளம்
விசுவமடு

**அம்பாறை**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்



**வவுனியா**
ஈச்சங்குளம்

**மட்டக்களப்பு**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**திருகோணமலை**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்

'காமிக்ஸ்' தொடர் 01

## அரிமாநேத்ரன் துப்பறியும் AK67






# நமக்கொரு வெள்ளை இடம்

○ ம.தர்ஷினி

வானொலி, கைத்தொலைபேசி போன்றவற்றுக்கு அலைவரிசை ஒதுக்கும் போது, ஒரு நிறுவனத்துக் கென ஒதுக்கப்பட்ட அலைக்கற்றைக்கான வெளி அனைத்தையும் அவர்கள் பயன் படுத்தக்கூடாது. ஒரு அலைவரிசைக்கும் அடுத்த அலைவரிசைக்கும் இடையில் கொஞ்சம் வெற்றிடம் விடப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒலிபரப்பில் இரண்டு அடுத்தடுத்த நிலையங்களின் ஒலிகளுக்கு இடையில் சிக்குண்டு தெளிவின்மை ஏற்படும் அபாயம் உள்ளது. இப்படி உபயோகப்படுத்தப்படாமல் விட்டு விடும் பகுதியை 'வெள்ளை இடம்' (white sPace) என்பார்கள்.

புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும், வார்த்தைகளையும், வாக்கியங்களையும் குழப்பமின்றிப் படிக்க வச தியாக வெள்ளை இடம் சுற்றிலும் விடப்பட்டிருக்க வேண்டும். நமக்குள்ளும் அப்படி ஒரு வெள்ளை இடத்தை வைத்திருக்கிறோமா?

பருத்தித்துறையில் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் வீதியோரத்தில் எனக்குப் பிடித்த மான ஒரு காட்சி. நான் வீதியில் பயணிக்கும் போது ஹோஒம் டெலிவரி (home delivery) என்று எழுதப்பட்ட ஒரு மூன்று சக்கர வாகனத்தை தேடுவேன். கொரோனாக் காலத்தில் ஏதோ ஒரு பெரிய கடையிலிருந்து சாமான்களை வீடுகளுக்கு விநியோகிப்பதற்காக அந்த வாகனத்தை வைத்திருக்கலாம். ஆனால் ஒரு நாள் கூட அதில் நான் பொருட்களைப் பார்த்தது கிடையாது. சிறிய கதவு பொருத்தப்பட்டிருக்கும். இந்த வாகனத் தின் பின்பகுதியில் இரண்டு சிறுமிகளைத் தான் நான் எப்போதும் பார்த்திருக்கிறேன்.

அவர்கள் இருவரும் பாடசாலைச் சீருடை அணிந்து கொண்டு, தங்கள் மடியின் மீது புத்தகங்களைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். அவர்களுக்கு இடையில் அவர்களுடைய புத்தகப்பைகள் இருக் கும். ஒரு தடவை கூட நான் அந்தச் சிறுமிகளின் முகங்களைப் பார்த்தது இல்லை. சிறிய வாகனத்தில், பிரித்த புத்தகங்களை மடியில் வைத்துக் கொண்டிருக்கும் அந்தச் சிறுமிகளைக் கண்டதும் எனக்கு பரவசமாக இருக்கும்.

புதிய ஊக்கம் பிறக்கும். அந்த இரண்டு சிறுமிகளையும் எனக்காக வெள்ளை இடத்தை ஏற்படுத்தித் தரும் தேவதைகள் என்று நினைத்துக் கொள்வேன். அதே தெருவோரத்தில், பல நிறுவனங்களின் பேருந்துகள் சலிப்புடன் காணப்பட்ட பணியாளர்களைச் சுமந்து கொண்டு மேலும் வேகமாகப் பயணித்துக் கொண்டிருப் பதையும் பார்த்திருக்கிறேன். பணியாளர்கள் ஏனோமிகுந்த களைப்புடன் காணப்படுவார்கள். சிலர் உறங்கிக் கொண்டும் இன்னும் சிலர் தங்கள் காதுகளில் 'இயர்போன்களை' பொருத்திக் கொண்டும் உற்சாகம் இல்லா மல் காணப்படுவார்கள். பரபரப்பான அன்றாட வாழ்வில், ஒரு ரயில் பயணித்திலோ அல்லது வாடிக்கையா ளரின் அலுவலகத்தில் அவருக்காகக் காத்திருக்கும் அறையிலோ, அல்லது நீண்ட விமானப் பயணங்களிலோ



**நமக்கான வெள்ளை இடங்கள் மிக அதிகள வில் கிடைத்தாலும் நாம் அவற்றைக் கவனிக்காமல், சக்தி வாய்ந்த வாய்ப்புக் களை இழந்து விடுகிறோம்.**

தமக்கான வெள்ளை இடம் கிடைக்கும். நமக்கான வெள்ளை இடங்கள் மிக அதிகளவில் கிடைத்தாலும் நாம் அவற்றைக் கவனிக்காமல், சக்தி வாய்ந்த வாய்ப்புக்களை இழந்து விடுகிறோம். கிடைக்கும் நேரத்திலெல்லாம் வேலை களைத் திணித்துக் கொண்டு அவதிப்பட வேண்டாம் என்பது தான் சொல்வது தயவுடன், மனத்தை அமைதிப்படுத்தி, செய்ய வேண்டியவற்றைச் சரியாகத் திட்டமிட்டு, அதன்படி செய்ய வேண் டும். எங்களுக்கான 'வெள்ளை 'இடத்தைக் கண்டு கொள்வோம்.